# கிராம நலம்

பிப்ரவரி 1965

ஞ்சால சிங்கம்,

தியாகச் செம்மல்,

சமுதாயத் தொண்டர்

**லாலா லஜபதிராய்**

நூற்றண்டு விழா


28 - 1 - '65ல்

பாரத நாடெங்கும்

கொண்டாடப்படுகிறது













## லாலா லஜபதி ராய் நூற்ருண்டு விழா

வாழ்க்கை வரலாறு நூல் வெளியீ

வீர விருதுகள்....

வீரமாசக்தி' நாடகம்

# கிராம நலம்

மாடி 10 | பிப்ரவரி 1965 | படி 5

## பாஞ்சால சிங்கத்திற்கு தமிழ்நாட்டின் அஞ்சலி

"என்னை நினைந்தும் இரங்குவரோ? அல்லாது
பின்னைத் துயர்களில், என் பேரும் மறந்திட்டாரோ?"

என்று நாடு கடத்தப்பட்டபோது, லாலா லஜபதிராய் நெஞ்சம் புழுங்கியதை, நமது பாரதியார் பாட்டாக உருவாக்கி, நம் உள்ளங்களை உருகவைத்தார். லஜபதியை, பாஞ்சால சிங்கத்தை, பாரத மக்கள் மறக்கவில்லை; மறக்கமாட்டார்கள். நன்றியறிதலோடு, பாரத மக்கள் அவருக்கு வீரவணக்கம் செலுத்தி, நாடெங்கும் இவ்வாண்டு அவருடைய பிறந்த நாளை, நூறுண்டு விழாவாகக் கொண்டாடினார்கள்.

1965-ம் வருடம் ஜனவரி மாதம் 28-ம் தேதியில் சென்னை ராஜாஜி மண்டபத்தில், நகர மக்கள் குழுவின் சார்பில், லாலா லஜபதிராய் அவர்களின் நூற்றாண்டு விழா, வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தமிழ்நாட்டு கவர்னர் திரு. பி. சந்திரா ரெட்டி, முதல் அமைச்சர் திரு. எம். பக்தவத்ஸலம், மற்றும் தமிழ் நாட்டு பிரமுகர்கள் பலரும் இவ்விழாவில் கலந்து கொண்டார்கள். விழாக் கமிட்டியின் சார்பில், அனைவரையும் சென்னை ஷெரீப் திரு. டி. எஸ். நாராயணசாமி வரவேற்றார். தமிழ் நாடு ஆக்டிங் கவர்னர் திரு. பி. சந்திரா ரெட்டி பேசுகையில், லாலா லஜபதிராய் அன்று எந்த வேகத்தோடு சேவை செய்தாரோ, அந்த உணர்வு இன்று வேகமாக வளர வேண்டும் என்று கூறினார்.

### "வீர காவியம்"

(தமிழ் முனிவர் திரு வி. க. வின் தலையங்கம் 'நவசக்தி' என்னும் தமது வார இதழில் 21-11-1928-ல் எழுதியது.)

"இமயமுஞ் சாய்ந்ததோ? சிந்துவும் வரண்டதோ?" என்று அலறுகிறோம்; அழுகிறோம்; அலமருகிறோம். தலைவருள் இமயமாய், பக்தருள் சிந்துவாய் விளங்கிய நம் லஜபதியும், நம்மை விட்டுப் பிரிந்தார்.

பாரத மக்களே! நமது ஆருயிர் லாலா லஜபதிராய் எங்ஙனம் மாண்டார்? உன்னி உருகுங்கள். நோய்வாய்ப்பட்டா? படுக்கையில் பன்னாள் புரண்டா? ஆ! ஆ! நெஞ்சம் துடிக்கிறது.

'சைமன்' குழு லாகூர் போந்தபோது, உரிமைப் போர்க்களத்தில் புறமுதுகிட்டு ஓடாமல், போலீஸ் அதிகாரியின் தடியடியால் மார்பில் காயந் தாங்கி, வீர கர்ச்சனையுடன் நமது சிங்க ஏறு, வீர சுவர்க்கம் புகுந்தது.

பாஞ்சால சிங்கத்தை—பாரத வீரத்தை—அஞ்சா நெஞ்சை—ஆண் தகைமையை—தியாக வள்ளலை—கல்விக் கரசை—லஜபதியை—இனி என்றே காண்போம்!

அவர் வீரத்தில் பிறந்து, வீரத்தில் வளர்ந்து வீரத்தில் உயிர் நீத்தார். லஜபதியின் வீர வாழ்வு, வீர உலகிற்கு ஓர் இலக்கியமாகப் பொலிகின்றது.

லஜபதியின் வீர மொழிகளும், வீரச் செயல்களும் நாட்டில் மலையெனவும் நதியெனவும் நிற்கின்றன! ஓடுகின்றன!

லஜபதியின் பருவுடல் மறைந்தாலும், அவரது சிங்க நோக்கும், தியாகமும் வீரமும் அருவமாக நாடு முழுவதும் பரந்து வீறிடுகின்றன!"

(திரு. வி. கல்யாணசுந்தரனாரின் 'தமிழ்ச்சோலை' என்ற நூலிலிருந்து சில பகுதிகள்)

இந்த விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக, கொடி காத்த திருப்பூர் குமரன், வீரப்பெருமகன் வாஞ்சிநாதன் ஆகியோரின் தியாகங்களுக்கு வீர விருதுகள் அளிக்கப்பட்டன. தமிழ் நாடு அரசாங்கத்தின் சார்பில், திரு. ஆர். குழந்தைவேலு, திரு. பெல்லியப்பா ஆகியோர் வீரவணக்க உரையையும், அறிவிப்புகளையும் வாசித்தனர். (விவரம் 3, 5-ம் பக்கங்கள் பார்க்க) குமரனின் மனைவியார் திருமதி ராமாயம்மாள் சார்பாக குமரனின் சகோதரியார் திருமதி நல்லம்மாள், வாஞ்சிநாதனின் மனைவியார் திருமதி பொன்னம்மாள் ஆகியோருக்கு வீரவிருதுகளை, தமிழ்நாடு முதலமைச்சர் திரு பக்தவத்ஸலம் அளித்தார்.

இச்சிறப்பு விழாவில், பஞ்சாப் சங்கத்தினரின் சார்பில் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளுடன் திரு எஸ். டி. சுந்தரம் எழுதிய "வீரமாசக்தி" என்ற நாடகம் திரு சகஸ்ரநாமம் அவர்களின் 'சேவா ஸ்டேஜ்' குழுவினரால் நடிக்கப்பட்டது. திரு. வி. ஆர். ராதாகிருஷ்ணன் எழுதிய 'லாலா லஜபதிராய் வரலாற்று நூலும்' இந்த விழாவில் வெளியிடப்பட்டது.

# “சுயநல மற்ற கட்டுப்பாடுடனும்,

# திடச் சித்தத்துடனும் பாடுபடுவோம்”

**[ராஷ்டிரபதியின் குடியரசு தினச்செய்தி]**

கடந்த ஆண்டு, நம் எல்லோருக்கும் ஒரு சோதனைக் காலமாகவே இருந்து வந்திருக்கிறது. நமது நாடு சுதந்திர நாடாக மறுபிறப்பு எடுத்த நாளிலிருந்தே, இந்த நாட்டின் வாழ்வுப் பாதைக்கு வழிகாட்டியாக விளங்கிய மாபெருந்தலைவர், இன்று நம்மிடையேயில்லை. ஒற்றுமையுள்ள, முன்னேறும் வளமுள்ள ஜனநாயக நாடாக, இந்தியா விளங்கவேண்டுமென்ற காட்சியை மனதில் உருவகப்படுத்தி, அந்த லட்சியத்தையே, நமது பொறுப்பென அவர், நமக்கு விட்டுச்சென்றிருக்கிறார். அவரைப் பிரிந்து ஏங்கி நிற்கும் நமக்கு, இந்த லட்சியத்தை அடைவதில், அவர் நடத்திக் காட்டிய, அர்ப்பணித்த சேவை வாழ்க்கையைவிட, ஆதர்சமளிக்கும் எடுத்துக்காட்டு, வேறு எதுவும் கிடையாது.

### ஒற்றுமை உணர்ச்சியை வளர்ப்போம்

பிரதேசம், மொழி, மதம், ஜாதி ஆகிய பாகுபாடுகளின் விளைவாக நம்மிடையே பிரிவினையை உண்டாக்கும் பல்வேறு தீய பிரிவினைச் சக்திகள், இன்றும் நம்மிடையேயிருப்பது, நம்முடைய துரதிர்ஷ்டம்தான். தேசீய ஒருமைப்பாடு, தேசீய பொதுநலன் என்ற பொதுக் கோட்பாட்டை மனத்தில் நிலைநிறுத்தி, தீய சக்திகள் மேலோங்காவண்ணம் கட்டுப்படுத்தி, ஒற்றுமை உணர்ச்சியை நாம் நிலை நிறுத்தி, வளம் பெறச் செய்யவேண்டியது, மிகவும் அவசியம்.

நமது மக்களாட்சி நிலைபெற்றுத் தொடர்ந்து செயல்பட வேண்டுமானால், மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது மிகவும் அவசியமாகும். அத்துடன் வருமானமும் வாழ்க்கையில் உயர்வடைவதற்கான சந்தர்ப்பங்களும் நியாயமான முறையில் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டியதும், அத்தியாவசியம். மக்களை வறுமையினின்றும் விடுவிப்பதற்கு, பொருளாதார அபிவிருத்தித் திட்டம் என்ற முறையையே நாம் சாதனமாக கொண்டுள்ளோம். இத்துறையில் நமது சாதனைகள் கணிசமானதாயிருந்தபோதிலும், அவை பெருகிவரும் மக்கள் தொகையின் தேவைக்குப் போதுமானவையல்ல. தேசீய வருமானம், மெதுவாகத்தான் உயர்வடைந்துவருகிறது.

செயல்பட்டு வரும் இந்தத் திட்டக்காலத்தின் முதல் மூன்று ஆண்டுகளில் விவசாயத் துறையின் உற்பத்தி, அவ்வளவாக உயர்வடைந்துவிட்டதெனக் கூற இயலாது. விவசாய உற்பத்தி இவ்விதம் தேக்கமடைந்து நிற்பதற்கு, சீர்கேடான பருவநிலைதான், முக்கிய காரணமென்பது உண்மைதான். ஆனால், விவசாயத் துறை உத்வேகத்துடன் செயல்படும்படித் தூண்டுவதற்கு அவசியமானதும் சாத்தியமானதுமான எல்லா நடவடிக்கைகளையும், நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோமாவெனக் கேட்கத் தோன்றுகிறது. விஞ்ஞான ரீதியில் விவசாயத்தை நடத்துவதின் சாத்தியக் கூறுகளையும் அதன் அபார அனுகூலங்களையும் விவசாயிகளுக்கு உணர்த்தும் வகையில், கிராமப் புறங்களில் செயலாற்றும் நிர்வாகத் துறையினர், தொண்டாற்றியிருக்கின்றனரா? தக்க விலை நிர்ணயத் திட்டங்கள் மூலமும், நிலச் சீர்திருத்தத் திட்டங்கள் மூலமாகவும், விவசாயிகள் முழுமூச்சுடன் பாடுபடுவதற்கான சரியான பொருளாதார சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறோமாவென்பது, மற்றொரு கேள்வி. இத்தகைய கேள்விகளை நம்மை நாமே கேட்டுக் கொள்ளத்தான் வேண்டும்.

### விலைவாசி உயர்வு

உணவுப் பண்டங்களின் விலைவாசிகள் தரம், பெருமளவு உயர்வடைந்திருக்கின்றது. இதுதான் நம் மக்களில் பலரையும் பாதித்திருக்கிறது. விலைவாசிகளின் இந்த உயர்வு, பண வீக்க நிலையை உண்டாக்கக்கூடும் என்பதை நாம் உணர வேண்டும். நாட்டின் வருங்கால அபிவிருத்தி மட்டுமே, இந்தப் பண வீக்கத்தின் விளைவாக பாதிக்கப்படுமென நாம் நினைத்துவிடக்கூடாது. இன்று நிலைபெற்றுள்ள பொருளாதார சமூக அரசியல் அமைப்பிற்கே, ஊறு நேரக் கூடும். நாம் எல்லோரும், மக்களும் அரசாங்கமும் விலைவாசிகளின் தொடர்ச்சியான இந்த உயர்வுப்போக்கைத் தடுத்து நிறுத்துவதற்கு, நம்மால் ஆன யாவற்றையும்

செய்தே தீரவேண்டும். உற்பத்தியைப் பெருக்குவதே, பண வீக்கத்தை அகற்றுவதற்கான நிச்சயமானதும் நிரந்தரமானதும் ஆன உபாயமாகும். அதே சமயத்தில், நாம் கடைப்பிடித்து வரும் விநியோக முறையில் காணப்படும் சில குறைபாடுகளையும் நாம் அகற்றத்தான் வேண்டும்.

உணவுப் பிரச்னை, விலைவாசிகளின் உயர்வு ஆகியவைதான், உடனடியாகத் தீர்வு காணவேண்டிய முக்கிய காரியங்களாகும். நமது பொருளாதாரத் திட்டங்களின் குறிக்கோள்கள், இவற்றைவிடப் பரந்தவை, விரிவானவை. வறுமை, அறியாமை, பிணி, சமூக வேற்றுமைகள் ஆகியவற்றை எதிர்த்து, கடும் முயற்சியுடன் நீண்ட காலம், நாம் போராடவேண்டிவரும். ஜனநாயக அமைப்பு என்ற கட்டுக்கோப்பிற்கு உட்பட்டுச் செயல் படுவதென நாம் தீர்மானித்திருப்பதால், இப்போராட்டம் கடுமையானதாகவே இருக்கும். இதற்காக நம்முடைய மனித சக்தி யாவற்றையும், இதர உற்பத்தி சக்திகள் யாவற்றையும் ஒன்று திரட்டிப் பயன் படுத்த வேண்டிவரும்.

### பாதுகாப்புப் பிரச்னை

நமது வலிமை யாவற்றையும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக முழு மூச்சுடன் பயன்படுத்த வேண்டிய தருணத்தில், நாட்டின் உற்பத்தி சக்தியின் ஒரு பகுதியை, தேசப் பாதுகாப்பிற்காகத் திருப்பிவிடவேண்டிய நிர்ப்பந்தம் நேர்ந்தது என்பது, வருந்தத்தக்க விஷயந்தான். ஆனால் இந்த நிர்ப்பந்தத்தை நாமே வருவித்துக்கொள்ளவில்லை. தேசப் பாதுகாப்பிற்குத் தேவையான எல்லா முயற்சிகளையும், தேவைக்குத் தகுந்தபடி, எடுத்துவருகிறோம்.

## வீர வணக்கம்

வீர விருது பெறுபவர்: **திருப்பூர் குமரன் அவர்களின் சகோதரி திருமதி நல்லம்மாள்**

இந்திய விடுதலைப் போரில் காந்திய சகாப்தத்திற்குத் தமிழ்நாடு தந்த காணிக்கை திருப்பூர் குமரன். 1930-ல் அந்நியப் பொருள் பகிஷ்கார இயக்கத்தை காந்திஜி துவக்கி வைத்தார். தமிழகத்தில் சுதேசி இயக்கத்தின் நிலைக்களனாக விளங்கிய கோவை மாவட்ட திருப்பூர் நகரத்தில் ஒரு மாபெரும் ஊர்வலத்தை, மூவர்ணக் கொடி ஏந்தி, குமாரசாமி தலைமை தாங்கி நடத்தினர். இந்திய சுதந்திரத்தின் சின்னமாக விளங்கிய மூவர்ணக் கொடியைக் கைவிட்டு கலைந்து செல்லுமாறு அந்நிய ஆட்சியாளர் உத்தரவிட்டனர். மறுத்த குமரனுக்கு கிடைத்தது கணக்கற்ற அடிகள். மயங்கி விழும் நிலையிலும் கொடியின்மீது இருந்த பிடி தளரவில்லை. வாழ்வைவிட மூவர்ணக் கொடியின் கௌரவமே பெரிது என்று கருதிய குமரன், கொடியை விடாமல் மரணத்தை அரவணைத்துக் கொண்டார். அவரது பெயர் சுதந்திரப் போரில் ஈடுபட்ட ஆயிரமாயிரம் தேச பக்தர்களுக்கு சுதந்திர ஆவேசத்தை ஊட்டியது.

பாரத மக்களின் பண்பாட்டையும் தனித் தன்மையையும் நிலைநாட்ட முயன்றவர் காந்திஜி. அந்தப் பண்பாட்டின் உயிராக விளங்கிய அன்பு வழியில், அறத்தை நிலைநாட்டத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டவர் குமரன். அம்மாவீரனின் நினைவுக்கு லாலா லஜபதிராய் நூற்றாண்டு விழாவின்போது அஞ்சலி செலுத்துகிறோம். அந்த அஞ்சலியின் அறிகுறியாக, இளம் வயதிலே தன் கணவரை நாட்டுக்கு ஈந்த திருமதி ராமாயம்மாள் குமரன் அவர்களுக்கு நமது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஒருமித்த சிந்தனை, திட்டமான முறையில் செயலாற்றும் அரசாங்கம், திறமையுள்ள தூய்மையான நிர்வாகம் ஆகியவற்றை அளிப்பது என்பதுதான், அரசியல் மேதைகள் முன்னிற்கும் முக்கிய பிரச்னையாகும். ஜனநாயக அரசியல் அமைப்பை வலுப்படுத்துதல், பொருளாதார நிலையில் அபிவிருத்தி காணுதல், நாட்டின் ஒருமைப்பாட்டைப் பாதுகாத்தல் ஆகிய துறைகள் யாவற்றிலும், நமது மக்களின் எல்லாப் பகுதியினரின் ஒத்துழைப்பும் சேவையும் தேவைப்படுகிறது. அரசாங்க நிர்வாகம், அரசியல் கட்சிகள், விவசாயிகள், மாணவர்கள், சமூகத்தின் இதர பகுதியினர்கள் ஆகிய எல்லோரிடமிருந்தும், கட்டுப்பாடான நடத்தையையும், கடுமையான உண்மை உழைப்பையும், நாடு எதிர்பார்க்கிறது. நம்முடைய குடியரசின் வரலாற்றில் மற்றொரு ஆண்டு துவங்கும் இத்தருணத்தில், மாபெரும் பணிகளைச் செய்வதற்கு, சுயநலமற்ற கட்டுப்பாடுடனும் திடச் சித்தத்துடனும் தீரத்துடனும், நேர்மையாகவும் பாடுபடுவோமென, உறுதி கொள்வோமாக.

---

''லாலா லஜபதிராய், மனிதர்களின் உள்ளங்களையும் தேசங்களின் போக்குகளையும் ஊடுருவிப் பார்க்கும் ஆற்றல் படைத்திருந்தார். வைரம் போன்ற உறுதியும், எந்தக் காரியத்தையும் திருந்தச் செய்யும் வல்லமையும் கொண்டு, தலை சிறந்த ராஜதந்திரியாகத் திகழ்ந்தார். பழங்கால ரிஷிபுங்கவர்கள், மாவீரர்கள், புடம் போட்டெடுத்த தியாக சிலர்களை நினைவு படுத்தும் பண்புகள் அவரிடமிருந்தன.''

—ரோமய்ன் ரோலண்ட்

## "நாட்டு வளர்ச்சிப் பணியில் ஒற்றுமையுடன் செயலாற்றுவோம்"

*[மாநிலக் கவர்னர் திரு சந்திரா ரெட்டி]*

18-1-1965-ல், தமிழ் நாடு சட்ட மன்றக் கூட்ட அவையில், தமிழ் நாடு கவர்னர் திரு சந்திரா ரெட்டி அவர்கள் ஆற்றிய பேருரையைக் கீழே காணலாம். இன்றைய பிரச்னைகளை தெளிவாக எடுத்து விளக்கி, உயர்ந்த கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் தமிழகத்து நெறியினைப் பாராட்டி, பொதுப்பணியில் பொதுவான கருத்து ஒற்றுமையும் ஒத்துழைப்பு மனப்பான்மையும் தொடர்ந்து நீடிக்க வேண்டியதின் அவசியத்தை, கவர்னர் தம் பேச்சில் வலியுறுத்தியுள்ளார்.

இராமேஸ்வரம் தீவிலும், நமது கடற்கரையின் பிற பகுதிகளிலும் புயலின் கொடுமையாலும், கடலின் பயங்கரக் கொந்தளிப்பாலும் நமக்கு ஏற்பட்ட பெரும் இன்னல்கள் நம் நெஞ்சை விட்டு இன்னும் நீங்கவில்லை. இயற்கை அன்னையின் எதிர்பாராத இச் சீற்றத்தினால், பலர் உயிரிழந்தனர். சொத்துக்கும் உடமைக்கும் ஏராளமான நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. தனுஷ்கோடி, மக்கள் வாழ்வதற்கு இயலாத ஓர் இடமாகிவிட்டது. பொங்கியெழுந்த அலைகளால் பாம்பன் பாலம் அடித்துச் செல்லப்பட்டதால், நாற்புறமும் சீறும் கடலால் சூழப் பட்ட இச் சிறு தீவிலுள்ள மக்களுக்கு உடனடியாக நிவாரண வசதிகளை அனுப்புவதும் பெரும்பாடாகிவிட்டது. இந்த விபத்துக்குள்ளான பெரும்பாலோரில் மிகவும் இரக்கத்திற்குரிய பெருந் துன்பத்தையடைந்தவர்கள் மீனவர்கள். இவர்கள் தங்கள் உறைவிடங்களை இழந்ததோடு, தங்களுக்கு வாழ்வளிக்கும் படகு, வலைகள் முதலிய கருவிகள் அனைத்தையுமே இழந்துள்ளார்கள். போக்குவரத்து வசதிகள் அனைத்தும் துண்டிக்கப்பட்ட போதிலும், இப்பெரு விபத்தின்போது, இத் தீவில் தனியே சிக்கிக்கொண்ட மக்களைக் காப்பாற்றுவதற்கும் அவர்களுடைய துன்பத்தைத் துடைப்பதற்கும் அரசாங்கம் தன்னால் இயன்ற எல்லா நடவடிக்கைகளையும் உடனே எடுத்திருக்கிறது.

### நல்ல திருப்பம்

பல இன்னல்களைப் புயல் விளைவித்தபோதிலும், நமது மாநிலத்தின் பல பகுதிகளில் நல்ல மழையையும் அது கொடுத்திருக்கிறது. முக்கியமாக, நடப்பு அறுவடைப் பருவத்தில் மாசூல் மிக நன்றாயிருக்குமென்று தெரி கிறது. தெற்கு மாவட்டங்களிலே ஒரு சில பகுதிகளில் வழக்கத்திற்கும் குறைவாக மழை பெய்துள்ள போதிலும், இந்த ஆண்டு, பொதுவாக பருவமழை நன்றாகவே பெய்திருக்கிறது. இந்த நிலையில், தற்போதைய அறுவடையால் நல்ல பலன் கிட்டுமென்று நமக்குத் தெரிகிறது. உணவு தானிய உற்பத்தி அளவில் இப்போது நாம் எதிர்ப் பார்க்கும் அபிவிருத்தியின் காரணமாக, நமது மாநிலத்தில் உணவுப் பொருள்கள் வசதியும் விலைவாசிகள் நிலையும் நல்ல திருப்பத்தைப் பெறும் என்று கருத இடமிருக்கிறது.

பருவ மழை பொய்க்காத சாதாரண ஓர் ஆண்டில், நமது மாநிலம் அரிசி உற்பத்தியில் ஓரளவுக்கு உபரி மாநிலமே என்பது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். ஆனால், வெளி மாநிலங்களில் நிலவிய அதிக விலை வாசிகளை ஒட்டி, இம் மாநிலத்திலிருந்து பெருமளவிற்கு அரிசி வெளியே சென்றதாலும், விலைக்கட்டுப்பாடு கொண்டு வரப்பட்டதை அடுத்து வழக்கமான வியாபாரம் நிறுத்தி வைக்கப்பட்டதாலும், சென்னை நகரத்திலும், மற்ற முக்கிய நகரங்களிலும் செப்டம்பர் மாத இறுதியில் சிக்கலான ஒரு நிலைமை ஏற்பட்டது. எனவே, அப்போது விற்பனைக்கு வந்துகொண்டிருந்த குறுவை நெல்லை அரசாங்கம் நேரடியாகக் கொள்முதல் செய்து கூட்டுறவுச் சங்கங் களின் மூலமாகவும், அனுமதி பெற்ற மற்றக் கடைகளின் வாயிலாகவும் வழங்கவேண்டியிருந்தது. இத் தருணத் தில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், அவர்களது பணியாளர்களும் போற்றத்தக்க முறையில் பணியாற்றினார்கள். அரசாங்கம் நியமித்து அனுப்பிய அனுபவமிக்க பெரிய அதிகாரிகளின் நேரடிப்பார்வையிலும், கண்காணிப்பிலும் அரிசியைக் கொள்முதல் செய்து பின்னர் அதைப்பற்றுக்குறைப் பகுதிகளுக்கு அனுப்பிவைத்ததால், இந்த நிலைமை விரைவில் சீராகியது. இவ்வேற்பாடுகளாலும், குடும்பக் கார்டு முறையாலும் எளிதில் துன்புறும் மக்களில் பெரும்பாலோருக்கு, விதிக்கப்பட்ட விலைகளில் உணவு தானியங்கள் வழங்குவதில் கண்கூடான அபிவிருத்தி ஏற்பட்டது.

நியாய விலைகளில் மக்களுக்குப் போதிய உணவு தானியங்கள் கிடைக்கவேண்டியதன் அவசியத்தைக் கருதி, நடப்பு அறுவடையின்போது சம்பா நெல் கொள்முதலைப் பற்றி அரசாங்கம் தனது கொள்கையை உருவாக்கியுள்ளது. உணவு தானிய வியாபாரத்தை முறைப்படுத்துவதற்காக, சுமார் 4 லட்சம் மெட்ரிக் டன் அரிசியை இருப்புக்கட்டி,

அதிலிருந்து முறையாக வழங்க ஏற்பாடு செய்வதுதான் இதற்குச் சிறந்த வழி என்று அரசாங்கம் கருதுகிறது, இதனுல் முறைப்படுத்திய விலைகளில் அரிசி தொடர்ந்து கிடைத்துவரும். இந்த அளவில் பெரும் பகுதியை, அதாவது சுமார் 2 முதல் 2½ லட்சம் மெட்ரிக் டன் அரிசி வரையில், காவிரி டெல்டாப் பகுதியிலுள்ள தஞ்சாவூர் திருச்சிராப்பள்ளி, தென் ஆர்க்காடு மாவட்டங்களிலிருந்து கொள்முதல் செய்ய வேண்டியிருக்கும். எஞ்சிய பகுதியை மற்ற மாவட்டங்களிலிருந்து கொள்முதல் செய்யவேண்டியிருக்கும். விற்பனைக்கு வரும் உபரி நெல்லில் மூன்றில் ஒரு பங்கிற்குக் குறைவாகவேதான் இந்தக் கொள்முதல் முறையின் மூலம் சேகரிக்கப்படும்.

இதனுல் தனிப்பட்ட வியாபாரிகளை இத் துறையிலிருந்தே அகற்றிவிடவேண்டுமென்பது அரசாங்கத்தின் நோக்கமல்ல. தனியார் வியாபாரத்தை ஒழுங்குபடுத்துவதற்கு ஏற்ற வசதியான நிலைமையில் அரசாங்கம் இருக்க வேண்டும் என்பதுதான் நோக்கமாகும். அரிசி ஆலைச் சொந்தக்காரர்களிடமிருந்து விதிப்புக் கொள்முதல் செய்தும் உற்பத்தியாளர்களிடமிருந்து நேரடியாக விலைக்கு வாங்கியும் முன்னர் குறிப்பிட்ட அளவிற்கு அரிசி இருப்பினை (Buffer stock) உருவாக்க எண்ணியுள்ளோம். நெல் உற்பத்தியாளர்களுக்கு, முக்கியமாகச் சிறிய உற்பத்தியாளர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் நெல் வாங்கப்படும். இக் கொள் முதல் திட்டத்தில் அரசாங்கம் ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் சேவையை எவ்வளவு அதிகமாகப் பயன்படுத்திக் கொள்ள முடியுமோ அவ்வளவு பயன்படுத்திக் கொள்ளும். மற்ற இடங்களில், மொத்த விற்பனையாளர்களின் வசதிக்குட்பட்ட தரமான கிடங்குகளின் கொள் அளவையும், அவர்களுடைய முன்னுள் வியாபார, அளவினையும், நிதி வசதியையும், முக்கியமாக அவர்களுடைய வியாபார நேர்மையையும் கருதி, அத்தகைய, மொத்த விற்பனையாளர்களை அரசாங்கம் தேர்ந்தெடுக்கும். இவர்கள் ஒவ்வொரு வரும் கொள்முதல் செய்ய வேண்டிய பகுதி ஏற்றவாறு வரையறுக்கப்பட்டு, அரசாங்கக் கணக்கில் அவர்கள் வாங்க வேண்டிய உணவு தானியங்களின் அளவும் நிர்ணயிக்கப்படும். இத் திட்டம் நன்கு நிறைவேறுவதற்காக சொந்தக் கணக்கில் உணவுத் தானியங்கள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அனுப்பப்படுவது தக்கவாறு முறைப்படுத்தப்படும். எனினும், கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இவ்வமைப்பில் நாம் சில மாறுதல்கள் செய்யவேண்டியிருக்கலாம். கன்னியாகுமரி மாவட்டத்திற்கும், கேரள மாநிலத்திற்கும் இடையே நீண்ட தூரத்திற்குப் பரந்தவெளி எல்லையாக இருப்பதால், அந்த எல்லையை மீறி உணவு தானியங்கள் செல்வதைத் தடை செய்வது கடினமாக இருக்கிறது. எனவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் உபரியாகக் கிடைக்கும் எல்லா உணவு தானியங்களையும் கொள்முதல் செய்ய வேண்டுமென்று அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. இதன் விளைவாக, இந்த மாவட்ட மக்களின் உணவு தானியத் தேவை முழுவதையும் பூர்த்திசெய்ய தகுந்த ஏற்பாடுகள் செய்வதெனவும் அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

## வீர வணக்கம்

வீர விருது பெறுபவர்: **திருமதி பொன்னம்மாள் வாஞ்சிநாதன்**

இந்திய அரசியல் வானில் காந்திஜி உதயமாவதற்கு முன்பு, உருவானவர் வாஞ்சிநாதன். சுதந்திரப் போராட்டத்தை அடக்குவதற்காக ஈவிரக்கமற்ற அடக்குமுறைகள் கையாளப்பட்ட காலம் அது. அந்த அடக்குமுறை ஆட்சிமுறையின் பிரதிநிதிகளாகிய ஆங்கில அதிகாரிகளைக் கொலை செய்வதே, தங்கள் தலையாயக் கடமை என்று தேசபக்தர்கள் கருதிய நாட்கள் அவை. அந்தச் சூழ்நிலையில் உருவாகி—வளர்ந்து—முடிவில் உயிரை வாங்கி உயிரைக் கொடுத்த தேசபக்தர் வாஞ்சிநாதன்.

1908-ம் ஆண்டில், திருநெல்வேலி கலெக்டர் ஆஷ், விடுதலைப் போராட்டத்தை ஒடுக்க ஈவிரக்கமற்ற அடக்குமுறைகளைக் கையாண்டார். அதைக் கண்டு மனம் குமுறிய தீவிர தேசபக்தர்களில் செங்கோட்டை வாஞ்சிநாதனும் ஒருவர். அந்தக் குமுறலின் எதிரொலி தான், ஆஷ் படுகொலை. 1911-ம் ஆண்டு ஜூன் மாதம், மணியாச்சி ரயில் சந்திப்பில் கலெக்டர் ஆஷைக் கொன்றுவிட்டு, தம் உயிரையும் சுதந்தரதேவிக்கு அர்ப்பணித்துக்கொண்டார் அந்தப் புரட்சி வீரர்.

இன்று, எழுபத்திரண்டு வயதைக் கடந்து நிற்கும் திருமதி பொன்னம்மாள்—மிக மிக இளம் வயதில்—அதாவது தமது ஆருவது வயதில் வாஞ்சிநாதனுக்கு மணம் முடிக்கப்பட்டார். பிள்ளைப் பருவத் திருமணம் முடிந்ததும், பத்து ஆண்டுகள் பிறந்த வீட்டிலேயே இருந்தார். பின் கணவர் வீடு சென்றுர். தாம்பத்திய வாழ்க்கை இரண்டே இரண்டு ஆண்டுகள். அதற்குப் பிறகு, தேசம் அவர் கணவரை அழைத்துக் கொண்டது.

லாலா லஜபதிராயின் நூற்றுண்டு விழாவின்போது, திரு. வாஞ்சிநாதனின் நினைவுக்கு அஞ்சலி செலுத்துகிறோம். விடுதலைப் பீடத்தில் உயிரை அர்ப்பணித்த அந்தத் தமிழ் மகனின் தியாகத்திற்கு சுதந்திர பாரதம் தலைவணங்குகிறது.



G.N.—2

## உணவு தானியக் கார்ப்பொரேஷன்

இந்திய அரசாங்கம் உணவு தானியக் கார்ப்பொரேஷன் ஒன்றை ஏற்படுத்தியிருப்பது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். இந்தக் கார்ப்பொரேஷனின் தலைமையிடம் சென்னையில் உள்ளது. இது இப்போதுதான் செயல்படத் தொடங்கியிருக்கிறது. இந்தக் கார்ப்பொரேஷன் கொள்முதல் செய்து, உணவு தானிய இருப்பை உண்டாக்குவதற்கும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் வேண்டிய நேரடிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் என்று நாம் எதிர்பார்க்கலாம். இக் கார்ப்பொரேஷன் தனது அமைப்பை நிலைப்படுத்திக் கொண்டு தன்னுடைய பொறுப்பை நிறைவேற்றுவதற்கு இன்னும் கொஞ்சம் காலமாகும். எனவே, உணவு தானியக் கார்ப்பொரேஷன், நேரடியாக உணவு தானியங்களைக் கொள்முதல் செய்ய விரும்பும் குறிப்பான சில பகுதிகள் தவிர, இந்த மாநிலத்தின் மற்றப் பகுதிகளில் மாநில அரசாங்கம் நடப்பு அறுவடைக் காலத்தில் தானாகவே உணவு தானியங்களைக் கொள்முதல் செய்ய வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறது.

## முக்கிய நோக்கம்

உணவு தானிய இருப்பு உண்டாக்குவதற்காக கொள்முதல் செய்யும் நமது கொள்கையின் ஒரு முக்கிய அம்சமாக, அரசாங்கத் துறையில் போதிய அளவுக்குக் கிடங்கு வசதிகளைக் கட்டுவதற்கான திட்டம் ஒன்றை நாம் நிறைவேற்றி வருகிறோம். மார்ச் மாத இறுதிக்குள் ஏறக்குறைய 2 லட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு உணவு தானியங்கள் சேமித்து வைப்பதற்கான கூடுதல் கிடங்கு வசதிகள் ஏற்பட்டுவிடுமென்று நம்புகிறோம்.

உணவு தானியங்கள் மக்களுக்கு நியாய விலையில் கிடைக்கவும், அதே சமயத்தில் உற்பத்தியாளருக்கும் தக்க விலை கிடைக்கவும் வகை செய்வதே இந்த ஏற்பாடுகளின் முக்கிய நோக்கமாகும். உணவு தானிய உற்பத்தியை உயர்த்துவதோடு கூடவே, மீன், பால், காய்கறி போன்ற மற்ற உணவுப் பண்டங்களின் உற்பத்தியை உயர்த்தும் முயற்சியிலும் அரசாங்கம் முழு மூச்சுடன் ஈடுபட்டு வருகிறது. உர வகைகள் மேலும் அதிகமாய்ப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. நடப்பு ஆண்டில் 3.25 லட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு அம்மோனியம் சல்பேட் உரம் பயன்படுத்தப் படுமென்று எதிர்பார்க்கலாம். பருவநிலைகள் நன்றாயிருந்து, உரங்களும் உறுதியாகக் கிடைத்து வந்தால், நடப்புத் திட்டத்தின் கூடுதல் உணவு உற்பத்தி இலக்கினை அடைவதில் இடர்ப்பாடு இருக்க முடியாது. ரசாயன உரங்களை அதிக அளவில் ஏற்கக் கூடிய குறுவை நெல் ரகம் ஒன்று புதிதாய்க் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்த நெல் பரவலாகச் சாகுபடியாகும்போது உணவு உற்பத்தி பெருகும். சிறிய நடுத்தரப் பாசனத் திட்டங்கள் பல விரைவாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள ஏனைய வேலைத் திட்டங்களும் திருப்திகரமாகவே நிறைவேற்றப்பட்டு வருகின்றன. திட்ட மதிப்பீட்டில் நடப்பு ஆண்டுக்கான செலவு 70.53 கோடி ரூபாயாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது; ஆனால் நடப்பு ஆண்டுக்கான திட்டச் செலவு ரூ. 77 கோடிக்கு மேற்படும் என்று தோன்றுகிறது. இதுவரை ஆன திட்டச் செலவுகளின் அடிப்படையில், அடுத்த ஆண்டில் சுமார் ரூ. 78 கோடி செலவாகும் எனத் திட்டக் கமிஷன் மதிப்பிட்டுள்ளது. ஆனால், முந்திய ஆண்டுகளைப் போலவே நமது முடிவான சாதனை இந்த நிதி ஒதுக்கத்திற்கு மேற்போகலாமென்று எண்ணலாம். தற்போதைய மதிப்பீடுகளின்படி, மூன்றாவது திட்டத்திற்கான செலவு ஏறக் குறைய ரூ. 340 கோடியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மூன்றாம் திட்டத் துவக்கத்தில் ஒதுக்கிய தொகையை விட இது ரூ. 50 கோடி அதிகமாகிறது. திட்டக் கமிஷன், நமது மாநிலத்தில் திட்ட வேலைகள் எந்த அளவில் முன்னேறியுள்ளன என்று அண்மையில் மதிப்பிட்டதில், நிதிச் செலவை பொறுத்தவரையிலும், குறிக்கோள் அளவுகளைச் சாதிப்பதிலும் நமது சாதனை பாராட்டுதலுக்குரியதென்று போற்றியுள்ளது. வேளாண்மை, மின்சக்தி தொழில், போக்குவரத்து போன்ற அடிப்படைத் துறைகள் அனைத்திலும் ஒரே அளவில் சீரான வளர்ச்சி ஏற்பட்டு, நமது மாநிலம் நான்காவது திட்டத்திற்கான பெரியதொரு முயற்சியில் ஈடுபடத் தயாரான நிலையிலுள்ளது.

கனம் அங்கத்தினர்கள் அரசாங்கத்திற்கு அளித்த பரிபூரண ஒத்துழைப்பும் வளர்ச்சித் திட்டங்கள் அனைத்தும் அரசியல் சர்ச்சைகளுக்கு அப்பாற்பட்டவை என்கிற உயர்ந்த கொள்கையுமே பிறர் பாராட்டத்தக்க முறையில் நமது மாநிலம் மூன்றாவது திட்டத்தை நிறைவேற்றியதற்குக் காரணங்களாகும். திட்டங்களை அணுகும் முறையில் வேறு பாடுகள் இருக்கலாம். வளர்ந்து வரும் ஜனநாயக முறையில் இத்தகைய வேறு பாடுகளைத் தவிர்க்க முடியாது. ஆனால், பொதுப் பணிகளில் பொதுவான கருத்து ஒற்றுமையும், ஒத்துழைப்பும் அவசியம். இந்த ஒத்துழைப்பு மனப்பான்மையும் ஒற்றுமையும் தொடர்ந்து நீடிக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

---

''மற்றவர்களுக்கு இல்லாத ஒரு பெருமை, லாலா லஜபதிராய்க்கு உண்டு. அதாவது ஆபத்துப் பாதையில் அவர் மக்களை அழைத்துச் சென்றபோது, மக்களைப் பாதுகாப்பான நிலையில் வைத்து, தாம் தன்னந்தனியாக முன்னால் சென்றார். தாக்குதலின் வேகத்தை தாம் ஏற்றார்.''

—டாக்டர் அன்னி பெசன்ட்.

# ஜவஹர்லால் நேருவும் சோஷலிசமும்

(திரு அசோக்மேத்தா, திட்டக் கமிஷன் துணைத் தலைவர்)

ஜவாஹர்லால் நேரு, சோஷலிசத்தை இந்தியாவின் இலட்சியமாக்கினார். நாட்டின் முயற்சிகள், இந்த வகையில் உருவாக, அவர் பொறுமையாகவும், விடாமுயற்சியுடனும் வழிகாட்டி வந்தார். அதன் பயனாக, நம்நாடு சோஷலிச குறிக்கோளை ஏற்றுக்கொண்டுள்ளது.

நேருவுக்கு முன்னாலும் சோஷலிசத்தைப் பற்றி இந்தியத் தலைவர்கள் சிந்தித்துள்ளனர். தேசிய இயக்கத் தலைவர்களில் சிலர் சோஷலிசக் கருத்துக்களைத் தெளிவாக உணர்ந்திருந்ததோடு, சோஷலிச இயக்கத்தோடு தொடர்பும் கொண்டிருந்தனர். 1903-ல், ஆம்ஸ்டர்டாமில் நடைபெற்ற சர்வதேச சோஷலிஸ்டுகளின் ஆறாவது மகாநாட்டில் தாதாபாய் நௌரோஜி அவர்கள் கலந்து கொண்டார். லாலா லஜபதிராய் பிரிட்டனில் நாடு கடத்தப்பட்டிருந்தபொழுது, சுயேச்சைத் தொழிற் கட்சியில் அங்கத்தினராக இருந்தார். அன்னி பெசன்ட் அம்மையார் ஃபேபியன் சோசலிச ஸ்தாபகர்களுள் ஒருவராவார். ஆனால், சோஷலிசத்தைப் பற்றிய தங்கள் கருத்தையோ லட்சியத்தையோ மக்கள் தெளிவாக புரிந்து கொள்ளுமாறு செய்ய இவர்களில் ஒருவராலும் இயலவில்லை. அம்மாதிரியான முயற்சிக்கு தருணம் வரவில்லை என்று அவர்கள் எண்ணியிருக்கலாம். எனவே, இந்திய மக்களின் விழிப்புணர்ச்சியிலும் முயற்சியிலும் சோஷலிசத்தை இணைத்து விடும் பொறுப்பு பண்டித நேருவுக்கு ஏற்பட்டது.

### மக்களிடம் கொண்ட நம்பிக்கை

உறங்கிக்கிடந்த இந்தியர்களை வீறுகொள்ளச் செய்த காந்திஜியின் சாதனை, நேருவின் உள்ளத்தில் ஆழப்பதிந்திருந்தது. எனவே, அவர் மக்களிடம் அசையாத நம்பிக்கை கொண்டவரானார். மக்களது பகுத்தறிவிலும் ஆக்க சக்தியிலும் அவர் வாழ்நாள் முழுவதும் நம்பிக்கை வைத்திருந்தார். சுதந்திரத்துக்கு வழி காட்டிய அவர், ஜனநாயகம், மதச் சார்பின்மை, திட்டமிட்ட அபிவிருத்தி ஆகிய லட்சியங்களை நோக்கியும் அவர்களை அழைத்துச் சென்றார். சுதந்திர இந்தியா நிர்மாணித்துள்ள அணைகள், தொழிற்சாலைகள், பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றிற்குரிய பெருமிதத்தில் கோடிக் கணக்கான மக்கள் பங்கு கொள்ளுமாறு செய்தார்.

நிலமற்ற குடியானவர்களையும், குத்தகைக் குடியானவர்களையும் ஒன்றுபடுத்த நேரு முயற்சியெடுத்துக் கொண்டார். தொழிலாளர்களை இணைத்து விடுவதிலும் அவர் ஆர்வம் காட்டினார். மக்களுடன் நேர்முகத் தொடர்பு கொண்டார். ஸ்தாபன அமைப்பை அவர் விரும்பவில்லை. மக்களுக்கு விஷயங்களை விளக்கிச் சொல்லி, அவர்களது சிந்தனைப்போக்கை மாற்றி, அவர்களது லட்சிய நோக்கை உயர்த்தவே அவர் எப்போதும் பாடுபட்டார்.

நேரு ஒரு மனிதாபிமானியாக விளங்கினார். மனிதனின் நலன்களைக் கருத்திற் கொண்டே எல்லா நடவடிக்கைகளையும் தீர்மானித்தார். குறிக்கோளும், அதை அடையும் முறையும் ஒத்திருக்க வேண்டும் என்ற ஒப்பற்ற உண்மையை அவர் காந்திஜி வாயிலாக உணர்ந்திருந்தார். அவர் ஜனநாயக வாதியாகத் திகழ்ந்ததற்கு இதுவே காரணம். எனவே, அவரது சோஷலிஸம் மக்கள் மீது திணிக்கப்படுவதாக இல்லாமல், அவர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது.

குறிக்கோளைப் பற்றி விளக்கிச் சொல்லி மக்கள் ஆதரவைப் பெறுவதுதான், அவரது நோக்கமாக இருந்ததே தவிர, அதிகாரத்தையோ நிர்ப்பந்தத்தையோ பிரயோகிக்க வேண்டுமென்பதல்ல. சுதந்திரத்திற்காக ஆயுதம் தாங்காத நாட்டை, நாம் வரலாற்றில் பார்க்க முடியாது. அப்படியே, ஜனநாயக ரீதியில் அபிவிருத்தியில் ஈடுபட்ட நாட்டையும் நாம் இதுவரையில் காணவில்லை. இவ்விரு துறைகளிலும் "மக்கள் சம்மதத்துடன் புரட்சி காண" அவர் கங்கணங் கட்டிக் கொண்டார். வர்க்கப் போராட்டமோ, சர்வாதிகாரமோ எதுவுமின்றி சோஷலிசத்தை அடைய முடியும் என்று அவர் உறுதியாக நம்பினார். அவர் மக்களிடம் கொண்டிருந்த நெருக்கமான உறவும், நம்பிக்கையுமே இதற்குக் காரணமாகும்.

### விரைவான வளர்ச்சிக்கு வழி விஞ்ஞானம்

இந்தியா அபிவிருத்திப் பாதையில் விரைவாகக் காலடியெடுத்து வைத்தாகவேண்டும் என்று நேரு தெளிவாக உணர்ந்தார். இதற்கு, மக்களிடையே விஞ்ஞானக் கண்ணோட்டம் மலர்ந்தாக வேண்டு

மென்று அயராது உழைத்தார். இப்பொழுது முகிழ்த்துள்ள தேசிய ஆய்வுக் கூடங்கள் அவருக்கு அழியாத நினைவுச் சின்னங்களாக விளங்குகின்றன.

நமது சமுதாயத்தில் தொன்று தொட்டுக் களங்கமாக இருந்துவரும் ஏற்றத் தாழ்வுகளை உடைத்தெறிவதில் அவர் தமது சக்தியைப் பயன் படுத்தினர். 1920-லிருந்தே நிலச் சீர்திருத்தங் களில் அவர் தீவிர அக்கறை காட்டி வந்தார். ஜாதிப் பாகுபாடு காட்டுவது, பெண்களுக்குச் சம உரிமை மறுப்பது ஆகியவற்றையும் அவர் அயராமல் சாடினர். தீண்டாமையை ஒழித்துக் கட்டுவதில் காந்தியடிகளின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, பிற்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காகப் பொருளாதார, கல்வி நடவடிக்கைகளை அமுலாக் கினர். சமஸ்தானாதிபதிகள், ஜமீன்தாரர்கள் பெரும் பணக்காரர்கள் ஆகியோரையும், சாதாரண குடி மக்களையும் சமமாகவே பாவித்தார்.

வாழ்க்கையில் சம வாய்ப்புகளைப் பெற ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு என்பதில் அவர் ஆழ்ந்த நம்பிக்கையுடையவர். "பிறந்ததிலிருந்து மேன்மேலும் வளர்ச்சி பெறுவதற்கும், திறமைக் கேற்ற தொழிலைப் பெறுவதற்கும் ஒவ்வொரு வருக்கும் சம வாய்ப்பு இருக்கவேண்டும்" என்று அவர் முழங்கினர். இதுவே அவரது கொள்கையின் உயிர் நாடியாகும்.

பொருளாதார அபிவிருத்தியால் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளும், வாய்ப்பு மிகுந்தவர்கள் அபிவிருத்தியின் பலன்களை அதிக அளவில் அனு பவிப்பதும் ஜவஹர்லால் நேருவின் கண்களில் படாமல் போகவில்லை. ஏக போகத்தைக் கட்டுப் படுத்தும் நடவடிக்கைகளின்மூலம், இதற்குப் பரிகாரம் காண முடியும் என்று அவர் நம்பினர். இந்தியப் பொருளாதார வளர்ச்சியில் புதிய அபிவிருத்தியில் அரசாங்கம் ஈடுபடுவது சிறந்தது என்று அவர் கருதினர்.

திட்டமிட்ட முயற்சியின் மூலந்தான், இந் நாட்டில் பொருளாதார வளர்ச்சியையும் சமூக மாற்றத்தையும் துரிதப்படுத்த வேண்டியிருந்தது. ஆகவே, நேரு 1950-ல் திட்டக் கமிஷனை நிறுவி, அதன் தலைவராக அமர்ந்து, அது சிறந்த நோக்கத்துடனும் திறம்படவும் செயல்பட உதவினர்.

**புதியதோர் சமுதாயம் அமைக்க...**

ஐந்தாண்டுத் திட்டங்கள், சுதந்திரமும் சமத்துவமும் மிக்கதொரு சமுதாயத்தை நோக்கி கல்வி, தொழில், உற்பத்தி, ஆகிய மார்க்கங்களில் முன்னேறுவதற்கான படிகளாகவே அவருக்குத் தோன்றின. இதுவே சோஷலிசம் என்றும் அவர் கருதினர்.

சோஷலிசத்தை அடைவதற்கு, ஏற்கெனவே கையாளப்பட்டதொரு திட்டத்தை அப்படியே பின் பற்ற வேண்டுமென்று அவர் விரும்பவில்லை. அபிவிருத்தியடையாத ஒரு நாட்டில் ஜனநாயக முறையில் அந்த லட்சியத்திற்காகப் பாடுபடும் ஒரு புது வழியை அவர் தோற்றுவித்தார். அபி விருத்தியைத் துரிதப்படுத்திவிட்டால், உரிமை களையும் காப்பாற்றி விடலாம். ஏற்றத் தாழ்வையும் குறைத்துவிடலாம் என்று அவர் எதிர்பார்த்தார். ஆனல் ஜனத்தொகை பெருக்கமும் அபிவிருத்தித் தயக்கமும் எதிர்பாராத பிரச்னைகளைத் தோற்று வித்தன. அபிவிருத்தித் தேக்கம் அடைந்திருப்பதை நேரு கண்டார். பிற்போக்காளர்கள் மக்களின் கஷ்டங்களைப் பயன்படுத்திக்கொண்டு, இந்தியாவின் பாதையையே மாற்றி விடுவார்களோ என்று அவர் அஞ்சினர். எனவே, தமது அந்திம நாட்களில் சோஷலிசத்துக்குப் புதிய உத்வேகத்தை அளித்து, சமூக மாற்றம் என்ற முனையைக் கூர்மைப்படுத்தத் தீர்மானித்தார். சோஷலிசத்தை லட்சியமாக ஏற்றுக்கொண்டதோடு அவர் திருப்தியடைந்து விடவில்லை. நாட்டில் சிதறிக்கிடந்த சோஷலிஸ வாதிகளைத் திரட்ட முயன்றார்.

நேரு, நமக்குத் தெளிவானதொரு லட்சியத்தை அளித்துள்ளதோடு, திட்டவட்டமான வழியையும் காட்டியுள்ளார். அதனை அடைவதற்குரிய கருவிகளை அளித்துள்ளார். இந்த லட்சியம் நிறை வேறுவதற்காக நாம் வேகமாகவும், அக்கறை யுடனும் உழைக்க வேண்டுமென்று அவர் தமது இறுதி நாட்களில் இடைவிடாது வலியுறுத்தி வந்தார். இந்த வகையில், அவர் பேணி வளர்த்த சோஸலிசத்திற்காகப் பாடுபடுவதே நாம் அவருக்குச் செய்யக்கூடிய தலை சிறந்த கைம்மாறு ஆகும்.

---

## நம்முடைய குறிக்கோள்

"வண்டல் நிறைந்துள்ள கிராம வாழ்க்கை என்னும் நிலத்தில் மகிழ்ச்சி என்ற நீரைப் பாய்ச்சுவதே, நம்முடைய குறிக்கோளாகும். இதனைச் செய்வதற்கு அறிஞர்கள், கவிஞர்கள், இசை வல்லுநர்கள், கலைஞர்கள் ஆகிய அனைவரும் ஒன்று சேர்ந்து, தங்கள் பங்கைச் செலுத்த வேண்டும். இவ்வாறு செய்யாவிட்டால், அவர்களும் மற்றவர்களைப் போல் மக்களினுடைய உயிரை உண்டு, பதிலுக்கு ஒன்றுந்தராத ஒட்டுண்ணிகளாய் ஆகிவிடுவார்கள்."

—கவியரசர் தாகூர்

பஞ்சாயத்து ஆட்சியின் அடிப்படைத் தத்துவம்:

# தன் கையே தனக்குதவி

என்பதைப் பறை சாற்றுகிறது
கொண்டாப்பூர் என்ற
ஆந்திரப் பிரதேச கிராமம்.

ஆந்திரப்பிரதேசத்தில் மாபூப் நகர் மாவட்டத்தில் சந்தவா வட்டாரத்தைச் சேர்ந்தது கொண்டாப்பூர். எல்லாப் பக்கங்களிலும் சிறு குன்றுகளால் சூழப்பட்ட தனிமையான சூழ்நிலையில் இருப்பது இக்கிராமம். நடுத்தர அளவுடையதான கோயில்சாகர் என்ற அழகிய அணைப் பகுதியைக் கடந்து சென்றால், அங்கிருந்து மூன்று மைல் தூரத்தில் உள்ள கொண்டாப்பூரை அடையலாம்.

இக்கிராமத்தைச் சுற்றிலும் சிறுசிறு குட்டைகள், குளங்கள், ஏரிகள் இருக்கின்றன. கிராம மக்கள் தங்கள் குடிதண்ணீருக்கும், தங்கள் நிலங்களுக்கான பாசனத்திற்கும் இவற்றைத்தான் நம்பியிருக்கின்றனர். இந்த நிலையில் முக்கிய ஏரி ஒன்று சில ஆண்டுகளுக்கு முன், உடைப்பு கண்டு சேதமடைந்தது. எனவே, அந்த ஏரியிலிருந்து நீர்ப் பாசனம் பெற்று வந்த நிலங்கள் எல்லாம், தண்ணீர் இல்லாமல் வரண்டு, காய்ந்து போயின. இத்தகைய நேரங்களில், பொதுவாக எல்லாக் கிராம மக்களும் சாதாரணமாக எதிர்பார்க்கிறபடி, கொண்டாப்பூர் மக்களும், உடைப்பு கண்ட ஏரியை மராமத்து செய்வது அரசாங்கத்தின் பொறுப்பு என்று தான் கருதினர்கள். விவசாய உற்பத்தி பெரும் அளவில் பாதிக்கப்படுகிறது எனத் தெரிந்துங்கூட, கிராம மக்கள் அந்த ஏரியைப் பழுது பார்க்காமலே விட்டு வைத்தனர்.

### திருப்பம் ஏற்படுத்திய அந்த நாள்

ஒரு நாள், கிராமத் தொண்டர் படையினர் கூட்டிய கூட்டத்தில் கிராமப் பெரியவர்கள் பங்கு கொண்டனர். விவசாய உற்பத்தியைப் பெருக்குவதன் அவசியத்தைக் கிராம மக்களுக்கு எடுத்துக் கூறுவதுதான், கூட்டம் கூட்டப்பட்டதன் நோக்கம். அதிக உற்பத்தி செய்வது ஒரு தேசிய கடமை என்பது அங்கு வலியுறுத்திச் சொல்லப்பட்டது. கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய வட்டார அபிவிருத்தி அதிகாரி, ''நமது பகுதியில் உடைப்பு ஏற்பட்ட ஏரிகளையெல்லாம் பழுது பார்ப்பது மூலந்தான் உணவு உற்பத்தியை உடனடியாக அதிகரிக்க முடியும்,'' என்று கூறினர். உடனே கூட்டத்திலிருந்து எழுந்தார் ஒரு விவசாயி. ''இந்த கொண்டாப்பூரில்கூட, ஒரு ஏரி உடைப்பு ஏற்பட்டுக் கிடக்கிறது. அதைச் சரிசெய்துவிட்டால், உடனடியாக 50 ஏக்கர் நிலத்தைச் சாகுபடியின் கீழ் கொண்டு வரலாம்'' என்றார். ஆனல் இந்த வேலை பூர்த்தியாக உழைப்பும், கல்லும் மணலும் தடங்கலின்றி கிடைக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. அதைக் கேட்ட மற்றொரு விவசாயி, ''வேண்டிய கற்களை நான் இனமாகத் தருகிறேன்'' என்று உற்சாகமாக அறிவித்தார்.

இந்தக் கூட்டம், கொண்டாப்பூர் மக்கள் மனப் போக்கில் ஒரு புதிய திருப்பத்தை உண்டாக்கியது. அவர்களிடையே இருந்த மெத்தனப்போக்கும் அக்கறையற்ற தன்மையும் அகன்றன. புதிய உறுதியும், தன்னம்பிக்கையும் தோன்றி, கிராமம் முழுவதுமே உத்வேகத்துடன் இயங்கத் தொடங்கியது. ஆண்களும் பெண்களுமாக 200-க்கு மேற்பட்டவர்கள், கடும்வெயிலையும் பொருட்படுத்தாமல், தொடர்ந்து எட்டு நாட்கள் அயராது பாடுபட்டு ஏரிக்கரையைச் சரி செய்தனர். அவர்கள் அத்துடன் நிற்கவில்லை. ஏரிக்கு மழைத் தண்ணீர்

[12-ம் பக்கம் பார்க்க]

பம்பாய் மாநிலக் கூட்டுறவு நில அடமான பாங்கு, 1963–64 கூட்டுறவு ஆண்டில், மொத்தம் ரூ. 9 கோடி மதிப்புள்ள கடன்களை விவசாயிகளுக்கு வழங்கியிருக்கிறது. விவசாயிகள், தங்கள் நிலங்களுக்கான நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கிக் கொள்வதற்காக, இந்தக் கடன்கள் தரப்பட்டன. இதில் ரூ. 4 கோடிக்கும் அதிகமான தொகை, 30 ஆயிரத்துக்கு மேற்பட்ட கிணறுகள் தோண்டுவதற்காகப் பயன்படுத்தப் பட்டது. பழைய கிணறுகளைப் பழுது பார்ப்பதற்காக, ரூ. 29 லட்சம் செலவழிக்கப்பட்டது. மிச்சம் ரூ. 4.40 கோடிக்குச் சற்று அதிகமான பணம், பம்பு செட்டுகளுக்கான மின்சார மோட்டார்கள், ஆயில் எஞ்சின்கள் ஆகியவற்றை வாங்கும் வகையில் பயன்படுத்தப்பட்டது.

# உணவு உற்பத்தியில் பஞ்சாயத்தின் பங்கு

நம் நாட்டில், உணவு நெருக்கடி அடிக்கடி ஏற்பட்டு வருகிறது; எனவே பெரும் அளவில் வெளிநாடுகளிலிருந்து உணவு இறக்குமதிகள் செய்யப்பட்டு, அதனால் மதிப்புமிக்க அந்நிய செலாவணி கரைந்து வருகிறது. ஆனால் இந்த உணவுப் பற்றுக்குறைக்கு ஒரு முடிவு கட்டவும், உணவு இறக்குமதிகளை நிறுத்தி விடவும் நமது அரசாங்கம் உறுதி பூண்டிருக்கிறது; எனினும் பொது மக்கள் உற்சாகத்துடன் முழுமனதான ஆதர்வு தந்தாலன்றி, இதில் அரசாங்கம் வெற்றி காணமுடியாது என்பதைச் சொல்லத் தேவையில்லை. இது ஒரு தேசியப் பிரச்னையாகையால் தேசிய மட்டத்தில் முயற்சிகள் எடுத்தால் தான் தீர்வு காண இயலும்.

### பசிப்பிணியிலிருந்து விடுதலை

பட்டினியிலிருந்து விடுதலைக்கான இந்தப் போர்ராட்டம், கிராமங்களில் தான் ஆரம்பமாக வேண்டும். உணவுக்காக அந்நிய நாடுகளை நம்பியிருக்கும் நிலைமையிலிருந்து நாட்டை விடுவிக்கும் பணியில் கிராமப் பஞ்சாயத்துக்கள் முக்கியமான பங்குகொள்ளவேண்டும்.

விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்காக பல ஊக்குவிப்பு உதவிகள், சுலப முறையான கடன்கள், அரசாங்க மான்யத்தின் மூலம் விலை குறைக்கப்பட்ட ரசாயன உரங்கள், விவசாயக் கருவிகள் முதலியவை அளிக்கப்படுகின்றன. அவற்றோடு விவசாயச் செலவைக் குறைப்பதற்கான வழிவகை ஏதாவது காட்டப்பட்டால் அது விவசாயிகளைப் பெரிதும் ஊக்குவிப்பதாகும். அத்தகைய வழிவகைகாட்டப்பட்டால் விவசாயிகள் மகிழ்ச்சியடைவதுமட்டுமல்ல, மிக்க நன்றியுடையவர்களாகவும் இருப்பார்கள். இந்த இடத்தில்தான் பஞ்சாயத்துக்களுக்குப் பொறுப்பு இருக்கிறது. வரி வசூல் செய்வது, செலவுகள் செய்வது, ரோடுகள் போடுதல், பள்ளிகள், மருந்தகங்கள் ஆரம்பித்தல் முதலிய பணிகளோடு தங்கள் பொறுப்பு முடிந்தது என்றிராமல், பஞ்சாயத்துத் தலைவர்கள், விவசாயச் செலவைக் குறைக்கும் பிரச்னையிலும் தங்களைத் தீவிரமாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். விவசாயச் செலவுகளை எந்தெந்த இனங்களில் எந்த அளவுக்குக் குறைக்கலாம் என்பதை அவர்கள் நன்ருக அறிவார்கள்.

விதைகள், ரசாயன உரங்களின் விலை, தொழிலாளர்களுக்குத் தரும் ஊதியம், விவசாயக் கருவிகளுக்குச் செலுத்தும் வாடகைக் கட்டணம் அல்லது சொந்தமாக வைத்திருந்தால் அக்கருவிகளை அவ்வப்போது பழுது பார்க்க ஆகும் செலவு இவையெல்லாம் விவசாயச் செலவில் அடங்கும். இவையன்றி நிலத்திற்காகவும், நீர்ப்பாசனத்திற்காகவும் வரிகள் செலுத்த வேண்டியிருக்கிறது. மற்றும் உழவு மாடுகள், விதைகள், ரசாயன உரங்கள் இவற்றை வாங்குவதற்காகச் செய்யப்படும் முதலீட்டுத் தொகைக்கு வட்டி செலுத்தவும் நேரிடுகிறது. எனவே இந்த அம்சங்களையெல்லாம் மனதில் வைத்துத்தான், விவசாய செலவைக் குறைப்பதற்கான வழிவகைகள் பற்றி ஆராயவேண்டும். அரசாங்கத்தால் விதிக்கப்படும் வரிகளைப் பொறுத்தவரை, அவற்றைக் குறைப்பது விவசாயிகள் கையில் இல்லை என்பது தெரிந்த செய்தி. மற்ற இனங்களில் சேதம், விரயம் ஆகும் அளவுகளைக் குறைக்கலாம். உதாரணமாக, முளைவிடும் சக்தி மிக அதிகமாக உள்ள தரமான விதைகளை உபயோகிப்பதன் மூலம், விரயச் செலவு ஓரளவு குறையும். எனவே பொறுக்கு விதைகளை ஏராளமான விவசாயிகள் உபயோகிக்கும்படி ஊக்குவிக்க வேண்டும். உரங்கள் விஷயத்தை எடுத்துக் கொண்டால் ரசாயன உரங்களுக்கு நிச்சயம் செலவு அதிகமாகத்தான் ஆகும். ஆகையால் கிராமத்திற்கு அருகாமையில் காடு ஏதாவது இருந்தால், தழை உரங்களை அதிகமாக உபயோகிப்பதில் கவனம் செலுத்தவேண்டும். இவ்வாறு செய்வதால் விவசாயச் செலவு ஒரு குறிப்பிடத்தக்க அளவு குறையும். மேலும் இவ்வாறு பல கிராமங்கள் செய்ய முடிந்தால், ரசாயன உரங்களுக்கு உள்ள நெருக்கடியும் தளரும்.

விவசாயத் தொழிலாளர்களுக்குத் தரப்படும் ஊதியங்களுக்கான செலவும் இந்தக் காலத்தில் அதிகமாகத்தான் இருக்கிறது. ஆனால் அதிக ஊதியம் கோரும் விவசாயத் தொழிலாளர்களையும் குறை சொல்ல முடியாது. வாழ்க்கைச் செலவு உயர்ந்துள்ளபோது, வயிற்றை நிரப்புகிற அளவுக்கும் குறைந்த ஊதியத்தை அவர்கள்தான் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? பரந்த அளவில் நிலம் உள்ளவர்கள் இயந்திரங்களைக் கொண்டு விவசாயக்

[12-ம் பக்கம் பார்க்க]

**கிராமப்புற மக்கள், கூட்டுறவு ரீதியில் ஒரு தொழில் முயற்சியில் ஈடுபட, மாநில எல்லை ஒரு தடையாயிராது; இரு வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் ஒன்றுகூடி, எந்த ஒரு தொழிலையும் நடத்தலாம் என்பதற்கு கங்காநகர் சர்க்கரை ஆலை, ஒரு முன்மாதிரியாகத் திகழ்கிறது.**

# கூட்டு முயற்சிக்கு மாநில எல்லை தடையல்ல

மகாராஷ்டிர மாநிலத்தில் கொல்ஹாபூர் மாவட்டத்தில் ஒரு சிறிய நகரமைப்பு கங்காநகர். இருபது மைலுக்கு அப்பால் உள்ள சங்லி என்ற நகரத்துடன் அதற்கு நல்ல ரோடு தொடர்பு இருக்கிறது. முடிவே இல்லாததுபோல் தோன்றும் சாலை மரங்களின் வரிசைக்குப் பின்னால், நூற்றுக் கணக்கான வளமிக்க நிலங்களில் சாகுபடி நடக்கிறது. சர்க்கரை ஆலை ஏற்பட்டதையொட்டி, அதைச் சுற்றிலும் புதிதாகத் தோன்றிய நகரம் கங்கா நகர். இப்பகுதியில் ஓடும் பஞ்சகங்கா நதியின் பெயரை ஒட்டி, நகரத்திற்கு இப்பெயர் சூட்டப்பட்டது. ஆறு ஆண்டுகளுக்குமுன் பாழ்வெளி போல் கிடந்த இடத்தில் வரிசை, வரிசையான வீடுகளும், மின்சார விளக்குகளுடன் கூடிய வீதிகளும், கடைகளும், மக்கள் நடமாட்டமும் கொண்ட சுறுசுறுப்பு மிக்க ஒரு சிறிய நகரம் இப்போது தோற்றமளிக்கிறது. இதைச் சுற்றியுள்ள கிராமங்களும் முன்னேற்றமடைந்திருக்கின்றன. ஒவ்வொரு கிராம வீடும் மின்சார வசதி பெற்றிருக்கிறது.

### இரு மாநில விவசாயிகளின் பொதுச் சொத்து

140 ஏக்கர் நிலப்பரப்பில் கட்டப்பட்ட கங்கா நகர் சர்க்கரை ஆலை 1958-ல் ஆரம்பமாகியது. சுற்றுப்புற கிராமங்களைச் சேர்ந்த விவசாய மக்களின் கூட்டு முயற்சியினால் இது உருவாயிற்று. ஐந்து தாலுகாக்களைச் சேர்ந்த 84 கிராமங்கள இந்த ஆலையுடன் இணைப்பு கொண்டுள்ளன. இவற்றில் 13 கிராமங்கள் மைசூர் மாநிலத்தைச் சேர்ந்த பெல்காம் மாவட்டத்தில் உள்ளன. மற்றவை மகாராஷ்டிராவில் உள்ளன. ஆம், இரண்டு மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்குப் பொதுவான பணி புரிகிறது இந்த ஆலை. இந்தக் கூட்டுறவில் 2,286 உறுப்பினர்கள் இருக்கிறார்கள் அவர்களில் 2,000-க்கு மேற்பட்டவர்கள், தலா மூன்று பங்குகள் எடுத்திருக்கிறார்கள். ஒரு உறுப்பினர், அதிகபட்சம் எத்தனை பங்குகள் எடுத்துக் கொள்ளலாம் என்பதற்கு உச்சவரம்பு இருக்கிறது ஆகையால் பெரிய நிலச்சுவான்தார்—செல்வந்தர் எவரும் இங்கு ஆதிக்கம் செலுத்தமுடியாது. ஆக, இந்த ஆலை பெரும்பாலும் சிறிய விவசாயிகளின் உடமையாகவே இருக்கிறது.

### புதிய நன்மைகள்

கூட்டுறவைச்சேர்ந்த உறுப்பினர்களிடம் சுமார் ஐயாயிரம் முதல் ஆறாயிரம் ஏக்கர் வரை நிலம் இருக்கிறது. இவற்றில் எல்லாம் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. நிலங்கள் எல்லாம் அந்தந்த விவசாயிகளுக்கே சொந்தமாக இருக்கிறது. அதில் ஒன்றும் மாற்றமில்லை. ஏற்பட்டுள்ள ஒரே மாற்றம் அவர்களுக்கு ஒரு பெரிய சொத்து—சர்க்கரை ஆலை—சேர்ந்திருக்கிறது. ஆக, இவர்கள் இப்போது விவசாயிகளாக மட்டுமல்லாமல் தொழிலதிபர்களாகவும் ஆகியிருக்கிறார்கள். கூட்டுறவு சர்க்கரை ஆலை ஏற்படுவதற்கு முன், இந்த விவசாயிகள் தங்கள் நிலங்களில் விளையும் கரும்பை விற்க, தனியார் நடத்தும் ஒரு ஆலைக்கு எடுத்துச்செல்ல வேண்டி இருந்தது. அந்த ஆலை நிர்ணயிக்கும் விலைக்கு, சரக்கைக் கொடுப்பதைத் தவிர வேறு வழியில்லை. அதோடுஇன்னொரு சங்கடம். விவசாயிகள் தங்கள் சொந்த செலவில் கரும்பை ஏற்றிச்சென்று ஆலைவாயிலில் சோக்கவேண்டும். அங்கு எடை போடுவது, பட்டியல் தயாரிப்பது ஆகியவற்றில் தில்லுமுல்லுகள் நடப்பதுண்டு. குறிப்பாக, கல்வியில்லாத அப்பாவிகளான விவசாயிகள் ஏமாற்றப்படுவதுண்டு. அதாவது அவர்களது கரும்புக்கு நியாகமாகக் கிடைக்கவேண்டிய தொகை முழுமையாகத் தரப்படுவதில்லை. அதோடு விலைகளும் அவ்வப்போது மாறுபடுவதுண்டு. 'பணமுடை' உள்ள சாதாரண விவசாயிகள் பலரும் நல்ல விலைக்காக காத்திராமல், அறுவடை காலம் வந்ததும்' கரும்பை வெட்டி விற்றுவிடுவார்கள். வசதி படைத்த விவசாயிகள் மட்டும் விலை ஏறட்டும் எனக்காத்திருப்பர்,

### ஆலை வழங்கும் உதவிகள்

இப்போது இந்த நிலைமைகள் எல்லாம் மாறிவிட்டன. சர்க்கரை ஆலை கூட்டுறவுச் சங்கம் தான் உறுப்பினர்களின் நலன்களைப் பாதுகாக்கிறது. விவசாய மேற்பார்வையாளர்கள், தொழில் நுட்ப ஊழியர்கள் ஆகியவர்களின் உதவி, வழிகாட்டும் யோசனைகளைப் பெற்று, விவசாயிகள் தங்கள் நிலத்தில் நல்ல விளைச்சல் காண்கிறார்கள். அவர்களுக்கு, ரசாயன உரத்தை, ஆலை கடனாக வழங்குகிறது. பொதுவாக கரும்பு சாகுபடி, விஞ்ஞான ரீதியாகச் செய்யப்படுகிறது. கரும்பு, அறுவடைக்குத் தயாராக நிற்கும்போது, ஒவ்வொரு நிலத்திலிருந்தும், மாதிரி கரும்புகள் ஆலையின் பரிசோதனைக் கூடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அக்கரும்பு முழுவளர்ச்சி பெற்றுவிட்டதா, அறுவடை செய்துவிடலாமா எனச் சோதனை செய்யப்படுகிறது, பிறகு, உசிதம் போல் கரும்பை

[29-ம் பக்கம் பார்க்க]

# கோழிகளுக்குச் சமன் சத்துத் தீவனம்

கோழிகளுக்குத் தேவையான எல்லாச் சத்துக்களும் உரிய அளவில் சேர்ந்த சமன் சத்துத் தீவனத்தை ( Balanced Poultry Feed ) தயாரித்து, கோழி வளர்ப்பாளர்களுக்கு வழங்கு வதற்கான திட்டம் ஒன்று உத்திரப்பிரதேச அரசாங்கத்தாரல் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதன்படி, மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி மூன்றுண்டுகளில், ரூ. 7.76 லட்சம் செலவு செய்யப்படும். மீரட் மாவட்டத்தைச் சேர்ந்த பாபுகார் என்ற இடத்தில் உள்ள கால்நடைப் பண்ணையை மையமாகக் கொண்டு, இத்திட்டம் இயங்கும்.

இத்திட்டத்திற்கு, உலக உணவுத் திட்டத்திலிருந்து (World Food Programme) உதவிகள் கிடைக்கும். ஸ்டேஷன்-வாகன் வகையைச் சேர்ந்த மோட்டார் வாகனங்களும், 2,000 மெட்ரிக் டன் எடை யுள்ள மக்காச் சோளமும் இலவசமாகக் கிடைக்கும். மக்காச் சோளத்தை இதர தீனி வகைகளுடன் கலந்து சமன் சத்துத் தீவனம் தயாரிக்கப்பட்டு, அது கோழி வளர்ப்பாளர்களுக்கு விற்பனை செய்யப்படும். மக்காச் சோளம் தவிர, இதர தீனி வகைகளில் 2,000 டன் வாங்குவதற்காகவும், தீவனங்களை அறைப்பதற் கான இயந்திரங்களை வாங்கவும், ரூ. 2.55 லட்சம் நிதியை, மாநில அரசாங்கம் ஒதுக்கியிருக்கிறது.

---

[9-ம் பக்கத் தொடர்ச்சி]

வந்து சேரும் குறுகிய கால்வாயின் கரைகளை உயரப்படுத்தி, தண்ணீர் தாராளமாக வந்து சேர வழி செய்தனர்.

### உள்ள உறுதியும் உழைப்புந்தான் தேவை

தங்கள் சுயபலத்தில், இந்தக் காரியத்தைச் செய்து முடித்தது பற்றி கொண்டாப்பூர் மக்கள் பெருமிதம் கொள்கின்றனர். தன் கையே தனக்கு உதவி ! அதுதான் பஞ்சாயத்து ஆட்சியின் அடிப் படைத் தத்துவம் என்பதை, அவர்கள் செயல் மூலம் காட்டியது மற்றவர்களுக்கும் ஒரு விழிப்பைத் தந்திருக்கிறது. சந்தவர் வட்டாரத்தைச் சேர்ந்த பிற கிராமங்களும், இப்போது கொண்டாப்பூர் காட்டிய வழியைப் பின்பற்றத் தொடங்கியுள்ளன. ஒரு கிராமத்தில், தொண்டர் படையினர், பஞ்சா யத்தின் தலைமை-மேற்பார்வையின்கீழ், அப்பகுதி யில் உடைப்பு ஏற்பட்ட ஏரிகளையெல்லாம் பழுது பார்க்கும் வேலையை வெற்றிகரமாகச் செய்து முடித்தனர். அவர்கள் நல்கிய உழைப்பின் மதிப்பு ரூ. 3,000 ஆகும்.

### மற்ற கிராமங்களிலும் புதிய விழிப்பு

ஆக, இன்று மாபூப்நகர் மாவட்ட கிராமங்கள் பலவற்றில் ஒரு விழிப்புணர்வு காணப்படுகிறது. தங்களுக்கு வேண்டிய காரியங்களைச் செய்து கொள்ள தேவையெல்லாம் உள்ள உறுதியும்; உடல் உழைப்புந்தான் என்ற உண்மையை கிராம மக்கள் உணருகின்றனர்.

சமுதாயத்தின் நல்லெண்ணம், ஒத்துழைப்பின் மூலம் கிராமாந்திர அபிவிருத்திப் பணிகளை யெல்லாம் விரைவாகவும், வெற்றிகரமாகவும் செய்து முடிக்கலாம் என்பதற்கு கொண்டாப்பூர் வழி காட்டுகிறது.

[10-ம் பக்கத் தொடர்ச்சி]

காரியங்களைச் செய்து அந்த முறையில் விவசாயச் செலவைக் குறைத்துக் கொள்ளலாம்.

விவசாயிகள் தாங்கள் வாங்கும் கடன்களுக்காக செலுத்தும் வட்டியை நிச்சயம் குறைக்க முடியும். நடவு, அறுவடை ஆகிய இரண்டு நேரங்களில் விவசாயிகளுக்குப் பொதுவாக பணமுடை ஏற்படு கிறது. உடனே அவர்கள் ரொக்க லேவாதேவிக் காரர்களிடம் விரைகிறார்கள்; பணமும் உடனே கிடைக்கிறது. ஆனால் வட்டிதான் கொழுத்த வட்டி. இதைத் தெரிந்தும் விவசாயிகள் அவர் களிடந்தான் கடன் வாங்குகிறார்கள். ஏன் ? அரசாங்கமும் பல வழிகளில் கடன் வழங்குகிறது என்றாலும், அத்தகைய கடன்களைப் பெற விரிவான சங்கடமான பல சடங்குகளுக்கு உள்ளாக நேரிடு கிறது. ஆகையால், உடனடியாகப் பணம் கிடைக் கக்கூடிய இடத்திற்கு (லேவாதேவிக்காரர்களிடம்) செல்லவே விவசாயிகள் விரும்புகிறார்கள். எனவே இந்தக் கடன் வழங்கும் துறையில், பஞ்சாயத்துத் தலைவர்கள் முக்கிய பணியாற்றும்படிச் செய்ய வேண்டும். அவர்களிடம் சில ஆயிரம் ரூபாயை ஒப்படைத்து, அதிக சடங்குகள் இல்லாமல் பணத்தை எடுத்து, நியாயமான தேவையுள்ள சில கிராமவாசிகளுக்குக் கடன்தர வழிவகை செய்வது நலம். இப்படிக் கடன்கள் தருவதற்காக மேற்கொண்டு பணம் தேவைப்பட்டால், பஞ்சா யத்துத் தலைவர்கள், தங்களிடம் முதலில் ஒப்படைக்கப்பட்ட பணத்திற்குக் கணக்குக் காட்டி விட்டுப் பிறகு மேற்கொண்டு பணம் பெறும்படிச் செய்யலாம். இந்த ஏற்பாட்டின் மூலம், விவசாயி களுக்குக் குறைந்த வட்டியில் கடன் கிடைக்க வசதி செய்தால், வட்டிக்காக ஆண்டு தோறும் அவர்களுக்கு ஆகும் செலவு குறையும். அதன் மூலம் விவசாயச் செலவு குறையும்.

ஆகையால் ஒவ்வொரு பருவத்தின்போதும் விவசாய காரியங்கள் ஆரம்பமாகுமுன், எந்தெந்த விவசாயச் செலவினங்களை எந்த அளவுக்குக் குறைக் கலாம், அதே நேரத்தில் உற்பத்தித் தரம் பாதக மடையாமல் இருக்கும் என்பனவற்றை யெல்லாம் கிராமப் பஞ்சாயத்துக்கள் பரிசீலனை செய்வது அவசியம். இவ்வாறு ஒவ்வொன்றிலும் ஒரளவாகிலும் மிச்சம் பிடிக்க உண்மையான முயற்சி செய்யப்பட்டால், மொத்தத்தில் விவசாயச் செலவு ஒரு குறிப்பிடத்தக்க அளவு குறையும் என எதிர் பார்க்கலாம்.

["சமுதாயத்தில், முதலாளிகளும் தொழிலாளிகளும் சம பங்காளிகளாக, ஒருவரை ஒருவர் சார்ந்து வாழவேண்டும்" என்ற தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட மகாத்மாவின் செல்வக் காவல் முறையை (தருமகர்த்தா-பொதுவுடைமைக் கொள்கை) எளிய தமிழில், அழகாக விளக்கியுள்ளார் கட்டுரை ஆசிரியர்.]

# இரு பங்காளிகள் 

[திரு. மீ. லீ. சபரிராஜன்]

ஓர் ஊரில் செல்வர்கள் சிலர் இருந்தார்கள். ஏழைகள் பலர் அவர்களுக்கு உதவியாக இருந்து, நெற்றி வேர்வை நிலத்தில் சிந்த அரும்பாடுபட்டு உழைத்தார்கள். காலம் ஓடிற்று. ஏழைகளுக்கு, வாழ்வில் ஒரு வகையான அதிருப்தி உண்டாயிற்று. செல்வர்கள் சுகவாழ்வு நடத்துவதைக் கண்டு, அவர்களுக்குப் பொறுமை ஏற்பட்டது. "நாம் ஏன் இவர்களுக்கு உழைக்கவேண்டும்? தனியே போய் விட்டாலென்ன?" என்று யோசித்தார்கள். கடைசியில், ஒரு நாள் இரவு, அவர்கள் அந்த ஊரை விட்டே போய் விட்டார்கள். சற்றுத் தொலைவுக்கப்பால், ஒரு குன்று இருந்தது. அங்கு அவர்கள் தங்கினார்கள். தமக்கென புதிதாக ஓர் ஊரை அங்கு அமைப்பதென்று அவர்கள் திட்டம் போட்டார்கள்.

மறுநாட் காலை, செல்வர்களுக்கு இது தெரிந்தது. அவர்களில் ஒருவர் நல்லவர்; முதியவர். அவர் ஏழைகள் முகாமுக்குப் போனார். அப்போது அங்கு ஒரே குழப்பமாயிருந்தது. குழந்தைகள் பசியால் துடித்துக் கொண்டிருந்தார்கள். குடிக்கத் தண்ணீர் கூட இல்லை. வெயில் ஏறிக்கொண்டிருந்தது. ஊரை எப்போது அமைப்பது, வேலை எப்போது தொடங்குவது என்று யாருக்கும் தெரியவில்லை. இந்த நிலைமையில் முதியவரைப் பார்த்ததும் அவர்களுக்குச் சீற்றம் உண்டாயிற்று. "என்ன சேதி? எதற்காக வந்தீர்?" என்று கூச்சல் போட்டார்கள். முதியவர் தம் கையை உயர்த்தி, "சற்றுப் பொறுமையாயிருங்கள்; நான் சொல்வதைக் கேளுங்கள்" என்று கூறி விட்டு, ஒரு குட்டிக் கதை சொன்னார்.

### பழைய-கதை; உயர்ந்த கருத்து

அது அநேகமாக எல்லோருக்கும் தெரிந்த கதை தான். ஒரு நாள் வயிற்றுக்கும் பிற உறுப்புக்களுக்கும் சண்டை உண்டாயிற்று. "நாங்கள் கஷ்டப்பட்டு உழைக்கிறோம். ஆனால், எங்களுக்கு உணவு கிடைப்பதில்லை. எல்லா உணவும் உனக்குத்தான் கிடைக்கிறது. ஆகவே, இனி நாங்கள் வேலை செய்யமாட்டோம்," என்று கால், கை, கண், காது முதலிய உறுப்புக்கள் கூறின. வேலை நிறுத்தம் தொடங்கிற்று. இரண்டு மூன்று நாட்கள் கழிந்தன. உடம்பு பலவீனமடைந்தது. உட்காரவோ நிற்கவோ கூட அதனால் முடியவில்லை. கை, கால்கள் சோர்ந்து விழுந்தன. அப்போதுதான் உண்மை தெரிந்தது. வயிறு எல்லா உணவையும் பெற்று, அதைத் தானே வைத்துக்கொள்வதில்லை, அதைச் செறித்து உடம்பின் எல்லாப் பகுதிகளுக்கும் அனுப்புகிறது என்பதைப் பிற உறுப்புக்கள் அறிந்தன.

செல்வர் இந்தக் கதையைக் கூறிவிட்டு, எங்களை வயிறாகவும், உங்களைப் பிற உறுப்புக்களாகவும், நினைக்கிறீர்கள். அது தவறு. எல்லோருக்கும் வேலை இருக்கிறது. ஒருவரை ஒருவர் சார்ந்து தான் வாழவேண்டும். நீங்கள் திரும்பி வாருங்கள். உங்களுக்கு வேண்டிய வசதியெல்லாம் செய்து கொடுக்கிறோம்," என்று உறுதிகூறினார். ஏழைகள் அதற்கு இணங்கினார்கள். அவர் பின் சென்றார்கள்.

இது கதையல்ல; நடந்த சம்பவம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன், ரோமானியப் பேரரசு, உலகில் பெரும் புகழும் பெற்றிருந்த போது, அங்கு நிகழ்ந்தது. சம்பவம் பழமையானதாக இருந்த போதிலும், அதிலுள்ள உண்மை, இக்காலத்திற்கும் ஓரளவு பொருந்துவதாகவே இருக்கிறது.

இன்று முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்குமிடையே, வேற்றுமை மிகுதியாயிருக்கிறது. முதலாளியை, ஈவு இரக்கமற்ற ஒரு பூதமாகத் தொழிலாளி நினைக்கிறான். தொழிலாளி, திருப்தி செய்யமுடியாத ஓர் அரக்கனாக, முதலாளியின் கண்ணுக்குத் தோன்றுகிறான். இதன் விளைவாக, வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் ஏற்படுகின்றன. பொருள் உற்பத்தி குறைகிறது. பலருக்கும் கஷ்டங்கள் விளைகின்றன.

### காந்திஜியின் "செல்வக்காவல் கொள்கை"

அன்று அந்த முதியவர் கூறிய புத்திமதியைப் போல, இன்று மகாத்மா காந்தியும் நமக்குச் சில அறிவுரைகள் கூறுகிறார். அவர் உழைப்பைப்

போற்றுகிறார்; புகழ்கிறார், "ஆ, அது மலையைப் பிளக்கும்; வானை இடிக்கும், அதற்கு இணை என்ன இருக்கிறது!" பின்பு முதலாளிகளை அழைத்து, "ஐயன்மீர், உங்கள் தங்கக் கட்டிகளுக்கு மதிப்பு உண்டு, விலை உண்டு. ஆனால் உழைப்பு விலை மதிப்பற்றது தெரியுமா?" என்று கேட்கிறார். ஆனால், இந்த இரண்டும், அதாவது உழைப்பும், முதலும், தனித்தனியே இயங்குவதை, அவர் ஆதரிக்கவில்லை. "ஒன்றோடொன்று ஒத்துழைக்க வேண்டும்" என்கிறார். இதை அவர் வாய்மொழி மூலம் கேட்போம்:—"தொழிலாளியிடம் உழைப்பு இருக்கிறது; அத்துடன், தொழிலைத் திறம்பட நடத்தக்கூடிய ஆற்றலும் மதிநுட்பமும் இருக்கிறது. ஆகவே, முதலாளிகளையும் தொழிலாளர்களையும், நான் சம பங்காளிகளாய்க் கருதுகிறேன். தொழில்துறை இருவருக்கும் உரியதாகும். முதலாளிகளை எஜமானர்களாகவும், தொழிலாளர்களை வேலைக்காரர்களாகவும் நான் நினைக்கவில்லை."

கேட்பதற்கு இது நன்றாய்த்தான் இருக்கிறது. சிறப்பான உயர்ந்த இடத்தில் தொழிலாளர்களை உட்கார வைக்கிறார் காந்தியடிகள். ஆனால் "பெட்டிச்சாவி முதலாளியிடமல்லவா இருக்கிறது. அவர்கள் ஆயிரக் கணக்காகவும் லட்சக் கணக்காகவும் பணம் சம்பாதித்து, மனம் போன போக்கில் வீண் செலவுகள்செய்துகொண்டு உல்லாசமாக வாழ்க்கை நடத்துகிறார்கள். தொழிலாளர்களோ தங்கள் நியாயமான தேவைகளைக் கூட அடைய முடியவில்லை. இது அநியாயமல்லவா? பெயரளவுக்குச் சம பங்காளிகளாயிருந்தால், வயிறு நிரம்பி விடுமா?" என்று சிலர் கூறலாம்.

இந்த ஐயங்களை எல்லாம் போக்குவதற்காகத்தான் காந்திஜி, புகழ் பெற்ற தமது "செல்வக்காவல் கொள்கையை" ('தருமகர்த்தா பொதுவுடமைக் கொள்கை) வகுத்திருக்கிறார். அவர் கூறுகிறார்;— "தம்பீ, பெட்டிச்சாவி முதலாளி வைத்திருந்தால் என்ன? அவர் தம்முடைய செல்வத்தை வீணாக்க மாட்டார்; ஆண்டவன் கொடுத்த நிதியாக நினைத்து அதைப் பத்திரமாய்ப் பாதுகாப்பார். உங்களுக்கு வேண்டியதை அவர் செய்வார். நான் உருவாக்க விரும்பும் சமுதாயத்தில், முதலாளி இப்படித்தானிருப்பார்—சரி தானா?"

நம் ஐயங்கள் அகலுகின்றன. நியாய உள்ளம் படைத்தவர் ஆட்சேபம் சொல்வதற்கு, எதுவும் இல்லை.

பலாத்காரப் புரட்சியின் மூலம், முதலாளிகளை ஒழித்து, தொழிலாளர்களுடைய நிலைமையை உயர்த்த முயல்வதை, காந்தியடிகள் வெறுக்கிறார். முதலாளி—தொளிலாளருக்கிடையே வேற்றுமையை வளர்த்து, வர்க்கப் போராட்டத்தை ஊக்குவிப்பதை, அவர் வெகு கடுமையாக எதிர்க்கிறார். சுருங்கக் கூறினால், நமது தேசப்பிதா உருவாக்கவிரும்பிய புதிய சமுதாயத்தில், முதலாளிகளும் தொழிலாளர்களும், தத்தம் சக்தியை உணர்ந்து, சரிநிகர் சமமாக ஒத்துழைப்பார்கள்.

> "கிராமங்கள் பெண்களைப் போன்றவை. சமுதாயத்தின் வளர்ச்சி அவர்கள் கையில் தான் இருக்கிறது. நகரங்களைக் காட்டிலும் கிராமங்களே இயற்கையின் அருகாமையில் உள்ளன. அதனால் வாழ்வு ஊற்றுடன் அவை அதிகத்தொடர்பு கொண்டுள்ளன. இயல்பாகப் புண்ணை ஆற்றும் சக்தி கிராமங்களில் உண்டு. மக்களுக்கு அடிப்படைத் தேவைகளான உணவு, இன்பம், ஆகியவற்றுடன், வாழ்வின் சாதாரண கீதத்தையும், கிராமங்கள் தாமே ஏற்படுத்திக்கொண்டு, மகிழ்ச்சியடையும் அழகிய சடங்குகள் ஆகியவற்றையும் பெண்கள் தருவது போல, கிராமங்கள் தர வேண்டியது கடமையாகும். ஆனால் ஓயாத உழைப்பாலும், கிராமங்களினுடைய பயனைப் பிறர், அளவு மீறிக் கொள்ளையடிப்பதாலும், அவை சுரத்தின்றி, ஆக்க வேலையில் ஈடுபடாமல் நின்றுவிடுகின்றன. பல்லாண்டுகளாக இருந்த வீட்டரசி நிலையிலிருந்து, வீட்டு வேலைக்காரி என்ற இடத்திற்குக் கிராமங்கள் இறங்கி விட்டன."
>
> —கவியரசர் தாகூர்.

தொழிலாளர்களுக்கு நியாயம் கிடைக்க காந்தியடிகள் கூறும் வழி, ஒற்றுமையில் வலிமை இருக்கிறது என்பது. சுதந்திரப் போராட்ட காலத்தில் இதைச் சொல்லில் மட்டுமல்லாது, செயலிலும் நடத்திக் காட்டியவரல்லவா அவர்!

தொழிலாளர் முதலாளிகளுக் கிடையே, எத்தகைய உறவு நிலவ வேண்டும் என்பதை, காந்திஜி மற்றோரிடத்தில் இன்னும் தெளிவாகவும், இரத்தினச் சுருக்கமாகவும் கூறியுள்ளார். "முதலும், உழைப்பும், மணம் செய்துகொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிறேன்" என்கிறார் மகாத்மா. அதாவது, முதலாளிகளும் தொழிலாளர்களும் கணவன் மனைவியரைப் போல ஒத்த அன்புடன் வாழ்வதை, அவர் விரும்புகிறார்.

முதலாளியும் தொழிலாளியும் தொழிலுலகத்தில் இத்தகைய உறவு பூண்டால், எவ்வளவு நன்றாயிருக்கும்? இதனால் நாட்டிற்கும் உலகத்திற்கும் எவ்வளவோ நன்மை உண்டாகுமே!

# புதிய பஞ்சாயத்து ஆட்சியும் புள்ளி விவரங்களும்

(திரு க. குழந்தைவேல், பி.எஸ்.ஸி., புள்ளிவிவர உதவியாளர், புள்ளிவிவரத்துறை, சென்னை–6.)

[இது நாகரிக காலம். பிரச்னைகள் நாளுக்குநாள் பெருகிக்கொண்டே போகின்றன். அரசாங்கத்தின் அலுவல்களும் வளர்ந்துகொண்டே போகின்றன. அரசாங்கத்திற்கு மட்டுமல்ல ; மற்ற எல்லாத் துறைகளிலும், இன்றைய நவீன உலகில், புள்ளிவிவரங்கள் மிகவும் அடிப்படைத் தேவைகளாகும். புதிய பஞ்சாயத்து ஆட்சியிலும் அடிப்படைப் புள்ளிவிவரங்கள் அவசியம் தேவை. இந்தத் தேவையை, புள்ளிவிவர ஆதாரங்களுடன் வலியுறுத்துகிறது, இக்கட்டுரை.]

புள்ளி விவரங்கள் (statistics) என்பதின் ஆங்கிலச் சொல்லுக்கு முதற்சொல் அரசு (State) என்பதாகும். (Status) என்ற லத்தீன் வார்த்தையை அடிப்படையாகக் கொண்டு (Statistica) என்ற இத்தாலிய மொழியைத் தழுவி முடிவில் (Statistics) என்று உருப்பெற்றது.

அரசு என்பதின் அடிப்படையிலிருந்து இந்தச் சொல் பிறந்ததின் காரணம், முதன் முதலில் அரசாங்கங்கள் புள்ளிவிவரங்களைச் சேகரித்துப் பயன்படுத்தியமையே ஆகும்.

நாகரிகம் வளர வளர புள்ளி விவரங்களும் தேவைப்பட்டன. அரசாங்கம் மக்களைப் பற்றிய பல புள்ளி விவரங்களைத் தொகுத்தது. இன்று வரி விதிக்கவும், வாணிபப் பெருக்கத்திற்கும், படை திரட்டவும் மட்டுமல்லாமல், மக்களது வருமானம் எப்படி உள்ளது, விலைவாசிகளின் உயர்வு, உணவு உற்பத்தியின் அளவு, மக்கள் தொகை அதிகரிப்பு, குடும்பக்கட்டுபாடு, இப்படிப் பல நிலைகளிலும், பல துறைகளிலும் புள்ளி விவரங்கள் தொகுக்கப்பட்டு, அவற்றிற்கேற்ப அரசின் திட்டங்களும் கொள்கைகளும் வகுக்கப் படுகின்றன.

அரசாங்கத்தின் பல்துறை அலுவலகங்களில் புள்ளி இயலுக்கும் இன்று இடம் உண்டு. மேலும் இந்திய புள்ளி விவர நிறுவனம் (Indian Statistical Institute) இந்திய அரசாங்கப் பொருளாதாரப் புள்ளி விவர இயக்குநர் துறை (Directorate of Economics and Statistics, Govt of India) மாநில அரசாங்கப் புள்ளி விவரத்துறை, மாவட்ட நிலை என்றெல்லாம் வளர்ந்து இன்னும் ஒவ்வொரு நிலையிலும், குறிப்பாக நமது மாநிலத்தில் சிறப்பானதோர் அம்சமாக வட்ட நிலைகளிலும் (Taluk level) அதன் வளர்ச்சி பெருகி வருகிறது.

### பஞ்சாயத்து ஆட்சிக்கு அவசியம் தேவை

தற்போது பஞ்சாயத்து யூனியன் அளவில், வேளாண்மை முதலான திட்டங்களை நிறைவேற்று கின்ற காரணங்களால் அவற்றைப்பற்றிய சரியான புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படவேண்டும்.

இன்றைய சூழ்நிலையில் நம் நாட்டை எதிர் நோக்கியுள்ள முக்கியமான பிரச்சனைகள் இரண்டாகும். ஒன்று நாட்டின் ஜனத்தொகை அதிகரிப்பு, மற்றது உணவுப் பிரச்னை.

எனவே ஜனத்தொகை அதிகரிப்பு பற்றிய விவரங்கள், உணவு உற்பத்தியை அதிகரிப்பதன் கீழ் செயல்படும், உணவு உற்பத்தித் திட்டம், தரத்திற்கேற்ப நிலங்களைப் பகுத்துப் பயிரிடுதல் மொத்தப்பரப்பில் பயிரிடும் பரப்பு, தரிசு நிலம் புறம்போக்கு முதலான விவரங்கள், இயற்கை உரம் எவ்வளவு கிடைக்கின்றது, இரசாயன உரம் எவ்வளவு தேவைப்படும், பொறுக்கு விதை எவ்வளவு வேண்டும் என்றெல்லாம் கணித்துச் சிறப்புறச் செயல்பட, பஞ்சாயத்து யூனியன் அளவில், நவீன முறைப்படி சேகரித்துப் பகுத்துத் தொகுக்கப்பட்ட உண்மையான புள்ளி விவரங்கள் மிகவும் அத்தியாவசியமாகின்றன என்பது சொல் லாமலே விளங்கும்.

### விவசாயம் பெருக

வேளாண்மை பற்றிய புள்ளி விவரங்களை (Agricultural Statistics) சீரிய முறையில் செம்மையாக வும், உள்ளிப்போடும் மிகுந்த தற்காப்போடும் உண்மையான புள்ளி விவரங்களைச் சேகரிப்பதில் தீவிர கவனம் செலுத்தப்பட வேண்டும். பஞ்சாயத்து யூனியன்களில் பணியாற்றும் விவசாய அலுவலர்களும், கிராம சேவக்குகளும் அங்கு சேகரிக்கப்படும் வேளாண்மை பற்றிய புள்ளி விவரங்களில் மிக மிக விழிப்பாயிருக்க வேண்டியது மிகவும் அத்தியாவசியமாகும். கூடுமானால், கிராம சேவக்குகளுக்கு, பயிற்சி நிலையங்களில்,

புள்ளியலின் அடிப்படைத் தத்துவங்களை ஓரளவு போதிப்பது சாலச்சிறப்புடையதாகும். ஏனெனில், உணவு உற்பத்தி, பயிரிட்ட பரப்பு, நீர்ப்பாசனம் பெற்ற நிலப் பரப்பு, நவீன சாகுபடி ஆகிய புள்ளி விவரங்களைத் தொகுப்பதில் பஞ்சாயத்து யூனியன் ஒரு யூனிட் (அளவாக)டாக இருப்பதால், அங்கு சேகரிக்கப்படுகின்ற புள்ளி விவரங்களைக் கொண்டு, மாவட்டம், மாநிலம், தேசம் என்ற நிலைகளில் படிப்படியாகப் புள்ளி விவரங்கள் தொகுக்கப் படும் அல்லவா?

உலக அரங்கில், ஜனத்தொகையைப் பற்றிக் குறிப்பிடும்போது, கி.பி. 1600 ம் ஆண்டில் உலக மக்கள் தொகை சுமார் 50 கோடியாக இருந்தது. சுமார் கி.பி. 1900 வரை, அது 100 கோடி அளவை எட்டவேயில்லை. ஆனால், 1951-ல் உலக மக்கள் தொகை 245 கோடியாகும். 1961-ல் 300 கோடிக்கும் மேலாக உயர்ந்துள்ளது. அதாவது, ஆண்டொன்றுக்கு சுமார் 5 கோடி வீதம் அதிகரித்து வருகின்றது. அதாவது ஒரு நாளில் 140,000 பேர்கள் [நிமிடத்திற்கு 100 பேர் வீதம்] ஜனத்தொகை அதிகரித்து வருகின்றது. இந்த அதிகரிப்பு ஆரம்பத்தில் வருடமொன்றுக்கு ஒரு சதவீதத்தில் 10-ல் ஒரு பங்குக்கும் குறைவாகவே இருந்திருக்க வேண்டும். நிகழும் நூற்றாண்டில் இந்த அதிகரிப்பு ஒரு சதவீதத்தைத் தான் எட்டியது. ஆனால் 1·5 சதவீதத்தை ஏற்கெனவே தாண்டி இன்னும் வளர்ந்து கொண்டே போகின்றது. பிறப்பைக் கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளைவிட இறப்பைக் கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் மிக அதிகமாக மேற்கொள்ளப்பட்டு வருவதே மக்கள் தொகை இவ்வளவு பெருகுவதற்குக் காரணமாகும். இந்தியாவில் மட்டும் ஜனத்தொகை வளர்ச்சி 2.1. சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளதைக் கவனித்தல்வேண்டும்.

### ருசிகரமான தகவல்கள்

அகில இந்திய ரீதியில் கீழுள்ள சில புள்ளி விவரங்கள் ருசிகரமானவையாகும்.

(அ) இந்தியாவின் பரப்பு சுமார் 1,300,000 சதுர மைல்களாகும்; (820 மிலியன் ஏக்கர்கள்) (அல்லது) 82 கோடி ஏக்கர்கள். அவற்றில் பயிர் செய்யும் பரப்பு சுமார் 330 மில்லியன் ஏக்கர்கள். இது மொத்தப்பரப்பில் 40 சதவீதமாகும். 20 சதவீதம் பாசனம் பெறுகின்றது.

(ஆ) மொத்த மாவட்டங்கள் 331; மொத்த கிராமங்கள் 500,000.

(இ) ஒருவரிடம் சராசரி பயிரிட உள்ள பரப்பு ஒரு ஏக்கர்; பயிரிடும் நிகரப் பரப்பு 0·8 ஏக்கர். பாசனம் பெறும் பரப்பு: சென்னை, பஞ்சாப் 41 சதவீதம். ஆந்திரா, பீகார், உத்திரப் பிரதேசம் 25 முதல் 30 சதவீதம்; மற்றப் பிரதேசங்கள் 10 சத வீதத்திற்கும் கீழாகும்.

### சிந்தித்துச் செயலாற்ற உதவுகிறது

புள்ளி விவரங்கள், நம் எண்ணத்தை ஒரு வரம்புக்கு உட்படுத்துகின்றன. ஆகவே நன்றாகச் சிந்தித்துச் செயல்படுகின்றோம். அதனால் திட்டம் வகுக்கின்றோம்.

அதிகாரிகளோடு, பஞ்சாயத்துத் தலைவர்களும் அங்கத்தினர்களும், பொது மக்களும் ஒத்துழைத்து, திட்டங்களுக்கெல்லாம் உயிர்நாடி போன்ற புள்ளி விவரங்களின் தரத்தை உயர்த்தவும், புள்ளியியல் அளிக்கும் உண்மைகளைப் புரிந்துகொண்டு மக்களின் வாழ்க்கைத்தரம் உயரப் பாடுபடுவோம்.

### பொற்கொல்லர்கள் சிறு தொழில், வியாபாரம் தொடங்க உதவி

தங்கக் கட்டுப்பாடு உத்தரவினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள், வேறு தொழில் அல்லது சிறு வியாபாரம் தொடங்கி ஜீவனோபாய வசதி பெற வழி செய்வதற்காக, பொற்கொல்லர்கள் கடன் வசதிக்கென மேற்கொண்டு ரூ. 20 லட்சம் வழங்க அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது.

---

"லாலா லஜபதிராய் மகோன்னதமான தலைவர். அவரது ஸ்தானத்தை வேறு யாராலும் நிரப்ப முடியாது. இவ்வளவு பரந்த அளவில் பொதுநலத் தொண்டாற்றியவர்கள் வேறு யாருமே இல்லை."

—பண்டித மோதிலால் நேரு

---

## கிராம நலம்

சந்தா விவரம்: ஆண்டு சந்தா ரூ. 1.50

# இந்தியாவில் சமூகப்பாதுகாப்பு

திரு அசோக் கே. சென்

(மத்திய அரசாங்க சட்டம்—சமூகப் பாதுகாப்பு அமைச்சர்)

நாடு பூராவுக்கும் ஏற்றதான சமூகப் பாதுகாப்புத் திட்டமொன்றை வரைவது இந்தச் சமயத்தில் சாத்தியமா என்ற கேள்வி எழுவது இயல்பே. ஆனால் இதற்கு விடையளிப்பது அவ்வளவு சுலபமல்ல. எதிர்காலத் தேவைகளைப் பற்றி பரந்த அளவில் அறிந்துகொண்டு, அவற்றை எந்த வரிசைக் கிரமத்தில் எடுத்துக் கொள்ளலாம் என்பதைக் கோடிட்டுக் காட்டுவதுதான் இப்பொழுது சாத்தியம்.

### தற்போதைய திட்டங்கள்

நாட்டில் தற்போது அமுலில் இருக்கும் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கை, தொழிலாளர்களுக்கான அரசாங்க இன்ஷூரன்ஸ் சட்டம் ஒன்றுதான். எனினும், வேறு சில திட்டங்களும் உள்ளன. உதாரணமாக, தொழிலாளர் நஷ்டஈடுச் சட்டம், தொழிலாளர் க்ஷேமநிதித் திட்டம், சுரங்கத் தொழிலாளர் க்ஷேம நிதித் திட்டம், பேறு கால நலச் சட்டம் போன்ற நடவடிக்கைகள் குறிப்பிட்ட பிரிவினருக்கு மட்டும், சிறிதளவு சமூகப் பாதுகாப்பை அளித்து வருகின்றன.

> சோஷலிச சமுதாயம் நமது இலட்சியம். இந்த இலட்சியத்தை அடைவதற்கான எல்லா முயற்சிகளும் செய்யப்பட்டு வருகின்றன. மத்திய அரசாங்க அமைச்சரவையில் சமூகப் பாதுகாப்புக்கென்றே ஒரு தனித்துறை அமைக்கப்பட்டுள்ளது.

இத்தகைய சட்டபூர்வமான நடவடிக்கைகள் மக்கள் தொகையில் கணிசமான பகுதியினருக்கு நலமளிப்பதாகவிருந்தாலும், விரிவான சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்கு ஈடாக இவை ஆகமுடியாது. பிரச்னையின் ஒரு சிறு பகுதியைத்தான் அவை தொடுகின்றன. நகரங்களில் வசிக்கும் எட்டு கோடி மக்களில் ஒரு சிறு பகுதியினருக்குத்தான் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் பயன்படுகின்றன. கிராம மக்களையும் சேர்த்து, எல்லோருக்குமாக தேசியத் திட்டம் ஒன்றை உருவாக்குவது ஒரு பிரம்மாண்டமான பணியாகும். இந்த விதத்தில் பெரிய முயற்சி எதையும் மேற்கொள்வது, நிதி வசதியைப் பொறுத்தவரையில், எளிதல்ல என்பது தெளிவு.

### கவனக்குறைவு

நமது திட்டமிட்ட அபிவிருத்தியில் சில திட்டங்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டியிருப்பதால் சமூக நலம், சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் அதிக கவனம் செலுத்தப்படாமலேயே இருந்துவிட நேருகிறது. இன்றைய நிலையில், சமூக நலத் திட்டங்கள் எவ்வளவுதான் அவசியமானவையாகவும் முக்கியமானவையாகவும் இருந்தபோதிலும், உணவு உற்பத்தி அதிகரிப்பு, வேலை வாய்ப்புகள் அதிகரிப்பு, தொழில் அபிவிருத்தி ஆகியவை சம்பந்தமான திட்டங்களுக்குத்தான் முதலிடம் அளிக்க வேண்டியுள்ளது.

அபிவிருத்தியடைந்துவரும் நம் நாட்டில் சமூகப் பாதுகாப்புப் பிரச்னை மிகப் பெரியதாக இருப்பினும், நிதி வசதிக் குறைவு காரணமாக, அடுத்து சில ஆண்டுகளுக்கு குறிப்பிட்ட சில சமூக நல நடவடிக்கைகளைத்தான் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. இந்தவகையில் இனிமேல்தான் திட்டமொன்றுவரையப்படவேண்டும். எனினும் வருங்காலத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் எவ்வாறு அமையும் என்பதைக் கூறலாம்.

குழந்தை நலத் திட்டங்கள்; ஷெட்யூல்டு ஜாதியினர், பழங்குடி மக்கள் ஆகியோருக்கான அபிவிருத்தித் திட்டங்கள்; எதிர்கால அபிவிருத்திக்கு ஆதாரமாக நிதி வசதியுடன் கூடிய ஒரு உறுதியான நிர்வாக அமைப்பு ஏற்பட சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் அனைத்தையும் ஒருங்கிணைத்தல்; வைத்திய வசதிகள், மறுவாழ்வு அளிக்கும் வேலைகள், முதலிய தற்போதுள்ள திட்டங்களின் தரத்தை உயர்த்துதல், தற்போதுள்ள திட்டங்களை இதர துறைகளுக்கும் விஸ்தரித்தல், வேலையிழப்பு, முதுமை, மரணம் ஆகியவற்றினால் ஏற்படும் கஷ்டங்களிலிருந்து பாதுகாப்பு; கிராமங்களிலும், நகரங்களிலும் சுயமாக வேலை செய்து பிழைப்பவருக்கும் வேலையற்றிருப்பவருக்கும்,

வைத்திய வசதியளிக்க சமூக இன்ஷூரன்ஸ் திட்டங்களை அமல் நடத்துதல்; நாடு பூராவுக்குமான தேசீய சுகாதாரத் திட்டம்; பல்வேறு திட்டங்களினால் கிட்டக்கூடிய பலன்கள், அவற்றுக்கு ஆகும் செலவு ஆகியவற்றை ஆராய்ந்து அதன் அடிப்படையில் மேற்சொன்ன திட்டங்களை எந்த வரிசைக் கிரமத்தில் மேற்கொள்ளலாம் என்பதைக் கவனமாக நிர்ணயிக்க வேண்டும்.

**விஷய விளக்கப் பணி**

நகரங்களில் சுயமான தொழில் செய்து பிழைப்பவர்கள் விஷயத்தில், உதாரணமாக, வர்த்தகர், கைவினைஞர் ஆகியோர் விஷயத்தில், திட்டங்களை இஷ்டபூர்வ அடிப்படையில் நடத்தலாமா அல்லது தனி ஸ்தாபனங்களின் மூலம் நடத்த இயலுமா என்பதை ஆராய்ந்து அறியலாம். அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் பலவற்றிலும், மேம்பட்ட நாடுகளிலும் கட்டாய சமூகப் பாதுகாப்புத் திட்டங்களோடுகூட இத்தகைய தனியார் ஸ்தாபனங்களும் இயங்கி வருகின்றன. ஒரே வகைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் ஒன்று சேர்ந்து தமக்குள்ளேயே பரஸ்பர உதவிக் கூட்டுறவுகளை அமைத்துக் கொள்ளலாம். இவற்றை ராஜ்ய மட்டத்திலும், ஜில்லா மட்டத்திலும் உள்ள இதே மாதிரியான ஸ்தாபனங்களுடன் இணைத்துக் கொள்ளலாம். ஒரு மொத்தமான விகித அடிப்படையில் நிதி சேர்த்து தேவையான சமயங்களில் நிதியுதவி அளிக்கலாம். இந்த நிதிக்கு அரசாங்கமும் ஸ்தல ஸ்தாபனங்களும் நிதி அளித்து உதவலாம்.

கிராமங்களில் க்ஷேம நலத் திட்டங்களையும் அமல் நடத்தும்போது, மக்களுடைய விசேஷத் தேவைகளையும் கருத்துக்களையும் கவனத்தில் கொள்வது மிக முக்கியமாகும். சந்தா அடிப்படையில் அமைந்த சமூக இன்ஷூரன்ஸ் திட்டத்தை ஓர் ஆடம்பர நடவடிக்கையாக எண்ணி விவசாயிகள் அதை வெறுக்கக்கூடும். எனவே, சமூகப் பாதுகாப்புத் திட்டத்தினால் கிட்டக்கூடிய பலன்களைப் பற்றி கிராம மக்கள் அறிந்து கொள்வதற்கு விஷய விளக்கப் பணி பெரிதும் தேவைப்படும்.

---

## இராமநாதபுரம், தஞ்சாவூர் பகுதிகளில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உதவி

சமீபத்தில் இராமநாதபுரம், தஞ்சாவூர் மாவட்டங்களில் கடலோரப் பகுதிகளைத் தாக்கிய புயலினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வலையும், படகுகளும் வழங்குவது பற்றி அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

**கீழ்கண்ட முறையில் உதவிகள் அளிக்கப்படும் :**

புயலினால் வலைகளை இழந்துவிட்ட மீனவர்களுக்கும், பழுது பார்க்க இயலாத அளவில் வலை சேதமடைந்துவிட்ட மீனவர்களுக்கும், நபருக்கு 25 கிலோகிராம் நைலான் (மதிப்பு சுமார் ரூ. 900) வழங்கப்படும். 50 சதவிகித உதவித் தொகை, 50 சதவிகித கடன் என்ற அடிப்படையில் இது தரப்படும். கடன் தொகையை 5 ஆண்டுக் காலத்தில் 50 மாத தவணைகளில் திருப்பித் தரவேண்டும்.

பருத்தி நூல் வலை கேட்கும் மீனவர்கள் விஷயத்தில் அதிகபட்சம் ரூ. 300 பெறுமான பருத்தி நூல் பாதி உதவித் தொகை பாதி கடன் என்ற அடிப்படையில் வழங்கப்படும். இக்கடன் தொகையை 3 ஆண்டுகளில் 30 மாதந்தர தவணைகளில் திருப்பித் தரவேண்டும்.

வலைகளைப் பழுதுபார்ப்பது சம்பந்தமாக 10 கிலோகிராம் நைலான் அல்லது ரூ. 100 பெறுமான பருத்தி நூல் மேற்கண்ட அடிப்படையிலேயே வழங்கப்படும். கடன் தொகையை 2 ஆண்டுகளில் 20 தவணைகளில் திரும்பச் செலுத்தவேண்டும். பருத்தி நூல் வலை பழுது பார்க்கும் செலவு ரூ. 50 அல்லது அதற்கு குறையுமானால், அந்தத் தொகை பூராவும் மானியமாகக் கொடுக்கப்படும்.

படகுகளை இழந்தவர்கள் அல்லது படகு பழுது பார்க்கமுடியாதபடி பழுதடைந்த நிலையில் இருந்தால், அவர்கள் விஷயத்திலும் பாதி மானியம், பாதி கடன் என்ற அடிப்படையில் ஒரு நபருக்கு அதிகபட்சம் ரூ. 2,000 தரப்படும்.

படகுகளை பழுது பார்க்க பாதி மானியம் பாதி கடன் என்ற அடிப்படையில், ரூ. 750 வரை நிதி உதவி தரப்படும்.

பழுது பார்க்கும் செலவு ரூ. 100 அல்லது அதற்கும் குறையுமானால், அத்தொகை மானியமாகத் தரப்படும். பழுது பார்க்கும் செலவு ரூ. 100-க்கும் 200-க்கும் இடையில் இருக்குமானால், ரூ. 100-க்கும் மேற்பட்ட தொகை கடனாகக் கருதப்பட்டு, 2 ஆண்டுகளில் 20 மாதாந்திர தவணைகளில் திரும்ப வசூலிக்கப்படும்.

படகுகள் கட்ட அல்லது பழுது பார்க்க கொடுக்கப்படும் கடன் தொகை 10 ஆண்டுகளில் 100 மாதாந்திர தவணைகளில் திரும்ப வசூலிக்கப்படும். இந்த கடன்கள் விஷயத்தில் ஆண்டுக்கு 5½ சதவிகித வட்டி வசூலிக்கப்படும்.

# முட்டைகளைப் பாதுகாக்கும் முறைகள்

முட்டைகளைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். அவை அசுத்தமாக இருந்தால், தண்ணீரில் கழுவக் கூடாது. ஒரு சதவீத சோடியம் ஐட்ராக்சைட் (Sodium Hydroxide) திரவத்தை, ஒரு சுத்தமான துணியில் நனைத்துக்கொண்டு முட்டைகளைத் துடைக்கவேண்டும்.

### முட்டைகளுக்குச் சுண்ணும்புச் சத்து

சிறிய கோழிப் பண்ணையை நடத்துவோராக இருந்தால், சிறிதளவு முட்டைகளையே விற்பனைக்கு வைத்திருப்பவராக இருந்தால், முட்டைகளுக்குச் சுண்ணும்பைப் பூசிப் பாதுகாத்து வைக்கலாம்.

சிறிதளவு சுண்ணும்பை ஒரு பாத்திரத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும்; கொஞ்சம் கொஞ்சமாக அதில் தண்ணீரை விடவேண்டும். சுண்ணும்பு நன்ருக சூடு தணிந்து சில்லென்று ஆக வேண்டும். அதன் பின்னர் கொஞ்சம் உப்பு போட்டு நிறையத் தண்ணீர் விடவேண்டும். இந்த சுண்ணும்பு நீரில் முட்டைகளை நன்ருக முழுகும்படி நனைத்து, வெளியே எடுத்து உலர்த்திவிடவும்.

> வெயிற்காலத்தில், உஷ்ணத்தின் காரணமாக, முட்டைகள் சீக்கிரம் கெட்டுவிடுகின்றன. இருந்த போதிலும், முன்னெச்சரிக்கையாக சில எளிய முறைகளைக் கைக்கொண்டால், முட்டைகளை நெடு நாள் கெடாமல், புதியதாக வைத்திருக்கலாம்.

சில முட்டைகளை அவ்வாறு நனைத்து எடுத்த பிறகு, சுண்ணும்பு நீர் கட்டியாகி வந்தால் மேலும் தண்ணீர் ஊற்றி அதைப் பயன்படுத்தவும்.

இவ்வாறு சுண்ணும்பு பூசப்பட்ட முட்டைகள் குளிர்காலத்தில் நான்கு மாதங்களும், கோடைக் காலத்தில் இரண்டு வாரங்களும் கெடாமல் புதியன வாக இருக்கும்.

### முட்டைகளுக்கு எண்ணெய் பூசுதல்

சுண்ணும்பைப் பூசுவதற்குப் பதிலாக எண்ணெயையும் பூசி, அதே அளவு காலத்திற்கு முட்டைகளைக் கெடாமல் பாதுகாக்கலாம். முட்டைகளை, தேங்காய் எண்ணெயில் நன்ருக மூழ்கும்படி அரை நிமிட நேரம் வைத்திருந்து பின்னர், வெளியே எடுத்துப் பத்திரப்படுத்தி வைக்க வேண்டும்.

### முட்டைகளை வெந்நீரில் வைத்தெடுத்தல்

முட்டைகளைப் புதியதாக வைத்திருக்க, வெந்நீரில் அவற்றை தோய்த்து எடுப்பதும் ஒரு நல்ல முறையாகும்.

முட்டைகளை வலைக்கம்பிக் கூடையில் வைத்து, அந்தக் கூடையை வெந்நீரில் (130 °F) பதினைந்தி லிருந்து இருபது நிமிடங்கள் வரையில் வைத்திருக்க வேண்டும். பின்னர் வெளியே எடுத்து பத்திரப் படுத்தி வைக்கவேண்டும். இந்த முறையில் பாதுகாத்து வைக்கப்படும் முட்டைகள் சுமார் பதினைந்து நாட்களுக்குக் கெடாமல், நன்ருக இருக்கும்.

மேலும் அவற்றைப் பதினெட்டு மணி நேரம் சுண்ணும்பு நீரில் தோய்த்து வைப்பதன்மூலம் அவற்றின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்க லாம்.

கிராமக் கோழிப் பண்ணைக்காரராக இருந்து, ஒரு வாரத்திற்கு 100—லிருந்து 200 முட்டைகள் வரை பாதுகாத்து வைக்கவேண்டியிருந்தால், அதற்கான எளிய பாதுகாப்பு முறைகள் இங்கே கூறப் படுகின்றன.

### மண்கலத்தில் குளிர்ந்த முட்டைகள்

ஒரு மண்கலத்தை எடுத்து அதன்மேல் பாதியில் பல சந்துகளைச்செய்து விடவேண்டும். இந்தச் சந்துகளின் வழியாகக் காற்ருேட்டம் ஏற்பட்டு மண் பானையிலுள்ள முட்டைகள் அழுகாமல் பாதுகாக்கப்படும்.

திறந்தவெளியில் ஒரு மேடான இடத்தைத் தேர்ந்தெடுத்து அந்த மண்பானை பிடிக்கும் அளவுக்கு ஒரு குழி வெட்ட வேண்டும். அந்தக் குழியில், சம அளவில் மணலையும், உதிரி மண்ணையும் கலந்து, மூன்றங்குல உயரத்திற்கு இட வேண்டும். பானையின், சந்துக்கள் செய்யப்பட்ட மேல்பாகம் பூமி மட்டத்திற்கு மேலே இருக்கும்படி, அந்தக் குழியில் மண்கலத்தை வைத்து, பாதி மண்கலத்தைப் புதையும்படிச் செய வேண்டும். பானையின் அடியில் சுத்தமான- உலர்ந்த புல்லைப் பரப்பி, ஒரு துணியினுல் பானையின் வாயைக் கட்டி விடவேண்டும். வெயிற் காலத்தில், பானையைச் சுற்றிலும் அடிக்கடி தண்ணீர் ஊற்றிவர வேண்டும். இந்த முறையினுல் முட்டைகள் தன்மையாக வைத்திருக்கப்படும்.

அல்லது, மேல்பாதியில் சந்துகள் செய்யப்பட்ட பானையை எடுத்து சுத்தமான, உலர்ந்த புல்லை அடியில்பரப்ப வேண்டும். அதனுள் முட்டைகளை

வைத்து ஒரு துணியினல் பானையின் வாய்ப்புறத்தைக் கட்டி விடவேண்டும். பானையின் கீழ்ப்பாதியை ஒரு பழைய துணி அல்லது கோணிப்பையினல் சுற்றி மூடிவிடவேண்டும். அதன் பின் அந்தப் பானையை வசதியான உயரத்தில், ஒரு ஸ்டாண்டின் மேல் வைக்கவேண்டும். பின்னர் அந்தப் பானையின் கீழ்ப்பகுதியில் சுற்றப்பட்டுள்ள துணி அல்லது கோணிப்பையை தண்ணீர் ஊற்றி நனைத்துக்கொண்டே இருக்கவேண்டும். அதனுள் முட்டைகள் இருக்கும்வரை அதைச் சுற்றியுள்ள துணி அல்லது கோணி ஈரமாகவே இருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும்.

### குளிர்ப்பெட்டியைப் பயன்படுத்துதல்

மேலும் அதிகமான முட்டைகளைச் சேமித்து வைப்பதாயின், குளிர் பெட்டியை உபயோகிக்க வேண்டும். கம்பிவலை அடித்த ஓர் அலமாரியில் முட்டைகளை வைத்து, அந்த அலமாரியை ஒரு அறையில் வைக்கவேண்டும். அலமாரியின்மேல் ஒரு தட்டில் தண்ணீர் வைத்து அலமாரியைச் சுற்றிலும் கோணிப்பையைத் தொங்க விட்டு அந்தத் தண்ணீர் கோணியை நனைத்துக்கொண்டே இருக்கும்படி அமைக்க வேண்டும். மேலே வைக்கப்பட்ட தட்டில் உள்ள தண்ணீரில் சில காப்பர் சல்பேட் துண்டுகளைப் போட்டு வைக்க வேண்டும். அறையைக் குளிர்ச்சியாக வைத்திருக்க கதவு, ஜன்னல்களுக்கு ஈரக் கோணிகளைத் தொங்க விடவேண்டும். கதவுகளையும் ஜன்னல்களையும் திறந்து வைக்கவேண்டும், தொங்கவிடப்பட்ட திரைகளின்மேல் தவருமல் தண்ணீர் தெளித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

எந்த முறையைக் கையாண்டபோதிலும் கீழ்க்கண்ட விஷயங்களை மறக்கக்கூடாது.

* முட்டைகளைச் சுத்தமாக வைக்கவேண்டும்.

* முட்டையிடும் கோழிகளை ஒழுங்காகப் பராமரிக்க வேண்டும்.

* முட்டையிடும் கோழிகளுக்கு நல்ல கூடுகளை அமைத்திருக்க வேண்டும்.

* அடிக்கடி முட்டைகளைக் கூடுகளிலிருந்து எடுத்து விடவும். குறைந்த பட்சம் ஒரு நாளைக்கு மூன்று நான்கு முறையாவது முட்டைகளை, ஒரு சுத்தமான கூடையில் சேகரிக்க வேண்டும்.

* எப்பொழுதும் முட்டையின் அகன்ற அடிப்பாகம் மேலே இருக்கும்படி வைக்கவேண்டும்.

* முடியுமானல் முட்டைகளைக் கூடுகளிலிருந்து சேகரித்த உடனே குளிரச் செய்யவும். முட்டைகளைக் குளிரச் செய்யவேண்டிய சரியான அளவு 50°F லிருந்து 55°F வரையில் இருக்க வேண்டும்.

"அதிகமான நல்ல முட்டைகள் என்ருல் அதிகமான இலாபம் என்று பொருள்".

## 5 லட்சம் கிராமங்கள் — 500 கோடி ரூபாய் !

பஞ்சாப் மாநிலத்தில், இரு பகுதிகளில், 100 கிராமங்கள், குடிதண்ணீர்-துப்புரவுத் திட்டங்களின் கீழ் பயன்பெறும். இதற்கான ஓர் ஒப்பந்தம், சமீபத்தில், பாரத அரசாங்கம்—உலக சுகாதார நிறுவனம் ஆகியவைகளுக்கிடையே கையெழுத்தாகியது.

தற்பொழுது இந்தப் பகுதிகளில் நிலைமை படுமோசம். மலைப் பிரதேசங்களில் மூன்று மைல்கள் நடந்து சென்ருல் தான், சுத்தமான குடி தண்ணீர் கிடைக்கும்.

இந்தப் புதிய திட்டத்தின் கீழ், கிராமங்களுக்கு சுத்தமான தண்ணீர் வழங்கும் திட்டம், துப்புரவுத் திட்டம் எல்லாம் வெகுவேகமாக அமுல் நடத்தப்படும். கிராமப்புறங்களில் நோய், சுகாதாரக்கேடு ஆகியவை கட்டுப்படுத்தப்படும்.

சமுதாய அபிவிருத்திப் பிரதேசங்களில் சுகாதார ஏற்பாடுகளை அபிவிருத்தி செய்தல், இத் திட்டத்தின் ஒரு பகுதி வேலையாகும். மக்களிடையே சுகாதாரக் கல்வி தீவிரமான முறையில் பரப்பப்படும். சுகாதார, சமுதாய அபிவிருத்தி தொண்டர்களுக்குப் பயிற்சியளிக்க, இத் திட்டத்தின் கீழ் ஏற்பாடுகள் செய்யப்படும்.

முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில், பாரத அரசாங்கம், கிராமக் குடிதண்ணீர் திட்டத்திற்காக 75 கோடி ரூபாய் செலவு செய்துள்ளது. இப் பிரச்சனை அவ்வளவு சிரமத்தைத் தராத நாட்டின் மிகப் பெருவாரியான பிரதேசங்களில், கிராமக் குடி தண்ணீர் வழங்கு திட்டம் நல்ல முறையில் சமாளிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள 5 லட்சம் கிராமங்களுக்கும் குடி தண்ணீர் வழங்க, சுமார் 500 கோடி ரூபாய் செலவிடுவதென மதிப்பிடப்பட்டுள்ளது.

நகரப்புறங்களில், 20 கோடி மக்களுக்கு மேல் சுத்தமான குடிதண்ணீர் கிடைக்காமல் அவதியுறுகின்றனர் என்று கணக்கிடப்பட்டுள்ளது. ஆப்பிரிக்கா, ஆசியா, லத்தீன் அமெரிக்கா ஆகிய மூன்று கண்டங்களில் உள்ள நாடுகளில் உள்ள நகர மக்களுக்கு எல்லாம் குடி தண்ணீர் 1980-ம் ஆண்டுக்குள் வழங்க வேண்டுமெனில், ஆண்டு ஒன்றுக்கு குறைந்த அளவு 40 கோடி டாலர் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

உலக சுகாதார நிறுவனத்தின் சமுதாய குடி தண்ணீர் வழங்கு திட்டத்தின்கீழ், தற்பொழுது சுமார் 50 நாடுகளுக்கு மேல் உதவி பெறுகின்றன.

(உலக சுகாதார நிறுவனம் வெளியிட்ட அறிக்கையிலிருந்து.)


## தேனாம்பேட்டை பொருட்காட்சியில்

## அரசாங்கத் துறைகளின் வளர்ச்சிப்பணிகள் விளக்கம்














1. பொருட்காட்சி நுழைவாயில்.........
2. கிராமக் கைத்தொழில் பகுதிக்கு, தமிழ்நா கவர்னர் வருகை
3. மின்சாரத்துறைப் பகுதியில், மத்திய அரசாங் உணவு அமைச்சர்
4. சிக்கனச் செலவில் நீர் இறைக்கும் காற்று இயந்திரம்—பெருவழித்துறை

## சென்னையில், அண்மையில் நடைபெற்ற அகில இந்திய கதர், சுதேசி, தொழில் பொருட்காட்சி



1



2




3


4



5




6



7


8

1. விவசாயத் துறை
2. மின்சார போர்டு
3. பொதுப்பணித் துறை
4. நெய்வேலி நிலக்கரித் திட்டம்
5. காவல் துறை
6. செய்தித் துறை
7. மீன் துறை
8. கிராமநலத் துறை














# கிராம நலத்துறை அரங்கு

**புதிய பஞ்சாயத்து ஆட்சிபற்றிய காட்சிப் பொருள்களை பொதுமக்கள் கண்டு விளக்கம் பெறுகின்றனர்**

1. பஞ்சாயத்து வரவு செலவுத்திட்ட விளக்கப் படம்
2. காந்திஜியின் 'இலட்சியக் கிராமம்'
3. கிராமத்தின் உயிர்நாடிகள்- பஞ்சாயத்து, பள்ளிக்கூடம், கூட்டுறவுச் சங்கம்
4. பல்வேறு அபிவிருத்திப் பணிகள்
5. சத்துணவுத் திட்டம்



சிறு கதை:

# குறையும் நிறையும்

(அறந்தை மு. நாராயணன்)

கந்தசாமியின் உள்ளத்தில் பெரும் போராட்டம். அவன் மனம் இரு துருவங்களாகப் பிரிந்து எதிரும் புதிருமாக நின்று நெடுநேரம் போராடிக் கொண்டிருந்தது. இறுதியில் ,மனப்போர் ஓய்ந்து ஒரு முடிவு ஏற்பட்டது.

திண்ணையை விட்டு எழுந்தான் கந்தசாமி. ஒரு கைப்பையை எடுத்து தனது துணிமணிகளை அதில் திணிக்கவாரம்பித்தான்.

அவன் ஒரு வாலிபன்; அவனது தந்தை காளிமுத்து சேர்வைக்கு 'நஞ்சையும் புஞ்சையுமாக' சுமாரான அளவுக்கு நிலம் இருந்தது. தஞ்சை மாவட்டம் அறந்தாங்கி தாலூகாவில் தென்னேரம் உள்ளது வெள்ளூர். அந்த குக்கிராமத்தில் காளிமுத்து சேர்வை ஒரு கண்ணியமான விவசாயி.

தாயற்ற தனது மகனையும் மகளையும் சீரும் சிறப்புமாக வளர்த்தார். தன் மகனைப் படிக்க வைத்துப் பார்த்து மகிழவேண்டும் என்பதை அவர் தனது வாழ்வின் லட்சியமாகக் கொண்டிருந்தார். கந்தசாமி பள்ளி வயது அடையும் சமயத்தில், வெள்ளூரிலேயே ஆரம்பப் பள்ளி உருவாகியது. அதில் ஐந்தாவதுவரை படித்து முடித்து விட்டான். கந்தசாமியின் அதிருஷ்டம் அந்த வருடம் வெள்ளூரிலிருந்து மூன்று மைல் தொலைவிலுள்ள மணல்மேல்குடியில் உயர்நிலைப்பள்ளி கம்பீரமாக துவங்கியது.

> போதிய நிலபுலன்களோடு, கிராமங்களில் நிம்மதியாக வாழ வசதி இருந்தாலும், படித்த இளைஞர்கள் பலர், பட்டணத்து உத்தியோகம் நாடிச் செல்வது அர்த்தமற்றது என்பதை, உணர்ச்சிபூர்வமாகச் சித்திரிக்கிறது இச் சிறு கதை.

காளிமுத்து சேர்வை தன் பையனை அந்த 'ஹைஸ்கூலில்' பெருமையோடு சேர்த்து விட்டார். அதன் பிறகு அவருக்குத் தன் மகனிடமே ஒரு வித மரியாதை உணர்வு தோன்றலாயிற்று. பெரிய பெரிய புத்தகங்களைச் சுமந்துகொண்டு கந்தசாமி பள்ளிக்கூடம் போவதைப் பெருமையோடு பார்த்துக்கொண்டே அவர் நின்ற நாட்கள் எத்தனையோ!

ஆண்டுகள் நகர்ந்தன. கந்தசாமி எஸ்.எஸ்.எல்.சி. யில் தேர்வு பெற்றான். காளிமுத்து சேர்வை அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

பரீட்சை முடிவுகள் தெரிந்து மூன்றே மாதங்கள் தான் ஆகியிருந்தன. அந்தச் சமயத்தில்தான் காளிமுத்து சேர்வை கனவிலும் கருதியிராத ஒரு சோதனை தோன்றியது. இரண்டு தினங்களாக தந்தைக்கும் மகனுக்கும் பலத்த வாக்குவாதம். படித்த மகனுடன் பேசிச் சமாளிக்க தன்னால் இயலாமற் போகவே, அடுத்த ஊரில் கொடுத்திருந்த தனது மகளை, அதாவது கந்தசாமியின் தமக்கையை அழைத்து வரப் போயிருந்தார் காளிமுத்து.

விச்சூரிலிருந்த தன் மகள் காவேரியையும் அவள் கணவன் சிவசாமி சேர்வையையும் அழைத்துக் கொண்டு வேகவேகமாக வந்து கொண்டிருந்தார் காளிமுத்து சேர்வை. அந்தப் பனங் காட்டைக் கடந்து விட்டால் வெள்ளூர் தான். பனந்தோப்பின் மத்தியில்—காவேரியின் கண்களில் பளிச்சென்று பட்டது, அந்த உருவம்.

"தம்பீ"—என்ற காவேரியின் உரத்த குரலைத் தொடர்ந்து, காளிமுத்து சேர்வை, "கந்தா" என்று அலறினர்.

பாசத்தின் குரலை அலட்சியப்படுத்தி விட்டு அடுத்தடி எடுத்து நகர கந்தசாமியால் இயலவில்லை. தொய்ந்த உள்ளத்தோடு அப்படியே நின்றுவிட்டான்.

"தம்பீ, எங்களைவெல்லாம் வுட்டுட்டு எங்கடா பொறப்பட்டுட்டே"—காவேரியின் கனிந்த குரல் உருக்கமாக ஒலித்தது.

"அக்கா, நான் எங்கேயும் போயிடலே, இவ்வளவு படிச்சுட்டு சும்மா எதுக்கு இருக்கணும்னுதான் புறப்பட்டுட்டேன்"— என்றான் கம்மிய குரலில் கந்தசாமி.

சட்டென்று இடைமறித்தார் காளிமுத்துசேர்வை.

"சும்மா ஏண்டா இருக்கணும்? பரம்பரைக் காணியாச்சி இல்லாமலா போயிடுச்சி?"

"அப்பா உங்க காணிகரையை எல்லாம் நீங்களே வச்சிக்கிங்க! நான் எங்காவது போய் என் படிப்புக்குத் தகுந்த வேலை பார்த்து வாழ்ந்துக்கிறேன்."

"ஏண்டா நீ வெளங்குவியாடா? நீ வளந்து வாலிபமாகி எனக்கு ஒத்தாசை பண்ணுவேன்னு ராத்திரி பகலா கனவு கண்டவனடா நான்! நீ படிச்சு தொரை மாதிரி உத்தியோகம் பார்க் கணும்னு நினேச்சு நான் படிக்க வைக்கலேடா! ஏதோ கண்ணு தொறந்து உலகத்தைப் புரிஞ்சுக் கிடறதுக்கு நாலு வார்த்தை கத்துக்கிட்டால் போதும்னு தாண்டா நான் ஆசைப்பட்டேன், ஆனு நீ இப்படிப் பாழாப் போவேன்னு தெரிஞ் சிருந்தா உன்னே படிக்கவச்சிருக்கவே மாட்டேன். ....ஆமா!"—காளிமுத்து சேர்வை மூச்சு முட்ட பேசி முடித்தார்.

கந்தசாமி உடனேயே சொன்னுன், "அக்கா! அத்தான்! நான் முடிவாச் சொல்றேன். நான் படிச்சவன்! கேவலம் அந்தக் கிரர்மத்து மண் ணிலே கிடந்து மாரடிக்க விரும்பலே!"

இதைக் கேட்டதும் காளிமுத்து சேர்வைக்கு ஆவேசமே வந்து விட்டது; பேய் பிடித்தவர் மாதிரி அலறினுர்.

"டேய்! அந்த மண்ணு தாண்டா உன்னே இப்படி வளர்த்து படிக்க வச்சது. என் பாட்டன் பூட்டன், அப்பன், நான், நீ எல்லாரும் அந்த மண்ணுல் தாண்டா வாழ்ந்தது! அந்த மண்ணே மதிக்காத நீ எனக்கு மகனே யில்லே! எங்கேயோ தொலேஞ்சு எக்கேடோ கெட்டுப் போ!" என்று மகனேப் பார்த்து ஆத்திரமாக அலறிவிட்டு,

"காவேரி! நீ வாம்மா! மாப்பிளே, வாங்க வீட்டுக்கு போகலாம்" என்ருர் காளிமுத்து. அப்பொழுது அவர் குரலிலும் முகத்திலும் எவ் வித சஞ்சலமும் தோன்றவில்லே. எதுவுமே நடந்திராதது போலத் தெளிவாக இருந்தன.

உற்ருர் உறவினர்களேப் பகைத்துக்கொண்டு, எல்லாவித வசதிகளேயும் தியாகம் செய்து விட்டு, ஏதோ பெரியதொரு லட்சியத்திற்காகப் புறப்பட்டு விட்ட வீரனேப்போல மனதில் எண்ணிக்கொண்டு நடந்து கொண்டிருந்தான் கந்தசாமி.

மணல்மேல்குடியில் பஸ் ஏறி அறந்தாங்கி சென்று அங்கிருந்து ரயிலில் சென்னேக்குச் செல்லவேண்டும் என்பது அவனது திட்டம்—இல்லே இல்லே—லட்சியம்! 'படித்தவன்' என்ற கர்வம் அவன் இதயத்திலே கொடி கட்டிப் பறந்து கொண்டிருந்தது.

உச்சிவெயில். மணல்மேல்குடி இரண்டு மைல் தூரத்தில் இருந்தது. வண்டித் தடத்தை விட்டுக் கண்மாய்க் கரைமீதாகச் செல்லும் குறுக்குப் பாதையில் திரும்பினுன் கந்தசாமி. கரையின் மீதேறிய கந்தசாமி, அங்கே வேப்பமரத்து நிழலில் ஓர் இளேஞன் அமர்ந்திருப்பதைக் கண்டான். பெரும் பணக்கார வீட்டுப் பிள்ளேயே போன்று அவனது உடைகளும் முகத்தோற்றமும் இருந்தன. விலேயுயர்ந்த சூட்கேஸ் அவன் அருகில் இருந்தது.

அவனேக் கடந்துதான் கந்தசாமி போக வேண்டும். அப்பொழுது "சார், வெள்ளூருக்கு எப்படிப் போகிறது?" என்று அந்த இளேஞன் கேட்டதும், கந்தசாமிக்குத் தூக்கி வாரிப் போட்டது.

படுபட்டிக்காடான தனது கிராமத்திற்கு வழி கேட்ட அந்தப் படித்த, பணக்கார இளேஞனே ஆச்சரியத்தோடு பார்த்தான்.

"வெள்ளூருக்கு எங்கே சார் போறீங்க?"—தன் மனதில் எழுந்த ஐயத்தைக் கேட்டான் கந்தசாமி.

"கருப்பையா பிள்ளே தெரியுமா?"

"தெரியும் சின்னபண்ணே வீடு"

"அங்கே தான் போறேன்"

"அவர் வீட்டிலே ஏதாவது விசேஷமா?"

"இல்லே! நான் வெள்ளூரிலேயே தங்கப் போறேன் இல்லே! நான் வெள்ளூரிலேயே தங்கி, கிராமச் சேவை செய்யப் போறேன்" என்று அந்த இளேஞன் சொன்னதைக் கேட்டதும் கந்தசாமி அசந்தே போனுன்.

"என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்?" இந்தியா வின் ஜீவனே கிராமங்கள் தானே? இந்தப் பெரிய நாட்டையே வாழ வைக்கும் கிராமங்களில் தான் காந்தி அண்ணலின் அனுதாபமிருந்தது. அப்படிப்பட்ட கிராமம் ஒன்றில் தங்கி, தொண்டு புரிந்துகொண்டே எனது வாழ்வைக் கழிக்க வேண்டும் என்பதே எனது லட்சியம்".

கந்தசாமியால் அவனது லட்சியத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லே போலும். "ஆமாம் படிச்ச நீங்க பட்டிக்காட்டுக்கு வந்து......" என்று இடை மறித்தான்."

"படிச்சவங்க எல்லாம் நகரங்களிலேயே தங்கி உத்தியோகங்களுக்காகவே காத்துக் கொண்டிருந்

---

"லாலா லஜபதிராயின் கருத்தை ஒருவர் ஒப்புக் கொள்ளலாம்; அல்லது, ஒப்புக்கொள்ளாமல் இருக்கலாம். ஆனுல், அவரது சேவா உணர்ச்சியையும், தன்னலமற்ற தியாகத்தையும் யாரும் மதித்தே ஆக வேண்டும்."

—டேஜ் பகதூர் சாப்ரு

தால், நாட்டிலே உற்பத்தி பெருகாது—வேலை யில்லாத் திண்டாட்டம்தான் பெருகும். இன்றைக்கு நிலைமை மிக மோசமாக இருக்கிறது. கிராமங்களிலிருந்து கூட படித்த இளைஞர்கள் வேலை தேடி பட்டணத்திற்குப் புறப்பட்டு விடுகிறார்கள். அதனால் விவசாயம் பாதிக்கப்படுகிறது. உற்பத்தி குறைகிறது. அதே சமயம் நகரங்களில் நெரிசல் அதிகமாகிறது. வேலையில்லாத் திண்டாட்டம் பயங்கர ரூபம் எடுக்கிறது. அதனால்தான் படித்த இளைஞர்களில் ஒரு பகுதி கிராமங்களுக்குச் சென்று விவசாயப் பணியிலும் ஒரு பகுதி தொழில் கல்வி பெற்று உற்பத்தியைப் பெருக்குவதிலும் ஈடுபட வேண்டும் என்று தேசத்தின் வழிகாட்டிகள் கூறுகிறார்கள். அதை நான் நூற்றுக்கு நூறு ஆதரிக்கிறவன்'' என்று கூறி முடித்தான், பட்டணத்து வாலிபன்.

கந்தசாமிக்கு அவனைப் பார்க்கையில் விசித்திரமாகத் தென்பட்டது. இப்படியும் ஓர் இளைஞன் இருப்பானா என்று நினைத்துக்கொண்டே கேட்டான்,

'' உங்க பேரு என்னுங்க ?''

அந்த நகரத்து இளைஞன் தனது 'விசிடிங்' கார்டை எடுத்து நீட்டினான். அதில்—

''எஸ். மணிவாசகம். எம். ஏ.'' என்று இருந்தது. அதைப் படித்ததும் கந்தசாமியின் தலை அவனை அறியாமலே கவிழ்ந்தது.

'' எம்.ஏ. படித்த இளைஞன் எந்தவித ஆடம்பரமும் இன்றி கிராம சேவைக்கு வருகிறான் ! ஆனால் வெறும் எஸ். எஸ். எல். சி. மட்டுமே படித்த தனக்கு ஏற்பட்டுள்ள கர்வம், படித்தவன் என்ற அகம்பாவம் கிராம வாழ்வில் ஏற்பட்ட சலிப்பு, விவசாயத்தில் ஏற்பட்ட வெறுப்பு ஒவ்வொன்றையும் நினைத்துப் பார்க்கப் பார்க்க அவன் மனம் கூனிக் குறுகியது.

படித்து விட்டதனால் பட்டணம் நோக்கிப் புறப்பட்டு விட்ட தன்னையும், பட்டணத்திலேயிருந்து பட்டிக்காடு நோக்கிப் பணியாற்ற வரும் எம். ஏ. படித்த மணிவாசகத்தையும் எடையிட்டுப் பார்த்தான்.

'நிறைகுடம் தளும்பாது—

அறைகுடம் ஆர்பாட்டம் காட்டும்' என்பது புரிந்தது !

'' சே! எவ்வளவு பெரிய தவறு செய்து விட்டோம்!'' என வருந்தினான். அப்படியே நெடுநேரம் சிலையாக நின்றுகொண்டிருந்தான் கந்தசாமி.

நீண்ட அமைதியைக் கலைத்துக்கொண்டு மணிவாசகம் கேட்டான் '' சார் தயவு செய்து வெள்ளூருக்கு வழியைக் காட்டுங்க....''

'' நான் வெள்ளூருக்குத் தான் வழி காட்ட முடியும். ஆனால் நீங்க என் வாழ்க்கைக்கே வழி காட்டி விட்டீங்க'' என்று உணர்ச்சி பொங்கச் சொன்னான், கந்தசாமி. அன்றிலிருந்து அவன் தந்தைக்குகந்த தனயனாக மாறினான் !

---

## தென்னைக்கு மாக்னீஷியம் உரங்கள் தேவை

### பொடாஷ் மட்டும் போதாது

தென்னைக்கு பொடாஷ் அவசியம் என்று மேற்கு கடற்கரைத் தென்னந்தோப்புக்காரர்கள் அறிவார்கள். பொடாஷ் உடனடியாக மகசூலை அதிகரிக்கச் செய்தாலும், நாளடைவில் காய்ப்பு குறையவும் ஏதுவாகிறது என்று அவர்கள் அறியார்கள்.

பொடாஷைப் போட்டுக் கொண்டே இருந்தால், தென்னை மக்னீஷியத்தையும் அதிகமாக இழுத்துக்கொள்வதால் பூமியின் மக்னீஷியச்சத்து நிலை குறைகிறது. தென்னை நன்கு காய்ப்பளிக்க, பொடாஷியம் இரண்டு பங்கிருந்தால் மண்ணில் மக்னீஷியம் ஒரு பங்கு இருக்க வேண்டும். ஆனால் பல தோட்டங்களில் இந்த விகிதாச்சாரம் நாலுக்கு ஒன்றாகவும், பத்துக்கு ஒன்றாகவும் இருக்கிறது. ஆகையால் எவ்வளவு மூரியேட் ஆப் பொடாஷ் போட்டாலும், அமோனியம் சல்பேட் போட்டாலும், சூப்பர்பாஸ்பேட் போட்டாலும் காய்ப்பு அதிகரிப்பதில்லை. மேலும் கசிவாலும், அமிலத்தன்மையாலும் வேறு மண்ணின் மக்னீஷியச் சத்து குறைகிறது.

பொடாஷ் உரங்களுக்குப் பதிலாக பொடாஷ் மக்னீஷியா உரங்களை யிட்டால் மக்னீஷிய குறைவைத் தவிர்க்கலாம். இப்போது பொடாஷ் மக்னீஷிய உரங்கள் கிடைக்கின்றன.

கேரளாவில் காயங்குளத்தில் மத்திய தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் நடத்திய சோதனைகள் மூலம், இத்தகைய உரங்களை இட்டால், நிலத்துக்குப் போதிய மக்னீஷியம் கிடைத்து தென்னை நீண்ட காலம் கூடுதலான மகசூல் தருகிறது என்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

# சென்னையில் உணவு கார்ப்பொரேஷன் துவக்க விழா

"இந்த ஆண்டு பொங்கல், உணவு வர்த்தகக் கார்ப்பொரேஷனுடன் (Food Corporation of India) ஆரம்பமாகி, நாட்டுக்குச் செல்வத்தையும், சுபிட்சத்தையும் வழங்குகிறது. சுயநலமும், குளறுபடியான செயல்முறைகளும் குறுக்கிட்டு, பஞ்சம் தோன்றி விடாதபடி கவனமாக இருப்போம். இந்த நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் குறைந்தபட்ச உணவுக்கு அரசாங்கம் உத்தரவாதமளிக்கிறது" என மத்திய அரசாங்க விவசாயத்துறை அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் உறுதியிட்டுக் கூறினர்.

"உணவு வர்த்தகக் கார்ப்பொரேஷன், முழு அதிகாரம் பெற்ற, சுதந்திரமாக இயங்கும் ஒரு தொழில் ஸ்தாபனம்; அரசாங்கத்தின் குறிப்பிட்ட ஒரு இலாகா போன்றது அல்ல. துரிதமாகவும் திறமையாகவும் கடமை புரிவதில் தனியார்த் துறையைக் காட்டிலும், அரசாங்கம் சிறப்பாகப் பணிபுரிய முடியும் என்பதற்கு இந்த நிறுவனம் முன்னேடியாகத் திகழவேண்டும்" என்றும் அவர் சொன்னர்.

### முதலமைச்சரின் கருத்து

உணவு வர்த்தகக் கார்ப்பொரேஷனை தமிழ் நாட்டு முதலமைச்சர் திரு எம். பக்தவத்ஸலம் தலைமையில், சென்னையில், பொங்கல் திருநாளன்று 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 14-ந்தேதி, திரு சி. சுப்பிரமணியம் துவக்கிவைத்தார், ரூ. 100 கோடி முதலீட்டில், இந்த நிறுவனம், இயங்கும். மைசூர் மாநில உணவு அமைச்சர் திரு எம். வி. கிருஷ்ணப்பா, தமிழ்நாடு உணவு அமைச்சர் திரு வி. ராமையா மற்றும் தொழில் வர்த்தகப் பிரமுகர்கள், பாராளுமன்ற சட்டசபை உறுப்பினர்கள், அரசாங்க உயர் அதிகாரிகள் ஏராளமாக இவ்விழாவிற்கு வந்திருந்தனர்.

"தனியார்த் துறையுடன் போட்டி போட்டுக் கொண்டு, உற்சாகத்தோடு, உணவு வர்த்தகக் கார்ப்பொரேஷன் இயங்குவதற்கு அனுசரணையாக விலை நிர்ணயம் கவர்ச்சிகரமாக இருக்கும்" என்ருர் முதலமைச்சர் திரு பக்தவத்ஸலம். இந்த நிறுவனம் இன்னும் சிறிது காலம் முன்னதாகவே துவங்கப்பட்டிருக்கலாம் என அவர் அபிப்பிராயம் தெரிவித்தார். சற்று தாமதமாகத் துவக்கப்பட்டிருக்கும் இந்த நிறுவனம், தற்போதைய அறுவடையில் எடுப்பிலேயே அதிகமாகக் கொள்முதல் செய்வது அசாத்தியமாகுமானல், மாநில அரசாங்கம் கொள்முதல் செய்து, விதிமுறைப்படி அதை இந்நிறுவனத்திற்கு வழங்கும் என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்.

மத்திய அமைச்சர் திரு. சுப்பிரமணியம், பாரதப் பிரதமர் திரு லால்பகதூரின் ஆசியைத் தெரிவித்து, 1965-ம் ஆண்டு நல்ல மகசூல் தரும் ஆண்டாக இருக்குமென நம்பிக்கை தெரிவித்து தமது கருத்தைப் புள்ளி விவரங்களோடு விளக்கினர். கடந்த ஆண்டைக் காட்டிலும் அதிக உற்பத்தியில் தமிழ்நாடு மூன்ருவது இடத்தை வகிக்கிறது என்றும், பஞ்சாபும் மைசூரும் முறையே முதல் இரண்டாம் இடத்தைப் பெற்றிருக்கின்றன என்றும், பற்ருக்குறையில் நிற்கும் மேற்கு வங்கமும் அதிக உற்பத்தியில் சாதனை புரிந்திருக்கிறது என்றும் அவர் விவரித்தார்.

"உணவு வர்த்தகக் கார்ப்பொரேஷன் நிரந்தரமான ஒரு நிறுவனம். எந்தக் காலத்திலும் தட்டு ஏற்படாவண்ணம் நிரந்தரமான சுபிட்ச நிலையைக் காப்பது இதன் பொறுப்பு" என்ருர் அவர். ஆரம்பத்தில் கார்ப்பொரேஷன் தலைவர் திரு. டி.ஏ. பாய் அனைவரையும் வரவேற்ருர். திரு. சி. நரசிம்மம் நன்றி கூறினர்.

---

"இந்தியப் பொருளாதாரத்தை மறுபடியும் கூட்டுறவு முறையில் அமைத்தால், நம் நாகரீகத்தின் சிசு வளர்ப்புக் கூடங்களாக உள்ள கிராமங்கள் வலிவு பெற்று, நாடு முழுவதும் புத்துயிர் பெறும். நாடு முழுவதும் வறுமை நிறைந்து கிடக்க, இந்தப் பெரும்பான்மையான மக்கள் எதிரே, குவிந்த செல்வம் என்ற தடைச்சுவர்கள் சில உள்ளன. எனவே, கூட்டுறவை எதிர்த்துப் போராடவேண்டிய பகுதி, அதிகமாக ஒன்றுமில்லை. ஆகவே, என்னுடைய பிரார்த்தனை என்னவென்ருல், இந்நாட்டில் குவிந்த செல்வம் விடுதலை பெற்று, பரவலாக நாடு முழுதும் மறு பங்கீடு செய்யப்பெற்று, நாட்டு மக்கள் அனைவரின் ஒத்துழைப்பின் மூலம், உணவு, பெருஞ்செல்வம் ஆகிய தெய்வங்கள் எல்லாக் காலத்துக்குமாக இந்நாட்டில் நிலையாக அமர வேண்டும் என்பதேயாகும்."

கவியரசர் தாகூர்

[11-ம் பக்கத் தொடர்ச்சி.]

வெட்டுவதற்கான உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. கரும்பை வெட்டுவதும், வெட்டிய கரும்பை ஆலைக்கு எடுத்து வருவதும் ஆலையின் செலவில் செய்யப்படுகின்றன. விவசாயிகளுக்கு அவரவர் சப்ளை செய்த கரும்பின் அளவைக்குறிப்பிட்டு, ரசீதுகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொருவரும் தாங்கள் சப்ளை செய்த கரும்பின் உத்தேச மதிப்பில் 80 முதல் 85 சதவிகிதம் வரை ஆலையிடமிருந்து முன்பணம் வாங்கிக்கொள்ளலாம். வருடக் கடைசியில் கணக்கு பார்க்கப்படுகிறது. ஒவ்வொருவரும் ஆலைக்கு சப்ளை செய்த கரும்பின் மதிப்பில் இருந்து அவரவர் வாங்கிய முன்பணம், ரசாயன உரம் போன்றவற்றிற்காக வாங்கிய கடன் ஆகியவற்றைக் கழித்து மிச்சமுள்ள பணமும், ஆலை லாபத்தில் உறுப்பினருக்குரிய பங்குத் தொகையும் தரப்படுகின்றன.

### நிர்ணய விலையைவிட அதிகம் தரப்படுகிறது

கரும்பின் குறைந்தபட்ச விலை அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. ஆனால் அந்த நிர்ணய விலையைவிட அதிகமாகவே ஆலை, தன் உறுப்பினர்களது சரக்குகளுக்கு விலை தருகிறது. ஆலையின் லாபத்தில், உறுப்பினர்களுக்குத் தரப்படும் லாப விகிதம் 6 சதவிகிதத்திற்கு மேல் இருக்கக்கூடாதென அரசாங்கம் நிர்ணயித்திருக்கிறது. அதன்படி, விவசாயியாக உள்ள ஓர் உறுப்பினர் ஒரு ஏக்கர் நிலமுள்ளவராகவும், ஆலையின் செலுத்தப்பட்ட மூலதனத்தில் ஒரு பங்கு எடுத்தவராகவும் இருந்தால், அவருடைய சராசரி வருட வருமானம் ரூ. 1000 ஆக இருக்கிறது. விவசாயத்தையும், ஆலையையுமே தங்கள் வாழ்வுக்குப் பூரணமாக நம்பியிருக்கும் சில படித்த விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்களில் நான்கு ஏக்கர் நிலம் வைத்துள்ள ஒருவர் ஆண்டொன்றுக்கு சராசரி ரூ. 7000 சம்பாதிக்கிறார். இன்னுஞ் சில விவசாயிகள், ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 3,000 வரையிலும் வருமானம் பெறுகின்றனர்.

### தரம் உயர ஆராய்ச்சி

ஒவ்வொரு டன் கரும்பிலிருந்தும் அதிக சர்க்கரை பெற வேண்டுமானால், திருந்திய விவசாய முறைகள் மூலம் கரும்பின் தரத்தை உயர்த்துவது முக்கியமாகும். இந்தியாவில் பயிராகும் கரும்பு ரகங்களில் சராசரி சர்க்கரை சத்து 15 சதவிகிதம் தான். எனவே புதிய புதிய கரும்பு ரகங்கள் சம்பந்தமாக, கங்காநகர் சர்க்கரை ஆலை, ஆராய்ச்சி நடத்தி வருகிறது. அதிக பலன் தக்கூடிய ரகங்களின் விதைகள் விவசாய உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்றன. இந்த முயற்சிகள் ஓரளவு பலனளிக்கத் தொடங்கியுள்ளன. இந்தப் பகுதியில் சராசரி கரும்பு மாசூல் ஏக்கருக்கு 38 டன்கள்தான் என்றாலும், சில நிலங்களில் 60 டன் வீதம் மாசூல் கிடைத்திருக்கிறது. ஆனால், ஆலையின் மேற்பார்வையில் இல்லாத நிலங்களில், இதே பகுதியில், கரும்பு உற்பத்தி அளவு இன்னும் 27 டன்களாக இருந்து வருகிறதென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### பாசன வசதிக்கு கூட்டுறவுச் சங்கங்கள்

விவசாய வசதிகளைப் பெருக்குவதற்காக, ஆலை நிர்வாகத்தினர் ஒரு திட்டம் வகுத்துள்ளனர். பம்பு செட்டுகள் மூலம் பாசனவசதி பெறுவதற்காக, ஆலை உறுப்பினர்களான விவசாயிகள் ஆங்காங்கு ஒன்று சேர்ந்து பாசனவசதி கூட்டுறவு சங்கங்கள் அமைக்கும்படி யோசனை கூறப்பட்டிருக்கிறது. கங்காநகரிலிருந்து சுமார் 15 மைல் தூரத்தில் உள்ள உட்கவா என்ற கிராமத்தில், 234 உறுப்பினர்களைக்கொண்ட இத்தகைய சங்கம் ஒன்று இயங்கி வருகிறது. அது தன் உறுப்பினர் ஒவ்வொருவரிடமிருந்து ஆண்டுக்கு ரூ. 200 பாசன கட்டணமாக வசூலிக்கிறது. இந்த ஏற்பாட்டின் மூலம் 750 ஏக்கர்களுக்குப் பாசனம் கிடைக்கிறது. இப்பகுதியில் மாசூல் அளவு படிப்படியாக உயர்ந்து வந்திருக்கிறது. சில நிலங்களில், ஏக்கர் ஒன்றுக்கு 60 டன் கரும்பு உற்பத்தியாகிறது. எனவே அத்தகைய பாசனவசதி சங்கங்கள் 40—ஐ அமைக்க ரூ. 1 கோடி திட்டம் ஒன்றை கங்காநகர் சர்க்கரை ஆலை மேற்கொள்ள உத்தேசித்திருக்கிறது.

தினசரி கரும்பு ஆடும் சக்தியையும், 1,000 டன்னிலிருந்து 3,000 டன்னாக அதிகரிக்கவும் திட்டமிட்டிருக்கிறது. மற்றும் கரும்புச் சக்கை, சர்க்கரைப்பாகு வண்டல் முதலியவற்றிலிருந்து பற்பல பொருட்கள் தயாரிக்கும் துணைத் தொழில்களை ஆரம்பிக்க ஊக்குவிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. கரும்புச் சக்கையிலிருந்து 'நியூஸ் பிரிண்ட்' காகிதமும், பாகு வண்டலலிருந்து சாராயமும், மற்றும் கழிவு அழுக்கிலிருந்து மெழுகும் தயாரிக்க முடியும். இத்தகைய கழிவுபொருட்களைக் தக்க முறையில் பயன்படுத்துவதன் மூலம் ஆலையின் வருமானமும் அதையொட்டி விவசாய உறுப்பினர்களின் வருமானமும்—கணிசமாகப் பெருகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்போதுள்ள நிலவரப்படி, ரூ. 88 லட்சம் செலுத்தப்பட்ட மூலதனம் கொண்ட இவ்வாலையில் வருட நிகர லாபம் சுமார் ரூ 4 லட்சங்கள். இதில் ஐந்தில் ஒரு பகுதி ஒவ்வொரு வருடமும், ஆலையின் ரிசர்வ் நிதிக்குப் போய்ச் சேருகிறது.

# இப்படி நடந்தால் எப்படி வரும் உணவு நெருக்கடி?

ஏக்கருக்கு, குறைந்தபட்சம் 40 மணங்கு மகசூல் காணாத நெல் வயல்களே, அக்கிராமத்தில் இல்லை.

மேற்கு வங்க மாநிலம், ஹூக்ளி மாவட்டத்தைச் சேர்ந்த ஆரம்பாக் நகருக்கு வடக்கே 15 கிராமங்கள் அடங்கிய திரோல் அஞ்சல் என்ற பிரதேசம் இருக்கிறது. அப்பிரதேசத்திற்கு நடுவே செல்லும் சாலை வழியாக, நெற்சாகுபடி காலத்தில் செல்லும் எவரும், சாலையின் இரு பக்கங்களிலும் கண்ணுக்கெட்டிய தூரம் வரை பச்சைப் பசேலெனப் பரந்து விரிந்து கிடக்கும் நெல் வயல்களைக் கண்டு பிரமிப்படைவர் என்பது திண்ணம். விவசாயி யாராவது எதிர்ப்பட்டு, அவரிடம் "இங்கெல்லாம் மகசூல் எப்படி?" என்று கேட்டுவிட்டால் போதும். "ஏக்கருக்கு 40 மணங்கு மாசூல் காணாத நிலமே இங்கு இல்லை!" என்று அவர் பெருமிதமாகப் பதிலளிப்பார்.

### மண்டிக்கிடக்கிறது தானியம்

அவருடைய கூற்று, ஆதாரமற்றது அல்ல. இந்தப் பகுதியில் மண் சத்து நல்ல வளமுடையதாக இருப்பதாலும், அதோடு விவசாய மக்கள் சமீப காலமாக நவீன விவசாய முறைகளைப் பழுதின்றி கையாண்டு தீவிர முயற்சி எடுத்து வருவதாலும், ஈத்பூர், கோல்டா, மைகிராம், திரோல், புயின் போன்ற கிராமங்களில் தானியங்கள் குவியத் தொடங்கியுள்ளன. அதிலும் குறிப்பாக ஈத்பூரிலும், கோல்டாவிலும் தானியங்கள் மண்டிக்கிடக்கின்றன என்று சொல்லலாம். ஈத்பூர் கிராமத்தில் சராசரி நெல் மாசூல், ஏக்கர் ஒன்றுக்கு 42·5 மணங்கு என்ற அளவுககு இருக்கிறது, இக் கிராமத்தைச் சேர்ந்த இரு விவசாயிகள், தங்கள் நிலத்தில் ஏக்கர் ஒன்றுக்கு 80 மணங்கு மாசூல் கண்டு, நெல் உற்பத்தித் துறையில் ஒரு சாதனையை ஏற்படுத்திக் காட்டியது பற்றிய செய்தி பத்திரிகைகளில் எல்லாம் வெளியாயிற்று.

**அத்தனையும் சேர்ந்ததுதான், அந்த அற்புத சாதனை.**

ரசாயன உரங்களைத் தாராளமாகப் பயன்படுத்தியது, திருந்திய விவசாய முறைகளைப் பின்பற்றியது, கிராமத்திலுள்ள சமுதாய கட்டுக்கோப்பு. கிராமத் தலைமை ஆகிய அத்தனையும் சேர்ந்து தான், ஈத்பூர் இத்தகைய அற்புத சாதனையைச் செய்ய வழிகோலின.

சமுதாய நல அபிவிருத்தி இயக்கம் ஆரம்பிக்கப் பட்டதை யொட்டி, வயல்களில் உற்பத்தியைப் பெருக்கும் ஆர்வமும், மற்றவர்களைவிட நாம் அதிகமாக உற்பத்தி செய்து காட்ட வேண்டும் என்ற துடிப்பும், நாடு முழுவதையுமே உணவுப் பற்றுக்குறையிலிருந்து விடுவிக்க வேண்டும் என்ற ஆவலும் கிராம மக்களிடையே தோன்றின. கிராமங்களில் ஒரு புதிய தலைமை உருவாகி வருகிறது. புதிய கருத்துக்கள், எண்ணங்கள் கிராமப்புற மக்களிடையே பரவி வருகின்றன.

### பாய்ச்சல் வேக முன்னேற்றம்

அந்த முறையில் ஈத்பூர் மக்கள் பாய்ச்சல் வேகத்துடன் முன்னேறி வருகின்றனர். மிகச் சிறந்த நெல் உற்பத்தியாளர்களில் ஒருவர் என்ற பெருமை அவர்களுக்கு ஏற்கனவே கிட்டி விட்டது.

ஈத்பூரில் விவசாயம் செய்யும் மக்களுக்கு அக்ரா க்ஷத்திரியர்கள் என்று பெயர், பாரம்பரியமாக வேளாண்மையைத் தொழிலாகக் கொண்டுள்ள இந்த சமுதாயத்தினர், நவீன, விஞ்ஞானக் கருத்துக்களுக்குச் செவி சாய்க்க மறுக்கவில்லை. மாறாக, ஒரு புதிய தலைமையின் கீழ் அவர்கள் எல்லோருமே நவீன விவசாய முறைகளைப் பின்

[32-ம் பக்கம் பார்க்க]

### 1 ஆண்டில் 5 லட்சம் டன் ரசாயனஉர விநியோகம்

உணவு உற்பத்தியை அதிகரிக்கும் தீவிர முயற்சியின் ஓர் அம்சமாக, விவசாயிகளுக்கு ரசாயன உரங்களைத் தாராளமாக விநியோகிக்க உத்திரப் பிரதேச அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. இதன்படி, இந்த நிதியாண்டில் மட்டும் 5 லட்சம் டன் உரம் விநியோகிக்கப்படும். 1964 செப்டம்பர் இறுதிவரை முடிவடைந்த அரையாண்டுக் காலத்தில், சுமார் 2.34 லட்சம் டன் விநியோகிக்கப்பட்டது. இது, சென்ற ஆண்டு இதே காலத்தில் விநியோகிக்கப்பட்ட ரசாயன உர அளவை விட, 22 சதவிகிதம் அதிகமாகும்.

குடும்பக் கட்டுப்பாடு:

# அறுவை சிகிச்சை ஆபத்தானது அல்ல

—::xx—

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் கீழ் கையாளப்படும் கருத்தடை முறைகளில் ஒன்று அறுவை சிகிச்சை (Vasectomy). இந்த சிகிச்சை வசதியை, வேண்டியவர்களுக்கு அளிக்கவும், இந்த சிகிச்சை பற்றிச் சில ரிடையே நிலவும் தப்பெண்ணத்தைப் போக்கவும் உத்திரப் பிரதேச மாநிலத்தில் அவ்வப்போது அறுவை சிகிச்சை முகாம்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன,

அண்மையில், லட்சுமணபுரியில் உள்ள செஞ்சிலுவைத் தலைமை நிலையத்தில் இத்தகைய முகாம் இரண்டு நாட்கள் நடைபெற்றது, அப்போது 179 பேர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. மொத்தம் 500-க்கு மேற்பட்டவர்கள் இந்த முகாமுக்கு வந்திருந்தனர். அவர்கள், அறுவை சிகிச்சை பற்றியும் இதர குடும்பக் கட்டுப்பாடு முறைகள் பற்றியும் தெளிவான முறையில் தெரிந்து கொள்ள முடிந்தது.

### காலங் கடந்தாலும் கடமை ஆற்றினர்

முகாமில் அறுவை சிகிச்சை செய்துகொண்ட 179 பேர்களும்—அவரவர் குடும்ப அளவைப் பொறுத்து—பலதரப்பட்டவர்கள். அவர்களில் ஒருவருக்கு இரண்டே குழந்தைகள்தான் இருக்கின்றன. எனினும் தமக்கு இனி பிள்ளைப்பேறு தேவையில்லை எனக்கருதிய அவர், தாமே முன்வந்து அறுவை சிகிச்சை செய்துகொண்டார். அவர் செய்கை பாராட்டுக்குரியதாகும். தங்கள் கடமையை உரிய காலத்தில் செய்தவர்கள் 23 பேர். குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தின்படி, சாதாரணமாக ஒருவருக்கு மூன்று குழந்தைகள் வரை இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. அந்த முறையில், மேற்சொன்ன 23 பேர்களும் மூன்று குழந்தைகளை உடையவர்கள். ஆகையால் அவர்கள், தங்கள் கடமையைச் சரிவரச் செய்ததாகக் கொள்ளலாம். இவ்வாறு சொல்வதால், மூன்று குழந்தைகளுக்கு மேற்பட்டவர்கள், தங்கள் கடமையினின்று தவறிவிட்டோம், இனி எப்படியோ போகட்டும் என்று அசட்டை மனப்பான்மையில் இருப்பதும் தவறு. அவர்கள்தான் முக்கியமாகக் கருத்தடை செய்துகொள்ள வேண்டும். இதைப் பலர் உணர்ந்துவருகிறார்கள். இதற்கு அடையாளம், லட்சுமணபுரி முகாமில் அறுவை சிகிச்சை செய்துகொண்டவர்களில் பெரும்பாலோர் இந்த வகையைச் சேர்ந்தவர்களாக இருந்தது தான். அவர்களில் 33 பேர் நான்கு குழந்தைகளை உடையவர்கள்; 54 பேர் ஐந்து குழந்தைகளை உடையவர்கள்; 35 பேர் ஆறு குழந்தைகளை உடையவர்கள்; 33 பேர் ஏழும் அதற்கு மேற்பட்டும் குழந்தைகள் உள்ளவர்கள். இவர்களில் பலர் 56 வயதுக்கு மேற்பட்டவர்கள். இவர்கள் எல்லாம் காலங்கடந்தாகிலும், தங்கள் கடமையைச் செய்தவர்கள் ஆவர்.

### மனம் மாறியது எப்படி ?

இவர்கள் அனைவருமே, தாங்களாக அறுவை சிகிச்சை செய்துகொள்ள முன்வந்தார்கள் எனச் சொல்ல முடியாது. ஒவ்வொருவரையும் தனிப்பட விசாரித்ததில் கீழ்க்கண்ட தகவல்கள் தெரிய வந்தன, இவர்களில் 86 பேர், சமூக நல ஊழியர்கள் எடுத்துச் சொன்னதன்பேரில், அவர்களது தூண்டுதலால், முகாமுக்கு வந்தவர்கள். லட்சுமணபுரியை அடுத்த கிராமப்புறங்களிலிருந்து வந்த 27 பேர், மாவட்ட சுகாதார அதிகாரிகள், ஊழியர்கள் சொன்ன தகவல்களில் நம்பிக்கை ஏற்பட்டு வந்தவர்கள். மற்றவர்கள் தாங்களாக வந்தார்கள். அவர்கள், குடும்பக் கட்டுப்பாட்டின் நன்மைகளைப்பற்றிப் பிரசார மோட்டார் வண்டிகள் முதலியவை மூலம் கேட்டவற்றைக்கொண்டு மனம் மாறி, கடமையை உணர்ந்து வந்தார்கள். மொத்தம் 179 பேர்களில் 63 பேர் தங்களுக்குள்ள பொருளாதார நெருக்கடி நிலையில், கருத்தடை செய்துகொள்வதுதான் நியாயம் என்ற உணர்வு தங்களுக்கு ஏற்பட்டதாகத் தெரிவித்தார்கள்.

### பார்வையாளர்கள் அடைந்த நன்மை

அறுவை சிகிச்சை செய்துகொள்வதற்காக அல்லாமல், முகாமைப் பார்வையிட வந்த பலரும் நன்மை அடைந்தார்கள். அறுவை சிகிச்சை செய்துகொள்ள 15 நிமிடங்களுக்குமேல் ஆகவில்லை என்பதையும், சிகிச்சை செய்துகொண்டு அறையை விட்டு வெளியே வருபவர்கள், உபாதை ஏதும் இல்லாமல் சர்வ சாதாரணமாக நடந்து செல்வதையும் கண்கூடாகக் கண்டார்கள். அதோடு, சிகிச்சை செய்துகொண்டவர்களிடம் பேசிப் பார்த்து, உண்மை நிலவரத்தை அறிந்துகொண்டார்கள், அதுமட்டுமல்ல, இந்தப் பார்வையாளர்கள், என்னவோ ஏதோ உள்ளே நடக்கிறது என்ற அச்சத்துடன் ஒதுங்கி நிற்காமல், சர்வ சாதாரணமாக தாழ்வாரங்களில் உலவி, குடும்பக் கட்டுப்பாடு பற்றிய விளக்கப்படங்களை அக்கறையுடன் பார்த்ததையும், சிகிச்சை செய்துகொண்டவர்களை ஆவலுடன் அணுகி விசாரித்ததையும் காணும்போது, பொதுவாக குடும்பக் கட்டுப்பாடு சம்பந்தமாக ஒரு சமுதாய விழிப்பு தோன்றியிருப்பது நன்கு புலனாயிற்று.

# அரண் காக்க அணிகள் அர்ப்பணம்

நாட்டின் பாதுகாப்புக்குத் தங்களால் இயன்ற உதவிகளையெல்லாம் செய்வதில் பெண்கள் பலர் எத்தனை ஆர்வம் கொண்டுள்ளனர் என்பதற்குச் சிறந்ததொரு எடுத்துக்காட்டாக விளங்குகிறார் திருமதி வீரமதி. அவர், உத்தரப்பிரதேசத்திலுள்ள அதாய் என்ற கிராமத்தில் வசிப்பவர். தேசப் பாதுகாப்புக்கு, எல்லையில் அரண் காத்து நிற்கும் பணியில் தம்மால் நேரடியாகப் பங்குகொள்ள இயலாவிட்டாலும், அத்தகைய வீரப்பணி புரியும் தியாகச் செம்மல்களுக்காக அரசாங்கம் வேண்டிய வசதிகளைச் செய்து தருவதில், தாமும் ஓரளவு உறுதுணையாக நிற்க ஆவல் கொண்டார். அதன் விளைவு, தம்மிடமிருந்த நகைகளையெல்லாம் விற்று, ரூ. 2,500 பணம் பெற்று, அந்தப் பணம் முழுவதற்கும் பாதுகாப்புப் பத்திரங்கள் வாங்கிவிட்டார். இத்தகைய சிறு சிறு உதவிகள் ஒன்று சேர்ந்து, நாட்டுக்குப் பெரும் பலத்தை ஏற்படுத்தித் தரும் என்ற உண்மையை—சிறு சேமிப்பு இயக்கத்தின் தத்துவத்தை—உணர்ந்த அவர், இவ்வாறு செயல் புரிந்தார். மனைவியின் செய்கையைக் கண்ட அவரது கணவர் திரு சந்திர பால் சிங், தம்மிடமிருந்த ரூ. 7,500 பணத்தைக்கொண்டு, தம் பேரிலும் தம் குழந்தைகள் பேரிலும் அஞ்சல் நிலையத்தில் சேமிப்புக் கணக்குகள் ஆரம்பித்தார்.

இந்தத் தம்பதிகளின் சீரிய உதாரணம், அந்த வட்டார மக்களின் மனதில் ஒரு புதிய கிளர்ச்சியைத் தோற்றுவித்து, இன்று பலரும் அவர்களது வழியைப் பின்பற்றுகின்றனர்.

[30-ம் பக்கத் தொடர்ச்சி.]

பற்றத் தொடங்கினர். உற்பத்தியைப் பெருக்க மனப் பூர்வமான தீவிர முயற்சிகளில் ஈடுபட்டனர், அதன் பலனாக, கடந்த சில ஆண்டுகளில் கரம்பாக—தரிசாகக் கிடந்த பல நிலங்களை விவசாயத்தின் கீழ் கொண்டு வந்துள்ளனர்.

### உரிய முறையில் உரிய பணிகள்

அவர்கள் விவசாயக் காரியங்களையெல்லாம் உரிய முறையில், உரிய காலத்தில் செய்து முடிக்கின்றனர். சாகுபடி ஆரம்பமாவதற்கு மிகவும் முன்னதாகவே நிலங்களை உழுகின்றனர். பிறகு, பருவம் பார்த்து விதைப்பு அல்லது நாற்று நடுதல் நடைபெறுகிறது. களையெடுப்பதில் கொஞ்சமும் சுணக்கம் காட்டுவதில்லை. மாறாக தீவிரமாகவும் முழுமையாகவும், மிக அக்கறையுடனும் செய்யப்படுகிறது. அதே போல் பூச்சிகளிலிருந்து பயிர்களைப் பாதுகாப்பதிலும் மிகுந்த கவனம் செலுத்தப்படுகிறது. பூச்சிகளின் ரகம் அறிந்து அதற்கேற்ற மருந்து தெளிக்கப்படுகிறது. ஈத்பூர் விவசாயிகள் 12 ரகமான நெற்பயிர்களைச் சாகுபடி செய்கிறார்கள். மேற்சொன்ன ரகங்களுக்கான விதைகள் பெரும்பாலும் உள்ளூர் விளைச்சலைக்கொண்டே தயாரிக்கப்படுகின்றன.

சரியான தலைமையின்கீழ், கிராம மக்கள் தீவிர முயற்சிகளில் ஈடுபட்டால், எத்தகைய பலன் அடைய முடியும் என்பதற்கு ஈத்பூர் விவசாயிகள் ஒரு முன் மாதிரியாகத் திகழ்கிறார்கள். அவர்களது உதாரணத்தை, நாட்டில் உள்ள இதர ஆயிரக்கணக்கான கிராமங்களும் பின்பற்றினால், நாட்டில் உணவுப் பிரச்னைக்கே இடமிராது.

## பழச் சாகுபடிக்குத் தீவிரத்திட்டம்

மகாராஷ்டிராவில் பழச் சாகுபடிக்கான தீவிரத் திட்டம் ஒன்று, மாநில அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஒன்றரையாண்டு கால அளவைக்கொண்ட இத்திட்டத்தின் கீழ், பழ வகைகளுக்கான கன்றுகள் தயாரிக்கும் பண்ணைகள் நான்கு அமைக்கப்படும். ஒவ்வொரு பண்ணையும் 20 ஏக்கர் பரப்பு கொண்டதாயிருக்கும். இங்கு வாழை, திராட்சை, ஆரஞ்சு, எலுமிச்சை ஆகிய கன்றுகள் வளர்க்கப்பட்டு, பழத்தோட்டம் வைப்பவர்களுக்கு விநியோகிக்கப்படும். நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நடைபெறவிருக்கும் இத்திட்டத்திற்கு மொத்தம் சுமார் ரூ. 2 லட்சம் செலவாகும்.

வெளி மாநிலங்களுக்குப் பழங்கள் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் திட்டம் ஒன்றும் துவக்கப்படவிருக்கிறது. இத்திட்டத்திற்கு ரூ. 18 லட்சம் செலவாகும் என மதிப்பிடப்படுகிறது. பழச்சாகுபடி செய்பவர்கள், மேலும் தீவிரமான அளவில் சாகுபடி செய்வதற்குக் கடன்கள் தரப்படும். அதே போல் பழங்களைப் பெரும் அளவில் வாங்கி விற்பனைக்கு அனுப்பும் கூட்டுறவுச் சங்கங்கள், பழங்கள் கெடாதபடி வைத்து அனுப்ப வசதியாக குளிர் சாதன மோட்டார் வாகனங்கள் வாங்குவதற்காகவும் கடன்கள் வழங்கப்படும்.

வாழை, மா, ஆரஞ்சு, எலுமிச்சை ஆகியவற்றைப் பெரும் அளவில், சாகுபடி செய்ய நான்கு கேந்திரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. திட்டத்தின் 18 மாத கால அளவிற்குள் 900 ஏக்கர் நிலத்தில் தீவிர பழச்சாகுபடி நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. போதுமான நீர்ப்பாசன வசதியுள்ள விதைப் பண்ணைகளில் எல்லாம், பழவகைகளுக்கான கன்றுகளை வளர்க்கவும் அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

"பஞ்சாயத்து ராஜ்" இதழிலிருந்து இடம் பெறுபவை :

பக்கங்கள் —9, 10, 11, 12, 29, 30, 31, 32 (8 பக்கங்கள்)

**Articles reproduced from "Panchayati Raj" on Pages 9, 10, 11, 12, 29, 30, 31 and 32** (8 pages)

கிராம நலம் பகுதி-2
GRAMANALAM PART 2
பஞ்சாயத்து அரசிதழ்
PANCHAYAT GAZETTE

(பஞ்சாயத்து அபிவிருத்திபற்றிய அரசாங்க ஆணைகள், விதிகள் முதலியவற்றின் சுருக்கம் இந்தப் பகுதியில் இடம்பெறுகிறது.)

## கிராம சேவிகைகளுக்கு திருத்தப்பட்ட வேலைப் பட்டியல்.

## Community Development Programme—Role of Gramasevikas of the Women's Welfare Department in Panchayat Unions—Revised job chart of Gramasevikas—Prescribed.

**(G.O. Ms. No. 2512, R. D. and L. A., dated 3rd December 1964.)**

கிராம சேவிகைகளுக்கு பயிற்சி அளிப்பதற்காக ஒரு திருத்தப்பட்ட வேலைப் பட்டியலையும், பாடத் திட்டத்தையும் இந்திய அரசாங்க சமுதாய அபிவிருத்தி, கூட்டுறவு அமைச்சகம், கிராமீய விஸ்தரிப்பு பயிற்சி நிலையங்களுடன் சேர்க்கப்பட்டுள்ள குடும்ப இயல் பிரிவு தலைமை பயிற்சி அளிப்பவருக்கு அனுப்பி, அதை ஏற்றுக்கொள்ளும் படி சிபாரிசு செய்துள்ளது. இந்த அமைச்சகம் விரும்பியபடி, கிராம சேவிகைகளுக்கு பயிற்சி அளிப்பதற்காக, இந்த பாடத் திட்டம் இப்போது பயிற்சி நிலையங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2. இந்திய அரசாங்கம் அனுப்பிய மேற்கண்ட திருத்தப்பட்ட வேலைப் பட்டியல் பரிசீலனை செய்யப்பட்டது. இந்த திருத்தப்பட்ட வேலைப்பட்டியல், இம் மாநிலத்தின் தன்மைக்கேற்ப—அதாவது மாதர்கள், குழந்தைகளுக்கான குறைந்த அளவு திட்டம், பள்ளிக்கூட முன்பருவ திட்டம், விரிவு படுத்தப்பட்ட சத்துணவுத் திட்டம் போன்றவை—ஏதாவது மாறுதல் செய்யப்படவேண்டிய தேவையுள்ளதா என்பதுபற்றி மகளிர் நலத்துறை இயக்குநருடனும், சென்னை கதர், கிராமத் தொழில் போர்டு காரியதரிசியுடனும் கலந்தாலோசிக்கப்பட்டது. அதற்கு அவர்கள் சில பொருள்கள் சேர்க்கப்படவேண்டும் என்று கருத்துத் தெரிவித்துள்ளனர். அதன்பேரில் பரிசீலனையின் பின், இவ்வாணையின் இணைப்பில் கண்டுள்ளவாறு விரிவான விளக்கங்களை அரசாங்கம் வெளியிடுகிறது. இவ் விளக்கங்கள் பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள், கிராம சேவிகைகள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் ஆராயப்பட்டு, கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்று அரசாங்கம் ஆணைப் பிறப்பிக்கிறது.

### இணைப்பு

#### கிராம சேவிகைகளின் வேலைப்பட்டியல்

சமுதாய அபிவிருத்தி வேலைகள், வட்டாரத்திலுள்ள அலுவலர்கள் எல்லோருக்கும் உள்ள பொறுப்பாகும். இவ்வலுவலர்களில் ஒருவரான கிராம சேவிகை, ஒரு முக்கியமான பொறுப்பை நிறைவேற்ற வேண்டியுள்ளது.

கிராம சேவிகைகளின் வேலைகள் பலதிறப்பட்டதாக உள்ளன. அவைகள் கீழ்க்கண்ட தலைப்புகளின்கீழ் வருகின்றன :—

1. தாய் சேய் நலம்
2. வீட்டு நிர்வாகம்
3. உணவு போஷாக்கு
4. சுகாதாரம், துப்புரவு
5. உடை
6. குடும்பக்கலை
7. விவசாயம், கால்நடைப் பராமரிப்பு
8. பஞ்சாயத்துக்கள், கூட்டுறவு
9. மகளிர், குழந்தைகள் நடவடிக்கைகள்.

(மேற்கண்ட ஒவ்வொரு தலைப்பின்கீழும், விரிவான வேலைகள் அடங்கியுள்ளன. அவைகள் அனைத்தும் கிராம சேவிகைகளால் செய்யப்படவேண்டியவை. அவைகள் விரிவாக இவ்வாணையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வாணை சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. அதில் இவற்றைக் காண்க.)

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1964-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 3-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 2512-ன் சுருக்கம்.)

கிராம சேவிகைகளுக்கு கூடுதலான பயணப்படி.

## Establishment—Women's Welfare Department—Allowances—Fixed travelling allowance to Gramasevikas—Enhanced rate—Ordered

### (G. O. Ms. No. 2614, R. D. and L. A., dated 15th December 1964.)

கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் 25-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 205-ல் கிராம சேவிகைகளின் நிர்ணயிக்கப்பட்ட பயணப்படியை (மாதத்தில் குறைந்த அளவாக 25 நாட்கள் சுற்றுப்பயணத்திற்கு) மாதம் ரூ. 7-50 லிருந்து ரூ. 10-க்கு உயர்த்தி அரசாங்கம் ஆணை பிறப்பித்தது. ஒவ்வொரு கிராம சேவிகையின் வரம்பு வட்டாரத்தின் ஒரு பாதியாக இருக்கிறதென்றும், ஒவ்வொரு வட்டாரத்திற்கும் அனுமதிக்கப்பட்டுள்ள இரண்டு கிராம சேவிகைகள், மாதத்தில் 25 நாட்கள் வட்டாரம் முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்ய எதிர்பார்க்கப்படுகிறார்கள் என்றும், அவர்களுக்கு அளிக்கப்பட்டுவரும் நிர்ணயிக்கப்பட்ட பயணப்படி மிகவும் குறைந்ததாக இருக்கிறதென்றும் அரசாங்கத்திற்கு எடுத்துக்கூறப்பட்டுள்ளது.

(2) எல்லா பஞ்சாயத்து யூனியன்களிலும் அலுவல் புரியும் கிராம சேவிகைகளுக்கு குறைந்த அளவாக மாதம் ஒன்றுக்கு 25 நாட்கள் சுற்றுப்பயணத்திற்காக, மாதம் ஒன்றுக்கு ரூ. 15- வீதம் (ரூபாய் பதினைந்துமட்டும்) நிர்ணயிக்கப்பட்ட பயணப்படி அளிக்கப்படவேண்டும் என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது. நீலகிரி மாவட்டத்திலும், மதுரை மாவட்டத்தில் உள்ள கொடைக்கானல் பஞ்சாயத்து யூனியனிலும் உள்ள கிராம சேவிகைகளுக்கு குறைந்த அளவாக மாதம் ஒன்றுக்கு 25 நாட்கள் சுற்றுப்பயணத்திற்காக, ரூ. 22-50 வீதம் (ரூபாய் இருபத்தி இரண்டு, ஐம்பது பைசாக்கள் மட்டும்) மாதம் ஒன்றுக்கு கூடுதலான நிர்ணயிக்கப்பட்ட பயணப்படி அளிக்கப்படும். இந்த உத்தரவு 1964-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ம் தேதி முதல் அமுலுக்குவரும்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1964-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2614)

---

விவசாயம் மற்றும் அதைச் சார்ந்த துறைகளில் குறுகிய காலப் பயிற்சி.

## Training—Organisation of short training courses in agriculture and allied fields at the Rural Extension Training Centres, Aduthurai, Kovilpatti and Bhavanisagar—Deputation of Officials and non-officials—Orders passed.

### (G. O. Ms. No. 31, R.D. and L.A., dated 4th January 1965.)

அதிகாரிகள், அதிகாரிகளல்லாதவர்கள், இளைஞர்—தலைவர்கள் போன்றவர்களுக்கு விவசாயம் மற்றும் அதைச் சார்ந்த துறைகளில், எட்டு நாட்களுக்கு ஒரு பயிற்சியை ஏற்பாடு செய்ய மத்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

2. இம் மாநிலத்திற்கு, மூன்று பாடத் திட்டத்தை மத்திய அரசாங்கம் ஒதுக்கியுள்ளது. இந்த மூன்று திட்டங்களும் கீழ்க்கண்ட மூன்று கிராமிய விஸ்தரிப்பு பயிற்சி நிலையங்களில் நடைபெறும் என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

1. கிராமிய விஸ்தரிப்பு பயிற்சி நிலையம், ஆடுதுறை.

2. கிராமிய விஸ்தரிப்பு பயிற்சி நிலையம், கோயில்பட்டி.

3. கிராமிய விஸ்தரிப்பு பயிற்சி நிலையம், பவானிசாகர்.

இப்பயிற்சியின் முடிவில், ஒரு கிராமிய இளைஞர்கள் அணிவகுப்பு நடத்தப்படுவது முக்கியமானதாகும். இது கிராமிய விஸ்தரிப்பு பயிற்சி நிலையத்தில், அதனுடன் சம்பந்தப்பட்ட வட்டாரத்தின் நெருங்கிய தொடர்புடன் நடைபெறவேண்டும். இந்நிலையங்களின் முதல்வர்கள், பொருத்தமான நாட்களை குறிப்பிட்டு, அவை பற்றிய விஷயங்களை சம்பந்தப்பட்ட எல்லோருக்கும், போதுமான காலத்திற்கு முன்னரே தெரிவிக்க வேண்டும். ஆயினும், இப்பயிற்சி 1965-ம் ஆண்டு மார்ச் மாதம் 1-ம் தேதிக்குள் முடிவு பெற்றுவிட வேண்டும்.

3. ஆடுதுறையிலும், கோயில்பட்டியிலும் நடக்கும் இப்பயிற்சியில் கீழ்க்கண்ட 40 பேர்கள் பங்கு பெறுவர்:—

(1) கிராமத் தொண்டர் படையை அபிவிருத்தி செய்யும் பகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தொண்டர்கள்

25

(2) இளைஞர் குடியானவர் சங்கம், பாரத் சேவக் சமாஜம், மற்றும் இதர நிறுவனங்களிலிருந்து அதிகாரிகளல்லாதவர்கள் 2

(3) விவசாயம், கால்நடை பராமரிப்பு, சமூகக் கல்வி ஆகியவற்றில் பயிற்சி அளிப்பவர்கள் 5

(4) விவசாயம், கால்நடை பராமரிப்பு, சமுகக்கல்வி விஸ்தரிப்பு அதிகாரிகள் 5

(5) உணவு, போஷாக்கு பழங்கள் மற்றும் காய்கறி பாதுகாப்பு ஆகியவற்றில் பயிற்சி அளிக்கும் பெண்மணிகள் 3

கூடுதல் 40

பவானிசாகரில் அளிக்கப்படக்கூடிய பயிற்சி, பெண்களுக்கு மட்டுமே இருக்கும்; அதில் கீழ்கண்ட 40 பேர்கள் பங்கு பெறுவர்:—

1. கிராமத் தொண்டர் படையின் பெண் பிரிவு அங்கத்தினர்கள் 25

2. இதர நிறுவனங்களிலிருந்து அதிகாரி களல்லாதவர்கள் (பெண்கள்) 2

3. குடும்ப இயல், தலைமை பயிற்சி அளிப்பவர் 1

4. குடும்ப இயல், உதவி பயிற்சி அளிப்பவர் 3

5. முக்கிய சேவிகைகள் 6

6. கிராம சேவிகைகள் 3

கூடுதல் 40

4. மேற்கண்ட 3-வது பாராவில் கண்டுள்ளபடி அதிகாரிகளையும், அதிகாரிகளல்லாதவர்களையும் பயிற்சிக்கு அனுப்ப அனுமதி அளிக்கப்படுகிறது. சம்பந்தப்பட்ட பயிற்சிக்காக, 25 வயதிற்கு குறையாத அதிகாரிகளல்லாதவர்களை கிராமிய விஸ்தரிப்பு பயிற்சி நிலையங்களின் முதல்வர்கள், பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்களோடு ஆலோசனைசெய்தபின், தெரிந்தெடுத்து, அவர்களின் பெயர்களையும், முழு விலாசங்களையும் உதவி அபிவிருத்தி கமிஷனரு (பயிற்சி)-க்கு அனுப்பி வைக்கவேண்டும். ஒவ்வொரு பயிற்சிக்கும் தேவையான அதிகாரிகள், அதிகாரிகளல்லாதவர்களை (கிராமிய விஸ்தரிப்பு பயிற்சி நிலைய முதல்வருடன் ஆலோசித்து) தேர்ந்தெடுத்து பயிற்சிக்கு அனுப்ப, உதவி அபிவிருத்தி கமிஷனருக்கு (பயிற்சி) அதிகாரம் அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியில் ஏதாவது காலியிடங்கள் இருப்பின், முதல்வர்கள் அவைகளை நிரப்ப சுற்றுப்புறங்களில் உள்ள முதன்மையான இளைஞர்—தலைவர்களை எடுத்துக்கொள்ள வேண்டும்.

5. இப்பயிற்சிக்காக அனுப்பப்படும் அதிகாரிகள் வேலையின் காரணமாக சென்றிருப்பதாக கருதப்படும். பயிற்சிக்கு அனுப்படாவிட்டால் அவர்கள் பெறக்கூடிய சம்பளமும், படியும் அவர்கள் பெற தகுதியாவார்கள். அவர்கள் ஏதாவது விசேஷ சம்பளங்கள் பெற்று வந்தால், அதைப் பயிற்சி காலங்களில் பெற முடியாது. பயிற்சி நிலையங்களுக்கு போக வர ஏற்படும் சரியான பயண காலங்களுக்கே அவர்கள் தகுதியாவார்கள். தமிழ்நாடு பயணப்படி விதிகளின் கீழ் அவர்கள் பயணப்படியை பெற அனுமதிக்கப்படுவதுடன், அவர்களுக்கு இலவசமாக உணவும், தங்குமிடமும் அளிக்கப்படுவதால் அவர்கள் பயிற்சி காலங்களில் நாலில் ஒரு பங்கு வீதம் தினப்படி பெற தகுதியாவார்கள். பயிற்சிக்காக அனுப்பப்பட்டுள்ளவர்கள் இடத்தில் வேறொருவர் பதிலுக்கு வேலையில் அமர்த்தப்படக்கூடாது. அவர்களுடைய சம்பளமும், படியும் எந்தக் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படுகிறதோ அந்தக், கணக்குத் தலைப்பில் பயணப்படி செலவினங்கள் பற்று வைக்கப்படவேண்டும்.

6. அதிகாரிகளல்லாத நிறுவனங்களிலிருந்து பயிற்சியில் பங்குபெற வரும் பிரதிநிதிகள், தங்கள் பயணப்படிகளை, தங்கள் நிறுவனங்களிலிருந்தே பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

7. அரசாங்கம் கிராமத் தொண்டர் படையை வலுப்பெறச் செய்யவேண்டும் என்ற விசேஷக் கருத்துடன், இப்பயிற்சிக்கு மிக முக்கியமளிக்கிறது. கிராமத் தொண்டர் படை வாயிலாக, விவசாய உற்பத்தி பெருக இப்பயிற்சியை பயனளிக்கக்கூடிய முறையில் நடத்தி வைக்க உதவி அபிவிருத்தி கமிஷனர் (பயிற்சி) ஆவன செய்யவேண்டும்.

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 4—1—1965 தேதியிட்ட அரசாங்க ஆணை 31-ன் சுருக்கம்.)

## தல நிர்வாக அலுவலர்களுக்கான சோதனைகள்—திருத்தப்பட்ட பாடத் திட்டங்கள்.

## Examinations—Departmental Test on Community Development literature and Account Test for Employees of local bodies—Revised Syllabus—Prescribed.

## (G.O. Ms. No. 101, R. D. and L. A., dated 16th January 1965.)

சமுதாய அபிவிருத்தித் திட்டத்தில் பணிபுரியும் வட்டார வளர்ச்சி அதிகாரிகள் (அரசிதழ் பதிவு பெற்றவர்கள், பெறாதவர்கள்), மாவட்ட சமூகக் கல்வி அதிகாரிகள், சமூகக்கல்வி அமைப்பாளர்கள், வளர்ச்சி அதிகாரிகள், கிராம சேவக்குகள், மற்றும் கிராம சேவிகைகள் ஆகியோருக்கு சமூதாய வளர்ச்சி திட்டத்தைப் பற்றிய சில புத்தகங்கள் மீது, இரண்டு துறைச் சோதனைகள் வரையறுக்கப் பட்டு, கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1964-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16-ம் தேதியிட்ட அரசாங்க ஆணைகள் 2155, 2156-ல் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மேலும் சோதனைகளுக்காக வரையறுக்கப்பட்டுள்ள புத்தகங்களின் விபரங்களும், சோதனைகளின் காலவரையும், யாருக்காக இச்சோதனைகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற விபரங்களும் மேற் கண்ட ஆணைகளில் கூறப்பட்டுள்ளன. மேற்கண்ட இரண்டு துறை சோதனைகளைத் தவிர, வட்டார வளர்ச்சி அதிகாரிகளின் பதவிகளுக்கு நியமனம் செய்யப்படுவதற்கு, நிர்வாக அதிகாரிகளின் கணக்குச் சோதனை (Account Test for Executive Officers) மற்றும் கீழுள்ள பணியாளர் துறை அதிகாரிகளுக்கான கணக்குச் சோதனை பாகம் I, II (Account test for Subordinate Officers Parts I and II) ஆகிய இரண்டிலும் தேர்ச்சி இருத்தல் அவசியம்.

(2) பஞ்சாயத்து நிர்வாகத்தில் ஒரு புதிய மாற்றம் செய்யப்பட்டுள்ளதால், மேற்கண்ட அரசாங்க ஆணைகளில், விசேட விதிகள், தமிழ்நாடு அரசினர் பஞ்சாயத்து அபிவிருத்தி கீழுள்ள பணியாளர் துறைக்கும் (Madras Panchayat Development Subordinate Service), தமிழ்நாடு அரசினர் கிராம சேவக்குகள் துறைக்கும் (Madras Gramasevaks Service) வெளியிடப்பட்டு, இப்போது தமிழ் நாடு அரசினர் நிலைப் பணியாளர் துறையின், விதி 11-ல் உள்ள "தல நிர்வாகப் பகுதி"யை, பெயர் மாற்றி, "பஞ்சாயத்து அபிவிருத்தி பகுதி" என்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதை முன்னிட்டு, இப்போதுள்ள துறை சோதனைகளை, மாற்றத்திற் கேற்றவாறு, திருத்தி அமைக்கப்பட வேண்டியது அவசியமெனவும், விரும்பத்தக்கதெனவும் கருதப் படுகிறது.

(3) பொதுத் (ஆர். டி. பி.) துறையின் 1958-ம் ஆண்டு மே மாதம் 9-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1442-ல் வெளியிடப்பட்டுள்ள உத்தரவுகள் மற்றும் அதன் பிறகு திருத்தப்பட்டுள்ளவற்றுக் கெல்லாம் மேலாக, துறை சோதனைகளின் பாடத் திட்டம், சோதனைகளின் கால வரையறை போன்றவற்றை பொருத்து அரசாங்கம் கீழ்க்கண்டவாறு ஆணைப்பிறப்பிக்கிறது.

(A) கிராம சேவக்குகள் தரம் I, II மற்றும் கிராம சேவிகைகள் ஆகியோருக்கான துறை சோதனை.—

(1) சோதனைக்கான புத்தகங்கள்.

(i) கிராம சேவக்குகளின் வழிகாட்டி; (A Guide Book for Gramasevaks).

(ii) கிராம சேவக்குகளின் நியதி (Manual of Village Level Workers);

(iii) சமுதாய அபிவிருத்தி நியதி [Community Development Manual (பாகம் I)];

(iv) கிராம சுய ராஜ்யம் (அஹமதாபாத் நவஜீவன் வெளியீட்டாரால் பிரசுரிக்கப்பட்டது).

(v) 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம் (விதிகளும், ஆணைகளும் தவிர்த்து).

(2) சோதனைகளைப் பற்றிய விபரங்கள்.

தயாரிக்கப்பட வேண்டிய வினாத்தாள்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு சோதனையின் கால வரை, அதிக, குறைந்த அளவு தகுதி எண்கள் ஆகியவை பின்வருமாறு:—

| புத்தகங்கள் பெயர். | வினா தாள் எண். | காலம். | மதிப்பெண். அதிக அளவு. | குறைந்த அளவு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| I. பாரா (A)-ல் கண்டுள்ள முதல் மூன்று புத்தகங்கள். | 1 | 2 மணி | 100 | 35 |
| II. கிராம சுய ராஜ்யம் (ஆங்கிலம்). | 1 | 2 மணி | 50 | 20 |
| III. 1958-ம் ஆண்டு தமிழ் நாடு பஞ்சாயத்து சட்டம் (விதிகளும் ஆணைகளும் தவிர்த்து). | 1 | 2 மணி | 100 | 35 |

பழைய திட்டத்தில் உள்ள "சமுதாய அபிவிருத்தி நியதி" (2 பாகங்கள்) "கிராம சேவக்குகளின் வழிகாட்டி" மற்றும் "கிராம சேவக்குகளின் நியதி" (Manual of Village Level Workers) ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றுள்ள ஒருவர், புதிய

திட்டத்தில் மேற்கண்ட பாரா (A) உள்ள முதல் மூன்று புத்தகங்களுக்கும் உள்ள சோதனையில் தேர்ச்சிப்பெற்றவராக கருதப்படும்.

(B) பஞ்சாயத்து அபிவிருத்தி துறையிலுள்ள அதிகாரிகளுக்கான துறை சோதனை.—

(1) சோதனைக்கான புத்தகங்கள்:—

(i) கிராம சேவக்குகளின் வழிகாட்டி;

(ii) கிராம சேவக்குகளின் நியதி;

(iii) சமுதாய அபிவிருத்தி நியதி (பாகம் I);

(iv) சமுதாய அபிவிருத்திக்கு ஒரு வழிகாட்டி; (A Guide to Community Development).

(v) கிராம சுயராஜ்யம்'

(vi) 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம்' மற்றும் அதன்கீழ் வெளியிடப்பட்டுள்ள விதிகளும் ஆணைகளும்.

(vii) இந்திய அரசியல் அமைப்புச் சட்டம், மற்றும் பல வகை சட்டங்கள் (இந்தப் பல வகை சட்டங்களில் 8 சட்டங்கள் இடம் பெறுகின்றன)

(viii) 1920-ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் மற்றும் அதன்கீழ் வெளியிடப்பட்டுள்ள விதிகளும் ஆணைகளும்.

(2) சோதனைகளைப்பற்றிய விபரங்கள்—

| புத்தகங்கள் பெயர். (1) | வினா தாள் எண். (2) | காலம். (3) | மதிப்பெண். அதிக அளவு. (4) | மதிப்பெண். குறைந்த அளவு. (5) |
|---|---|---|---|---|
| I. பாரா (B)-ல் கண்டுள்ள முதல் நான்கு புத்தகங்கள். | 1 | 2 மணி | 100 | 35 |
| II. கிராம சுயராஜ்யம். | 1 | 1½ மணி | 50 | 20 |
| III. இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் மற்றும் பலவகைச் சட்டங்கள். | 1 | 2 மணி | 100 | 35 |
| IV. 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம் மற்றும் அதன்கீழ் வெளியிடப்பட்டுள்ள விதிகள், ஆணைகள். 1920-ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் மற்றும் அதன்கீழ் வெளியிடப்பட்டுள்ள விதிகள், ஆணைகள். | 1 | 2 மணி | 100 | 35 |

பழைய திட்டத்தில் உள்ள "சமுதாய அபிவிருத்தி நியதி" (2 பாகங்கள்), "சமுதாய அபிவிருத்திக்கு ஒரு வழிகாட்டி", "கிராம சேவக்குகளின் வழிகாட்டி" மற்றும் "கிராம சேவக்குகளின் நியதி" ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றுள்ள ஒருவர், புதிய திட்டத்தில், சோதனையின் முதல் பகுதியில் தேர்ச்சி பெற்றவராக கருதப்படும்.

(C) பஞ்சாயத்து அபிவிருத்தி கணக்குச் சோதனை.

(1) சோதனைக்கான புத்தகங்கள்:—

(i) அடிப்படை விதிகள் மற்றும் துணை விதிகள் (தமிழ்நாடு விடுமுறை விதிகளையும் சேர்த்து.)

(ii) விசேட சம்பளம்' படிகளுக்கான நியதி. (பாகங்கள் I, II).

(iii) தமிழ்நாடு நிதி நியதி—அத்தியாயம் 1 முதல் 8 மற்றும் 12 முதல் 14.

(iv) தமிழ்நாடு கருவூல நியதி, புத்தகம் I—பாகம் I, பாகம் II (அத்தியாயம் III, V மற்றும் VII) மற்றும் பாகம் III (அத்தியாயம் IV).

(v) தமிழ்நாடு வரவு செலவு நியதி (Budget Manual) அத்தியாயம் 1 முதல் 5, 7, 8.

(vi) இந்திய அரசாங்க கணக்குகள், தணிக்கைக்கு ஒரு முகவுரை (An Introduction to Indian Government Accounts and Audit) அத்தியாயம் I, அத்தியாயம் 2-ல் பகுதி B, மற்றும் அத்தியாயங்கள் 10, 13, 15, 16, 17, 24, 25, 27, 28.

(vii) தமிழ்நாடு பென்சன் நியதி.

(viii) பஞ்சாயத்து யூனியன்களின் கணக்குகள் பராமரிப்புபற்றி விளக்கம் (Manual of Instructions on Maintenance of Accounts of Panchayat Unions).

(2) சோதனை பற்றிய விபரம்:—

மூன்று மணி நேரத்திற்கு ஒரே ஒரு சோதனை இருக்கும். அதிக அளவான 120 எண்ணுக்கு தகுதி எண் 45 ஆக இருக்கும்.

(4) தல நிர்வாகத் துறையின் 1952-ம் ஆண்டு நவம்பர் மாதம் 22-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2308-ல் வகுக்கப்பட்டுள்ள தல நிர்வாகப் பணி அலுவலர்களுக்கான கணக்குச் சோதனையை அரசாங்கம் எடுத்து விடுகிறது. ஆனால் மேற்கண்ட அலுவலர்கள், உத்தியோக உயர்வுபெற விரும்பினால், அவர்கள் பஞ்சாயத்து அபிவிருத்தித் துறையின் அதிகாரிகளுக்கான துறை சோதனையிலும், மற்றும் சில மாறுதலுக்குட்பட்ட பஞ்சாயத்து அபிவிருத்தி கணக்குச் சோதனையிலும் தேர்வு பெறவேண்டும்.

இந்த ஆணை வெளியாவதற்கு முன்னால், ஒருவர் கீழுள்ள அதிகாரிகளுக்கான கணக்குச் சோதனை

பாகங்கள் I, II-ல் தேர்வு பெற்றிருந்தால், அவர் பஞ்சாயத்து அபிவிருத்தி கணக்குச் சோதனையில் தேர்வு பெறவேண்டிய அவசியமில்லை.

*(5)* கிராம சேவிகைகளும், கல்வி வளர்ச்சி அதிகாரிகளும் உத்தியோக உயர்வுக்காக, இனி மேல் கிராம சேவிகைகளுக்கான துறை சோதனையில் தேர்வு பெறவேண்டும். இப்போது ஏற்படுத்தப்பட்டுள்ளதுபோல், இந்த இரண்டு வகையினரும் மாற்றியமைக்கப்பட்ட துறைகளில் சேர்க்கப்படவில்லை. ஆகவே மாற்றியமைக்கப்பட்டபடி, உத்தியோக உயர்வுக்காக இந்த இரண்டு வகையினரும் கிராம சேவக்குகளுக்கான துறைச் சோதனையில் தேர்வு பெறவேண்டும் என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

[குறிப்பு.—இவ்வாணையில் மேலும், சோதனைகள், சோதனைகளுக்கான கட்டணங்கள், சோதனைகளில்தேர்வு பெருவிட்டால் ஏற்படும் விளைவுகள் போன்றவை பற்றி விரிவாக கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாணை சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் அனுப்பட்டுள்ளது. அதில் மேலும் விவரங்களை காண்க.]

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 16-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 101-ன் சுருக்கம்.)

---

## வரிவசூல் பற்றி பரிசீலனை செய்யும் இடங்களுக்கு செல்லும் கிராம அதிகாரிகளுக்கு பயணப்படி.

## Establishment—Village Panchayats—Village Officers attending collection centres for the review of Panchayat taxes—Payment of travelling allowance—Clarification issued.

### (G.O. Ms. No. 15 R.D. and L.A. dated 2nd January 1965.)

கிராமப் பஞ்சாயத்துக்களில் அமர்த்தப்பட்டுள்ள பகுதி-நேர எழுத்தர்கள், பஞ்சாயத்துக்களில் பகுதி-நேர எழுத்து வேலை அல்லது வரி வசூல் செய்யும் கிராமக் கர்ணம் அல்லது கிராமத் தலைவர் ஆகியோர், தங்கள் பஞ்சாயத்துக்களின் அலுவல்களை முன்னிட்டு, பஞ்சாயத்து யூனியன்களின் தலைமையிடங்களுக்குப் போகவர, பஞ்சாயத்துகளின் நிதிகளிளிருந்து அவர்களுக்கு பயணப்படி அளிக்க, கிராம நல-தல நிர்வாகத் துறையின் 10—9—1963 தேதியிட்ட அரசாங்க ஆணை 1982-ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. வரி வசூல் பற்றி பரிசீலனை செய்யும் இடங்களுக்கு கிராம அதிகாரிகள் செல்வது, பஞ்சாயத்து அலுவல்களில் ஒன்றுகவே இருப்பதால், மேற்கண்ட ஆணையில் அனுமதிக்கப்பட்டுள்ள சலுகைகளை இந்தக் காரியத்திற்காகவும் விரிவுபடுத்தப்படவேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. மேற்கண்ட பாரா 1-ல் உள்ள கருத்தை அரசாங்கம் பரிசீலனை செய்தது. அதன்படி பஞ்சாயத்துக்களின் வருவாய்கள் வசூலிப்பில் உள்ள அபிவிருத்தி பற்றி, வருவாய்த்துறை அதிகாரிகளால் பரிசீலனை செய்யப்படும் இடங்களுக்கு செல்லும் கிராம அதிகாரிகளுக்கு. சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்களின் நிதிகளிலிருந்து, பயணப்படியும், தினப்படியும், கிராம நல-தல நிர்வாகத்துறையின் 10-9-1963 தேதியிட்ட அரசாங்க ஆணை 1982-ல் கண்டுள்ள விகிதப்படி அளிக்கப்படும் என்று அரசாங்கம் இப்பொழுது ஆணை பிறப்பிக்கிறது.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 2—1—1965 தேதியிட்ட அரசாங்க ஆணை 15.)

---

## தமிழ்நாடு அரசினர் கீழுள்ள பணியாளர் துறையில் உள்ள தொழில் நுட்ப பதவிகளுக்கு ஒழுங்கு முறை நடவடிக்கையில் மாற்றங்கள்.

## Public Services—Subordinate Services—Technical posts belonging to several Subordinate Services under different Heads of Departments sanctioned for work connected with Community Development Programme—Dfsciplinary Control—Applicability of Madras Civil Services (Classification, Control and Appeal) Rules—District Officers of the technical departments—Declaration as immediate superior Gazetted Officers—Orders issued in G. O. Ms. No. 2685, R.D. and L.A., dated the 21st December 1963—Amended.

### (G. O. Ms. No. 119, R.D. and L.A., dated 19th January 1965.)

தமிழ்நாடு அரசினர் சிவில் பணியாளர் துறை (பாகுபாடு, கட்டுப்பாடு, அப்பீல்) விதிகளில் [Madras Civil Services (Classification, Control and Appeal) Rules] விதி 14 (a) (1)-ல், குறிப்பிட்டுள்ள தண்டனைகளை தொழில் நுட்ப துறைகளிலுள்ள விஸ்தரிப்பு அதிகாரிகளுக்கு அளிப்பதற்கு, மாவட்ட அதிகாரிகளு

அதிகாரம் அளித்து, கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2685-ல் அரசாங்கம் ஆணைப்பிறப்பித்துள்ளது. மாவட்டத் துறை தலைவர்களின் உத்தரவுகளுக்கு மேல் மறு விசாரணை (Appeal) செய்யும் அதிகாரம் துறை தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(2) விவசாயத் துறையைப் பொருத்தவரை, மாவட்ட அதிகாரிகளுக்கு மேல், துணை விவசாய இயக்குநர் (Deputy Director of Agriculture) என்று ஒரு இடை நிலை அதிகாரி இருப்பதாகவும், மாவட்ட அதிகாரிகளின் உத்தரவுகளுக்கு மேல் ஏற்படும் மறு விசாரணை அதிகாரங்கள், இந்த துணை விவசாய இயக்குநரிடம் இருக்கவேண்டும் என்றும், அப்படி இல்லாவிடில் விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகளை, துணை விவசாய இயக்குநர் தகுந்த கட்டுப் பாட்டில் வைத்திருக்க இயலாது என்றும் சென்னை விவசாய இயக்குநர் கூறியுள்ளார். விவசாய இயக்குநர் கூறியுள்ள மேற்கண்ட கருத்தை, சென்னை, கூட்டுறவுப் பதிவாளர், சென்னை கால் நடை பராமரிப்பு இயக்குநர், சென்னை தலைமை பொறியாளர் (நெடுஞ்சாலை, கிராம வேலைகள்) ஆகியோருடன் அரசாங்கம் கலந்தாலோசித்தது. அவர்களும் விவசாய இயக்குநரின் மேற்கண்ட கருத்தை ஒப்புக் கொள்கிறார்கள்.

(3) மேற்கண்ட பாரா 2-ல் கண்டுள்ள கோரிக்கையை, அரசாங்கம் பரிசீலனை செய்து, அதன் பேரில் கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1963-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2685-ல் வெளியிடப்பட்டுள்ள உத்தரவுகள் மாற்றப்படவேண்டும் என்று கருதுகிறது. அதன்படி, அரசிதழ் பதிவு பெற்ற முதல் மேலதிகாரியின் உத்தரவுகளுக்கு மேல் ஏற்படும் மறு விசாரணை அதிகாரம் சம்பந்தப்பட்ட துறைகளிலுள்ள, அதற்கடுத்த உயர்தர அதிகாரியிடம் இருக்கும்.

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 19-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 119-ன் சுருக்கம்.)

---

## கிராமத் தொழில்கள் திட்டங்கள் நிறைவேற்றப்படுவதை கவனிக்க குழு.

## Rural Industries Project—Committee for watching implementation of schemes Orders Issued.

## (G.O. Ms. No. 24 R.D. and L.A. dated 4th January 1965.)

கிராமங்களிலும், சிறிய நகரங்களிலும் சிறு தொழில்கள் அபிவிருத்திக்கு ஊக்கம் அளிப்பதற்காக நம் மாநிலத்தில் மூன்று இடங்களில் கிராமத் தொழில்கள் திட்டங்களுக்கு, கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 4-ம்தேதியிட்ட அரசாங்க ஆணை 11-ல் அரசாங்கம் அனுமதி தந்துள்ளது. இந்த திட்டம் மத்திய அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டது. ஆகவே மத்திய அரசாங்கம், மூன்றாவது திட்டக் காலத்தில், ஒவ்வொரு திட்டத்திற்கும் 20 லட்ச ரூபாய்கள் அளிக்க ஒப்புக்கொண்டுள்ளது. இந்த மூன்று திட்டப் பகுதிகளிலும் நிறைவேற்றப்படுவதற்காக, இதுவரை சுமார் 31 திட்டங்களுக்கு ரூ. 20.86 லட்சம் வரை அரசாங்கத்தால் அனுமதி தரப்பட்டுள்ளது. மேலும் ரூ. 7 லட்சம் வரையிலுள்ள திட்டங்களுக்கு கிராமத் தொழில்கள் நிலைக் குழுவால் அங்கீகாரம் தரப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவுகள் சீக்கிரமே பிறப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இன்னும் அனேக திட்டங்கள் ஆலோசிக்கப்பட்டு அங்கீகாரம் அளிக்கப்படும். மேற்கண்ட பல்வேறான திட்டங்களில் ஏற்படக் கூடிய ஏராள செலவினங்களை முன்னிட்டு, அத் திட்டங்கள் நிறைவேற்றப்படும் விஷயங்களில் இடைவிடாத கவனம் இருந்துவருவது அவசியம் என்று கருதப்படுகிறது. மேலும் இத்திட்டங்கள் நிறைவேற்றப்படும்போது, உண்டாகும் அன்றாட பிரச்னைகளுக்கு தேர்ந்த தொழில் நுட்ப நிர்வாக அதிகாரிகளின் ஆலோசனைகளைப் பெற்று உடனடியாக தீர்வு காணவேண்டிய அவசியத்தையும் கருத்தில் கொள்ளப்படுகிறது. இவற்றுக்காக, திட்டங்களுக்கு அனுமதியளித்து, அவைகளை நிறைவேற்றுவதில் முதன்மை பெற்றுள்ள அனுபவமிக்க அதிகாரிகளைக் கொண்டுள்ள ஓர் உயர்தரக் குழுவை அமைப்பதினால், அடைய முடியும் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் இந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டு, கீழ்க்கண்ட அதிகாரிகளைக் கொண்ட ஒரு குழுவை ஏற்படுத்தி, ஆணைப் பிறப்பிக்கிறது :—

(1) அரசாங்க காரியதரிசி, கிராம நல-தல நிர்வாகத்துறை.

(2) தொழில், வணிக இயக்குநர், சென்னை.

(3) காரியதரிசி, சென்னை மாநில கதர், கிராமத் தொழில்கள் போர்டு.

(4) காரியதரிசி, கிராமத் தொழில்கள் திட்ட மாநிலக் குழு.

இக்குழு, அவசியம் எனக் கருதும்போது, அப்போதைக்கப்போது அங்கத்தினர்களை சேர்த்துக் கொள்ள தகுதியை பெற்றிருக்கும். இக்குழு ''கிராமத் தொழில்கள் திட்டங்களை நிறைவேற்றும் குழு'' (Rural Industries Projects Implementation Committee) என அழைக்கப்படும்.

இக்குழு, நிலைக்குழுவிற்கும், கிராமத் தொழில்கள் திட்ட மாநிலக் குழுவிற்கும் ஒரு நிர்வாகப் பகுதியாக பணியாற்றும் என்பதுடன், முக்கியமாக கீழ்க்கண்ட கடமைகளில் அது தன் கவனத்தை செலுத்தும் என்றும் அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

(a) திட்டப்பகுதிகளில் நடைபெறும் வேலைகளின் முன்னேற்றத்தைப்பற்றி பரிசீலனை செய்தல் மற்றும் முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தி, நல்ல பயனை அடைய தகுந்த வழி முறைகளைப்பற்றி கருத்துத் தெரிவித்தல்.

(b) திட்டப் பகுதிகளில் எடுத்துக்கொள்ளப் படவேண்டிய திட்டங்களின் விதம், தன்மை ஆகியவற்றைபற்றி கருத்துத் தெரிவித்தல்.

(c) திட்டங்களை நிறைவேற்றும்போது திட்ட அலுவலர்கள் கடைபிடிக்க வேண்டியவைபற்றி வழிகாட்டுதல்.

தேவை எழும்போதெல்லாம், இக்கமிட்டி கூடும். அவசியமிருப்பின் திட்டப் பகுதிகளிலும் இது கூடும்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 4-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 24)

---

## பூதானப் பகுதிகளில் உள்ள கூட்டுறவு சங்கங்களுக்கு பொருளாதார உதவி.

## Bhoodan—Financial assistance to Co-operatives in the Bhoodan areas—Terms and Conditions governing the grant of loans and subsidies—Proposal of the Registrar of Co-operative Societies—Approved with modifications.)

### (G. O. Ms. No. 74, R. D. and L. A., dated 8th January 1965)

1964-65-ம் ஆண்டில், சென்னை மாநிலத்தின் பூதானப் பகுதிகளிலுள்ள கூட்டுறவு சங்கங்களுக்கு பொருளாதார உதவியளிக்க மத்திய அரசாங்கம் ஒரு விசேஷ திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. பூதானப் பகுதிகளிலுள்ள கூட்டுறவு சங்கங்களுக்குப் பொருளாதார உதவியளிக்க ஒரு திட்டத்தைகிராம-நலநிர்வாகத்துறையின் 26—3—1964 தேதியிட்ட அரசாங்க ஆணை 751-ல் மாநில அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது. மேலும் பூதானப் பகுதிகளிலுள்ள கூட்டுறவு சங்கங்களுக்கு நிதி உதவியளிப்பதற்காக மத்திய அரசாங்கத்தால் அதன் உதவியாக அளிக்கப்பட்ட ரூ. 1,40,720-க்கு (ரூபாய் ஒரு லட்சத்து நாற்பதாயிரத்து, எழுநூற்று இருபது மட்டும்) வரம்புகளும், விதிகளும் ஏற்படுத்தி கிராம நல-தல நிர்வாகத்துறையின் 14—5—1964 தேதியிட்ட அரசாங்க ஆணை 1122-ல் அந்தக்கடன் தொகை 1964—65-ம் ஆண்டிற்கு மறுபடியும் செல்லத்தக்கதாய், மாநில அரசாங்கம் ஆக்கியுள்ளது. இவ்வாறு மத்திய அரசாங்கத்தால் அனுமதிக்கப் பட்டுள்ள இந்த கடன் தொகைக்கு 5 சதவீத வட்டி உண்டென்றும், இந்த கடன் தொகையும் அதனுடன் சேர்ந்த வட்டியும் சேர்த்து மொத்த தொகை பதினைந்து சமமான ஆண்டுத் தவணைகளில் திருப்பி செலுத்தப்பட வேண்டும், என்றும் மத்திய அரசாங்கம் வறையறுத்துள்ளது. இக்கடனின் முதல் தவணையானது. இக்கடனை வாங்கிய முதல் ஆண்டு முடிவுத்தினத்தில், வட்டியும் சேர்த்து, திருப்பி அளிக்கப்பட வேண்டும். காலம் தவறிய தவணைகளின்மீது 7 சதவீத அதிக வட்டி விதிக்கப்படும்.

2. பூதானப் பகுதிகளிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவியளிக்கையில் கீழ்க்கண்ட நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

3. கூட்டுறவுச் சங்கங்களுக்கு அடுத்த 6 மாதங்களுக்கு வேண்டிய நிதி உதவியை கருத்தில் கொண்டு, மதுரை விசேஷ துணைப்பதிவாளர் (கிராம தானம்) வேண்டிய பணத்தைப் பெற்று அதை மதுரை மாவட்டகூட்டுறவுமத்திய பாங்கின் நடப்புக் கணக்கில் வைத்திருப்பார். மதுரையைத் தவிர மற்றமாவட்டங்களில் உள்ள சங்கங்கள், தங்களுடைய கடன் விண்ணப்பங்களைத் தயாரித்து, அவைகளை சம்பந்தப்பட்ட வட்டார துணைப்பதிவாளர்களுக்கு அனுப்ப வேண்டும். இவர்கள் இவ்விண்ணப்பங்களைப் பரிசிலனை செய்து' தங்கள் சிபாரிசுகளுடன் அவைகளை மதுரை விசேஷ துணைப்பதிவாளருக்கு (கிராம தானம்) அனுப்ப வேண்டும். அவர் தேவையான அளவு நிதி உதவிக்காக, உண்டியல்களை மதுரை மாவட்ட கூட்டுறவு மத்திய பாங்கிற்கு, சங்கங்களின் பெயர்களில் எழுதி, அவைகளைச் சம்பந்தப்பட்ட வட்டார துணைப்பதிவாளருக்கு அறிவித்தபின்' கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுப்பி வைப்பார். கூட்டுறவுச் சங்கங்கள், சம்பந்தப்பட்ட மத்திய பாங்குகளிலிருந்து உண்டியல்களுக்கான பணத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். சம்பந்தப்பட்ட வட்டார துணைப் பதிவாளர்களே கடன்களை வசூலிக்க பொறுப்பாளியாவார்கள். கடன்கள் திருப்பி செலுத்தப்படும் போது, அது பற்றிய விஷயம், மதுரை விசேஷ துணைப் பதிவாளருக்கு (கிராம தானம்) அறிவிக்கப்படவேண்டும்.

4. கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1964-ம் ஆண்டு மார்ச் மாதம் 26-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 751-ன் இணைப்பு 1-ல் விவரிக்கப் பட்டுள்ள (பூதான நிலங்கள் ஒருங்கே அமைந் துள்ள) 8 வட்டாரங்களில் உள்ள கூட்டுறவு சங் கங்களுக்கு நிதி உதவி அளிப்பதற்கான விதிகளும், வரம்புகளும், இவ்வாணையின் பிற்சேர்க்கை 1-ல் கண்டுள்ளவாறு இருக்கும். அரசாங்கத்திடமிருந்து கடன்களைப் பெறும்போது (1) கூட்டுறவு சங்கங் களால் செய்யப்படக்கூடிய உடன்படிக்கையின் படிவம், (2) பூதான பகுதிகளில் அமைக்கப்பட் டுள்ள கூட்டுறவுச் சங்கங்கள், மின்சார பம்பு செட்டுகள் வாங்கி, அவைகளை அமைக்க, அரசாங் கத்திடம் கடனுக்காக செய்துகொள்ளவேண்டிய உடன்படிக்கையின் படிவம், (3) அங்கத்தினர்கள் சங்கங்களுக்குச் செய்யக்கூடிய அடமான பத்திரத் தின் படிவம், மற்றும் (4) பூதான நிலங்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்கள், அவற்றின் அங்கத்தினர்களிடமிருந்து பெறவேண் டிய உடன்படிக்கையின் படிவம் ஆகியவை, இவ் வாணையின் பிற்சேர்க்கை II-ல் கொடுக்கப்பட்டுள் ளன.

இந்த 8 பூதான சேவைக் கூட்டுறவு சங்கங்களுக் கும், மறு தீர்வுத் தொகையை (Resettlement Charges) ஒட்டி அளிக்கப்படக்கூடிய கடன், உதவித் தொகை கள் ஆகியவைபற்றி, கூட்டுறவு பதிவாளரால் அளிக்கப்பட்டுள்ள விபரங்கள், இவ்வாணையின் பிற் சேர்க்கை III-ல் கொடுக்கப்பட்டுள்ளன. ஆகவே, இத்தொகைகள் வரையறுக்கப்பட்டுள்ள நடை முறைகளைப்பின்பற்றி, இவ்வாணையில் அடங்கியுள்ள விளக்கங்களுக்கு ஏற்ப, அளிக்கப்படவேண்டும்.

## பிற்சேர்க்கை I

**பூதான நிலங்களுக்காக அமைக்கப்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி அளிப்பதை பொருத்து விதிகளும் வரம்புகளும்.**

1. பூதான நிலங்களுக்காக அமைக்கப்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசாங்கத்தின் நிதி உதவி, கீழ்க்கண்டவற்றில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட காரியங்களுக்காக கிடைக்கும்:

1. நிலங்களைப் பயிர் செய்யத் தகுதியாக்குதல்:

2. கிணறுகள் வெட்டுதல், அல்லது ஆழப்படுத்து தல் அல்லது நீர்ப்பாசன வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

3. பம்பு செட்டுகள் அமைத்தல்.

4. உழவிற்கு ஏற்ற எருதுகள், வண்டிகள் வாங்கு தல்.

5. விவசாயக் கருவிகள் வாங்குதல்.

6. விதைகள், உரங்கள் வாங்குதல்.

7. கால்நடை தங்குமிடங்கள், கிடங்குகள் கட்டுதல்.

8. மேற்கண்ட காரியங்களுக்காக, அரசாங்கத் தின் உதவியை நாடும் சங்கங்கள், முதன்முதலாக அரசாங்கத்திற்கு, அதற்காக ஏற்படுத்தப்பட்ட படிவத்தில் ஒரு ஒப்பந்தம் செய்துதர வேண்டும்.

3. மேற்கண்ட ஒவ்வொரு இனத்திற்கும் ஏற் படும் செலவும், அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகைக்குள் இருக்கவேண்டும். எந்த இனத்தி லாவது அதிகப்படி செலவினங்கள் ஏற்படின், அவைகள் சங்கத்தின் மூலதனத்திலிருந்து பெறப் படவேண்டும்.

4. அரசாங்கத்தால் அப்போதைக்கப்போது ஏற்படுத்தப்படும் வரம்புகளுக்கும், விதிகளுக்கும் உட்பட்டு நடப்பதாக, சங்கங்கள் எழுத்துமூலம் ஒப்புக்கொள்ளவேண்டும்.

5. சங்கத்திற்கு அளிக்கப்பட்ட எந்தத் தொகையும், அது அளிக்கப்பட்ட ஆறுமாத காலத் திற்குமேல், பயன்படுத்தப்படாமல் இருப்பின், அந்தத் தொகை அரசாங்கத்திற்கு திருப்பிச் செலுத்தப்படவேண்டும். தகுதியான இடங்களில், போதுமான காரணங்கள் இருப்பின், தொகை யைப் பயன்படுத்திக்கொள்ள கூடுதலான காலத்தை, கூட்டுறவுப் பதிவாளர் அளிக்கலாம்.

[குறிப்பு:—மேற்கண்ட 7 இனங்களில் ஒவ்வொன் றுக்கும் அளிக்கப்படும் நிதி உதவியின் வரம்புகள் பற்றி பாரா 6-ல் விபரமாகக் கூறப்பட்டுள்ளன; அவற்றில் மேலும் விவரங்களைக் காண்க.]

## பிற்சேர்க்கை II

இதில் இவ்வாணையின் 4-ம் பாராவில் கூறப்பட் டுள்ள ஒப்பந்தங்களின் படிவங்கள் உள்ளன; அவைகளை இவ்வாணையில் காணலாம்.

## பிற்சேர்க்கை III

8 பூதான சேவைக் கூட்டுறவு சங்கங்களுக்கும், மறுதீர்வுத் தொகைகளை (Resettlement Charges) ஒட்டி அளிக்கப்படக்கூடிய கடன், உதவித் தொகைகள் ஆகியவை பற்றிய விபரம்.

| வரிசை எண். (1) | சங்கத்தின் பெயர். (2) | மறுதீர்வுத் தொகைகள். கடன். (3) ரூ. | உதவித் தொகை. (4) ரூ. | கூடுதல். (5) ரூ. |
|---|---|---|---|---|
| 1. | மகரல் பூதான சேவைக்கூட்டுறவுச் சங்கம் | 8,100 | 2,700 | 10,800 |
| 2. | வடுகப்பட்டி பூதான சேவைக் கூட்டுறவுச் சங்கம் | 20,475 | 6,825 | 27,300 |
| 3. | கொழுமம் பூதான சேவைக் கூட்டுறவுச் சங்கம் | 9,675 | 3,225 | 12,900 |
| 4. | விளத்தூர் பூதான சேவைக் கூட்டுறவுச் சங்கம் | 6,375 | 2,125 | 8,500 |
| 5. | உச்சப்பட்டி பூதான சேவைக் கூட்டுறவுச் சங்கம் | 4,950 | 1,650 | 6,600 |
| 6. | செட்டிபுழம் பூதான சேவைக் கூட்டுறவுச் சங்கம் | 9,975 | 3,325 | 13,300 |
| 7. | கல்காரை பூதான சேவைக் கூட்டுறவுச் சங்கம் | 7,125 | 2,375 | 9,500 |
| 8. | ஏழுவாரிமுக்கி பூதான சேவைக் கூட்டுறவுச் சங்கம் | 6,750 | 2,250 | 9,000 |
| | | 73,425 | 24,475 | 97,900 |

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 74-ன் சுருக்கம்.)

---

## மதிய உணவுத் திட்டத்திற்கான படிவங்களும் பதிவேடுகளும் அச்சிடுவதற்கான அனுமதி.

## Education—Elementary—Midday Meals Scheme—Forms and Registers—Permission to print forms and registers locally and supply to the Midday Meals Centre—Orders —Issued.

### (G. O. Ms. No. 2622, R. D. and L. A., dated 16th December 1964.)

மதிய உணவு அளிக்கும் நிலையங்களின் கணக்குகள் 1964-65 பள்ளிக்கூட ஆண்டு முதல் தணிக்கை செய்யப்படுவதற்கான ஒரு முறையை அரசாங்கம் உருவாக்கி, அதற்கேற்ப அக்கணக்குகள் சரிவர எழுதப்படுவதற்கு சில படிவங்களையும் (Forms) பதிவேடுகளையும் அரசாங்கம் வரையறுத்துள்ளது.

2. இப்படிவங்களையும், பதிவேடுகளையும் பஞ்சாயத்து யூனியன்கள் செலவிலேயே மாவட்ட ஆட்சித் தலைவர்கள், ஒன்றாக சேர்த்தாவது அல்லது பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்களே தங்களுக்குள் அச்சடித்துக்கொள்வதைப் பொருத்து அரசாங்க உத்தரவை தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் வேண்டியிருக்கிறார்.

3. அரசாங்கம் கல்வித்துறை இயக்குநருடன் ஆலோசனை செய்தது. அவர் இந்த பதிவேடுகள் அநேக இடங்களில் உள்ளூரிலேயே அச்சிடப்பட்டுவிட்டது என்றும், அவைகள் சென்னையில்தான் அச்சிடப்படவேண்டுமென்று வலியுறுத்தப்படவேண்டுமா என்றும் கேட்டுள்ளார்.

4. மதிய உணவு நிலையங்களின் சரியான தேவைகளை அறிந்துகொண்டபின், இந்த படிவங்களையும், பதிவேடுகளையும் உள்ளூரிலேயே அச்சிட்டு, அவர்கள் வரம்பிலுள்ள நிலையங்களுக்கு இலவசமாக வினியோகிக்க, பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்களுக்கு அனுமதியளிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

5. இந்த படிவங்களையும் பதிவேடுகளையும் அச்சிட்டு எல்லா மதிய உணவு அளிக்கும் நிலையங்களுக்கும் வினியோகிக்க ஏற்படும் செலவுகளை பஞ்சாயத்து யூனியன் பொது நிதியிலிருந்து செய்ய வேண்டும்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1964-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 16-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2622-ன் சுருக்கம்)

## கிராமத்தொண்டர்படை பாதுகாப்பு உழைப்பு பாங்கின் நிதி அன்பளிப்பு சேமித்துவைக்கப் படுவது குறித்து விளக்கம்.

## National Emergency—Village Volunteer Force Scheme—Implementation of—Cash Donations of the Defence Labour Bank—Remittance of—Instruction issued.

### (Memorandum No. 48150 R.D. and L.A., dated 12th January 1965.)

பாதுகாப்பு உழைப்பு பாங்கின் நிதி அன்பளிப்புகள், தலைமை தொண்டரின் பெயரில், அஞ்சல் அலுவலக சேமிபபு கணக்கில் சேமித்து வைக்கப் பட்டு, அவர்களால் நிர்வகிக்கப்படலாம் என்று சேலத்தில் 1963-ம் ஆண்டு ஜூலை மாதம் 20, 21 தேதிகளில் நடைபெற்ற, சேலம் மாவட்ட கிராம சேவக்குகள் கூட்டத்தில் அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. சில மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் மேற்கண்ட கருத்து கலந்தாலோசிக்கப்பட்டது.

(2) இந்த பாதுகாப்பு உழைப்பு பாங்கின் நிதி அன்பளிப்பு, அஞ்சல் அலுவலக சேமிப்பு கணக்கில் பஞ்சாயத்துத் தலைவர்கள்/நிர்வாக அதிகாரிகள் பெயர்களில் சேமித்துவைக்கப்பட வேண்டும் என்றும், அந்தத் தொகைகள் கிராமத்தொண்டர் படையினரால் எடுத்துக்கொள்ளப்படக்கூடிய வேலைகளுக்கு பயன்படுத்தப்படவேண்டும் என்றும் அரசாங்கம் ஆணைப் பிறப்பிக்கிறது. சம்பந்தப் பட்ட பஞ்சாயத்து யூனியனின் பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரிகள் இக் கணக்குகளை ஆண்டு தோறும் தணிக்கை செய்யவேண்டும் என்றும், தணிக்கைக் கேள்விப் பட்டியலில் இந்த அலுவலையும் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்றும் அவர்களுக்கு உத்தரவு இடப்படுகிறது.

(கிராம நல தல நிர்வாகத்துறையின் 12—1—1965 தேதியிட்ட அரசாங்க அறிக்கை 48150.)

---

## மாவட்ட கழக அலுவலர்களின் அப்பீல்கள்மீது உத்தரவுகள் பிறப்பிக்க கூட்டு அபிவிருத்திக் கமிஷனர் "மேல் விசாரணை அதிகாரி"யாக நியமனம்.

## Establishment—Defunct District Boards—Appeals against punishment imposed by the Presidents and Special Officers of District Boards—Joint Development Commissioner—Designation as "Appellate Authority"—Ordered.

### (G.O. Ms. No. 1869, R. D. and L. A., dated 11th September 1964.)

மாவட்டக் கழகங்கள் (District Boards) 1961-ம் ஆண்டில் ஒழிக்கப்பட்டன. அப்போது மாவட்டக் கழகத் தலைவர்கள், விசேஷ அதிகாரிகள் ஆகியவர்களால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளை எதிர்த்து ஏராளமான அப்பீல்கள் முடிவடையாமலிருந்தன. இதற்காக, தல ஆட்சித்துறை ஆய்வாளர் (Inspector of Municipal Councils and Local Boards) "மேல் விசாரணை அதிகாரி"யாக (Appellate Authority) இருந்தார். இந்த தல ஆட்சித் துறை ஆய்வாளர் பதவி 1962-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6-ம் தேதி முதல் எடுக்கப்பட்டுவிட்டது. ஆகவே, முடிவடையாது இருந்த அப்பீல்கள்மீது, யார் உத்தரவுகளை பிறப்பிப்பது என்ற பிரச்சினை ஆராயப் பட்டது. அதன்பேரில், பஞ்சாயத்து யூனியன் அலுவலர்களுக்கு மேல் விசாரணை அதிகாரியாக ஆக்கப்பட்டுள்ள கூட்டு அபிவிருத்திக் கமிஷனரே, (இப்போது நடைமுறையிலில்லாத) மாவட்டக் கழகத் தலைவர்கள், விசேஷ அதிகாரிகள் ஆகியவர்களின் ஆணைகளின்பேரில், முந்தைய கழக அலுவலர்கள் அப்பீல் செய்துக்கொள்ள "மேல் விசாரணை அதிகாரி"யாக ஆக்கப்பட்டு விடலாம் என்று அரசாங்கம் கருதுகிறது. ஆகவே, முந்தைய மாவட்டக் கழக அலுவலர்களால் அப்பீல் செய்துக்கொள்ளப்பட்டு, முந்தைய சென்னை தல ஆட்சித் துறை ஆய்வாளரிடம் முடிவடையாமலிருந்த ஒழுங்கு நடவடிக்கைகளின் பேரில் முடிவு செய்யும் அதிகாரங்களை, கூட்டு அபிவிருத்திக் கமிஷனரிடம் அளித்து அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1964-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 1869-ன் சுருக்கம்.)

---

**1888-ம் ஆண்டு தமிழ்நாடு பொதுமக்கள் நாடும் பொழுதுபோக்கு இடங்கள் சட்டத்தின் 12-A பிரிவு பஞ்சாயத்துக்களுக்கு விரிவுபடுத்தப் படுகிறது.**

## Act—Madras Places of Public Resort Act 1888—Extension of section 12-A of the Act to Panchayat areas—Notified.

**(G. O. Ms. No. 2711, R. D., and L.A., dated 22nd December 1964.)**

1888-ம் ஆண்டு, தமிழ்நாடு பொது மக்கள் நாடும் பொழுதுபோக்கு இடங்கள் சட்டத்தின் எல்லா அம்சங்களும் சில பஞ்சாயத்துக்களுக்கு அப்போதைக்கப்போது விரிவு படுத்தப்பட்டுள்ளன. இப்போது, எல்லா பஞ்சாயத்துக்களிலும் சினிமா கொட்டகைகள் மற்றும் இதைப்போன்ற கேளிக்கைகள் நடைபெறும் இடங்களில் புகைபிடிப்பதை சரியானபடி கட்டுப்படுத்த, இச்சட்டத்தின் 12-A பிரிவு, இச்சட்டம் அமுலில் இல்லாத, எஞ்சியுள்ள பஞ்சாயத்துக்களுக்கும் விரிவு படுத்தப்படவேண்டும் என்றும் அரசாங்கம் கருதுகிறது.

2. கீழ்க்கண்ட அறிவிப்பு செயிண்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழில் பிரசுரமாகும்.

### முக்கிய அறிவிப்பு

**பஞ்சாயத்து தலைவர் தேர்தல் ஒத்திவைப்பு**

மாநிலத்தில் தற்போது உள்ள சட்ட, ஒழுங்கு சம்பந்தமான அசாதாரணமான நிலைமையை யொட்டி, 1965 பிப்ரவரி 12, 13, 14 ஆகிய தேதிகளில் நடைபெறவிருக்கும் பஞ்சாயத்துத் தலைவர்கள் தேர்தல்களை, 1965 மார்ச் 29, 30, 31, தேதிகளுக்கு ஒத்திவைத்து, அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது.

**அறிவிப்பு**

1888-ம் ஆண்டு தமிழ்நாடு பொதுமக்கள் நாடும் பொழுதுபோக்கு இடங்கள் சட்டத்தின் (1888-ம் ஆண்டின் தமிழ்நாடு சட்டம் 2) 1-வது பிரிவைச் சேர்ந்த 2 உட்பிரிவின் (b) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு கவர்னர் அவர்கள், மேற்சொன்ன சட்டத்தின் 12-A பிரிவை, மேற்சொன்ன பிரிவு, முன்னமே விரிவுப்படுத்தப்படாத, தமிழ்நாட்டிலுள்ள ஊராட்சிகளின் விசாரணை வரம்பிற்குள் அமைந்த உள்ளூர் பகுதிளுக்கு, இதனால் விரிவுபடுத்துகிறார்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1964-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 22-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2711.)

---

## இந்த இதழில் . . .


| | பக்கம் |
|---|---|
| ராஷ்டிரபதியின் குடியரசு தினச் செய்தி .. | 2 |
| ஜவஹர்லால் நேருவும் சோஷிலிசமும் .. | 7 |
| இரு பங்காளிகள் .. | 13 |
| இந்தியாவில் சமூகப் பாகாப்பு .. | 17 |
| முட்டைகளைப் பாதுகாக்கும் முறைகள் .. | 19 |
| குறையும் நிறையும் .. | 25 |


## அடுத்த இதழில் . . .

வரவு செலவுத் திட்டம் தயாரித்தல்—விளக்கக் கட்டுரை.

நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அடிப்படை விஷயங்கள்.

விடுதலைக்கு வித்திட்ட வீரர்கள்—தேசபந்து சித்தரஞ்சன தாஸ்.

கிராமத் தொழில் வளர்ச்சித் திட்டம்—நாங்குனேரி.


மற்றும் புதிய அம்சங்கள்.


---


**வெளியிடுபவர்:**
திரு என். அனந்தபத்மநாபன், ஐ. ஏ. எஸ்.

**ஆசிரியர்:**
திரு எஸ். வேங்கடசாமி, எம். ஏ.

Printed by the Director of Stationery and Printing, Madras. on behalf of the Government of Madras, Edited by the Public Relations Officer and published by the Secretary, Rural Development and Local Administration Department, Government of Madras. Wrapper printed at Screen Designs, Madras-2.





1. குழந்தைகள் போக்குவரத்த பயிற்சிப் பூங்காவை, சென்
யில், போலீஸ் டெபுடி கமிஷன
அலுவலகத்தில், தமிழ்நா
கவர்னர் திரு. சந்திரா ரெட்
18—1—65 இல், ஆரம்பித்
வைத்தார்.

2. பொங்கல் தினத்தில் (14-1-6
சென்னையில், இந்தியாவி
உணவு கார்ப்பரேஷனை மத்த
உணவு அமைச்சர் திரு.
சுப்பிரமணியம் ஆரம்பித்
வைத்தார்.



3. உத்தரப்பிரதேச முதலமைச்சர் திருமதி சுசேதா கிருபளானிக்கு சென்னையில் வரவேற்பு.

WRAPPER PRINTED BY SCREEN DESIGNS, MADRAS-2

REGD. NO. M. 7277
© தமிழ்நாடு அரசாங்கம் 1965

